# சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 – 2023

### மானியக் கோரிக்கை எண்.45


## திருமதி. பி.கீதா ஜீவன்

சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர்



©



தமிழ்நாடு அரசு

2022

## பொருளடக்கம்


| வ. எண் | அத்தியாயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1–20 |
| 2 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை | 21–122 |
| 3 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 123–145 |
| 4 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் | 146–199 |
| 5 | சமூகப் பாதுகாப்பு | 200–265 |
| 6 | நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் | 266–285 |
| 7 | சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள் | 286–295 |
| 8 | இணைப்பு– 1 | 296 |
| 9 | இணைப்பு– 2 | 297–299 |

**மானிய கோரிக்கை எண் – 45**

# சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2022–2023

**அத்தியாயம்– 1**

## முன்னுரை

கல்வியில்லாத பெண்கள்
 களர் நிலம்; அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம்; நல்ல
 புதல்வர்கள் விளைதல் இல்லை!
கல்வியை உடைய பெண்கள்
 திருந்திய கழனி, அங்கே
நல்லறிவு உடைய மக்கள்
 விளைவது நவிலவோ நான்

**– புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்**

"பெண்களின் வளர்ச்சிக்கு அதிகாரமளித்தலை தவிர எந்த பயனுள்ள சாதனமும் இல்லை".

**– கோப்பி அனான்**
**முன்னாள் பொதுச் செயலாளர்,**
**ஐக்கிய நாடுகள் அமைப்பு**

பெண்கள் தங்களது சுயமதிப்பினை உணருதல், சொந்த விருப்பங்களைத் தேர்வு செய்யும் திறன், தங்களுக்கு மற்றும் பிறருக்கான சமூக மாற்றத்தினை மேற்கொள்ளும் உரிமை போன்றவற்றை அதிகாரமளித்தல் ஊக்கப்படுத்துகிறது. பெண்கள் தங்களுக்காகவும் பிற பெண்களின் சமத்துவத்திற்காகவும் துணை நிற்பதாலும் அதிகாரம் அடைகின்றனர். பெண்கள் பாதுகாப்பான, நிறைவான மற்றும் ஆக்கப்பூர்வமான வாழ்க்கையை மேற்கொள்ளும் போது, அவர்கள் தங்கள் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி உழைக்கும் மகளிராக திகழ்வதோடு மட்டுமல்லாமல் மகிழ்ச்சியான மற்றும் ஆரோக்கியமான குழந்தைகளையும் உருவாக்குகின்றனர். நாட்டின் பொருளாதார வளர்ச்சி, நிலையான அரசியல் மற்றும் சமூக மாற்றம் போன்றவை பெண்களுக்கு அதிகாரமளிப்பதினால் ஏற்படுகிறது. பெண்கள் ஒவ்வொரு நாளும் பல்வேறு நிலைகளில் அவர்தம் பணிகளைச் சிறப்புடன்



மேற்கொள்வதால் சமூகத்தின் முதுகெலும்பாக கருதப்படுகின்றனர்.

பாலின அடிப்படையில் எந்த பாகுபாடும் இல்லாத நிலையை இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுதி செய்கிறது. பெண்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளிப்பதற்காக பல்வேறு சட்ட வழிவகைகள் அரசியலமைப்பில் வரையறை செய்யப்பட்டுள்ளன. இந்திய அரசியலமைப்பானது, பெண்களுக்கான சமத்துவத்தை வழங்குவது மட்டுமல்லாமல், சமூக, பொருளாதார, கல்வி மற்றும் அரசியல் போன்றவற்றில் அவர்கள் பல காலமாக எதிர்கொள்ளும் பாகுபாடுகளை சமன்செய்து, அவர்களுக்கான நேர்மறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்கின்றது.

இந்திய அரசியலமைப்பு சட்டம், அடிப்படை உரிமைகளான சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்பதையும், அனைவரின் சமமான பாதுகாப்பையும்

உறுதி செய்கின்றது. எந்தவொரு குடிமகனையும் மதம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவதைத் தடுக்கிறது மற்றும் அவர்களின் வேலைவாய்ப்பு தொடர்பான நிகழ்வுகளில் சமவாய்ப்புக்கான உறுதியினை அளிக்கிறது.

இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள்– கற்பழிப்பு (பிரிவு 376), ஆள்கடத்தல் மற்றும் வெவ்வேறு நோக்கங்களுக்காக ஆள்கடத்துதல், (பிரிவுகள் 363–373), வரதட்சணை கொடுமை செய்து கொலைசெய்தல், (பிரிவு 498–ஏ) பாலியல் வன் கொடுமை (பிரிவு354) மற்றும் பாலியல் துன்புறுத்தல் (பிரிவு 509) பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்களிலிருந்து பாதுகாப்பை வழங்குகின்றன.

மேலும், ஒழுக்க நெறிபிறழ்தல் தடுப்புச்சட்டம் 1956, வரதட்சணை தடுப்புச்சட்டம் 1961, சமஊதியம் வழங்கும் சட்டம் 1976, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005, குழந்தை



திருமண தடுப்புச் சட்டம் 2006, மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் 2007, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (POCSO) 2012 மற்றும் பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2013, போன்றவை குழந்தைகள், பெண்கள் மற்றும் மூத்த குடிமக்களின் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட சில சட்டங்கள் ஆகும்.

சமூக நீதி, சமூக சமத்துவம் ஆகியன அனைத்து பிரிவினரையும் சென்றடையும் விதத்தில் செயல்படும் இவ்வரசின் ஆளுமை, நலிவுற்ற, சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட கல்வி அல்லாத பெண்கள், பாதுகாப்பு மற்றும் தொடர் கவனம் தேவைப்படும் குழந்தைகள், ஆரோக்கியமான சூழல், ஊட்டச்சத்து மற்றும் மறுவாழ்வு தேவைப்படும் முதியோர், கரிசனையுடன் கூடிய சமூகப் பாதுகாப்பு தேவைப்படும் திருநங்கையர் ஆகியோரின் நலனை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. வளர்ச்சி

மற்றும் முன்னேற்றப் பாதையில் ஒருவரும் விடுபடாத வண்ணம் செயல்படுத்துவதற்கு இவ்வரசு தன் முழு முயற்சிகளை எடுத்து வருகிறது.

இவ்வரசு பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள் மற்றும் திருநங்கையர் ஆகியோருக்கான கொள்கைகளை வகுத்து திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. குழந்தைகளின் ஆரோக்கியம், நல்வாழ்வை மேம்படுத்துதல், உரிய வயதில் திருமணம் செய்தல் மற்றும் குறைவான குழந்தைகளைப் பெற்றெடுத்தல் போன்றவற்றை பெண்களே தேர்ந்தெடுக்கும் உரிமையை கல்வி மட்டுமே வழங்குகிறது. கல்வியானது பெண்களின் உரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு அவர்களின் சுயமரியாதையை அதிகரிக்கவும், உரிமைகளை நிலைநாட்டுவதற்கான வாய்ப்புகளையும் அளிக்கிறது.

கல்வியானது, பெண்களுக்கான சட்டம் மற்றும் அவர்களின் தனிப்பட்ட உரிமைகளைப் பற்றி விரிவாக



தெரிந்துகொள்வதற்கும், அவர்கள் தங்களது உரிமைகளுக்காக போராடவும் உதவி புரிகிறது. மேலும், அரசியலமைப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்களின் உரிமைகளைப் பெறுவதற்கும் வழிகாட்டும். பாரம்பரிய வாழ்க்கை முறையினால் ஏற்படும் நெருக்கடியான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் பெண்களுக்கான விடியல், கல்வியாகும். இது தவிர, கல்வியானது பாரம்பரியத்தால் கட்டமைக்கப்பட்ட தடைகளை உடைத்தெறியும் வடிகாலாகவும் உள்ளது. ஒரு நிறைவான கல்வி என்பது, பெண்களின் தாய்மையை விட மேலானது ஆகும்.

பெண்களுக்கு உயர்கல்வி அளித்தல் தற்போது, காலத்தின் கட்டாயமாகும். இவ்வரசின் உயர்ந்த நோக்கம் பெண்களுக்கு உயர்கல்வி அளித்து ஒரு சமூக மாற்றத்தினை கொண்டு வர வேண்டும் என்பதாகும். எனவேதான் தற்போதுள்ள **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி**

**உதவித் திட்டத்தை, "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டமாக" இவ்வரசு மாற்றியுள்ளது.**

2022–2023–ஆம் கல்வியாண்டில் 6–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளுக்கு உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்பினை உருவாக்கி மேற்படிப்பை தொடர்ந்து படித்து பயனடையும் நோக்கில் மாதம் ரூ.1000/– வழங்கப்படவுள்ளது. இத்திட்டம் பெண் குழந்தைகளின் உயர்கல்வியை ஊக்கப்படுத்துவதற்கான ஒரு முன்னோடித் திட்டம் என்பது மட்டுமல்லாமல் அரசு பள்ளிகளில் பயிலும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க செய்யும். மேலும், இதனால் நல்லறிவு பெற்ற திறனுள்ள சமுதாயம் இந்நாட்டில் உருவாகும்.

பெண்கள் பணியிடங்களுக்கு செல்வதற்கும், உயர்கல்விக்காகவும் பயணம் மேற்கொள்வது மற்றும் அவர்கள் பொது இடங்களுக்கு எளிதாக சென்று



வருவதை உறுதி செய்வது போன்றவை வளர்ச்சியை நோக்கி செல்லும் ஒரு மாநிலத்தின் மிகப்பெரிய சவாலாகும். கல்வியறிவில் தன்னிறைவு பெற்ற மாநிலமாகவும், அதிக சேர்க்கை விகிதம் மற்றும் திறன் பெற்ற மனித ஆற்றலை உடைய மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்வதால், கல்லூரிக்கு செல்லும் மாணவிகள், பணிபுரியும் மகளிர் மற்றும் திருநங்கைகள் போன்றோர் **அரசு பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்ளும்** புரட்சிகரமான ஒரு முன்னோடி திட்டம் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டது. இதனால் மொத்த உழைக்கும் தொழிலாளர்களில் பெண்களின் பங்களிப்பு தொடர்ந்து உயர்வடையும். மேற்கண்ட பயனாளிகள் இச்சலுகையைப் பயன்படுத்தி சுமார் 91.85 கோடி பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

மாநில அரசானது மக்கள் தொகையை கட்டுப்படுத்துவதில் சிறப்பான சாதனையை புரிந்து வருவதால் மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப

மக்கள்தொகை பெருக்கம் கட்டுக்குள் உள்ளது. பிறப்பு விகிதம் குறைந்துள்ளதாலும், மனித ஆயுட் காலம் உயர்ந்து வருவதாலும், மூத்த குடிமக்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் அதிகமாக உள்ளது. புள்ளி விவரங்களின் படி, வருகின்ற 2031–ஆம் ஆண்டில் மாநிலத்திலுள்ள மூத்த குடிமக்களின் சதவீதம் 18.20 ஆக உயரும்போது மூத்த குடிமக்களின் எண்ணிக்கை சுமார் 1.50 கோடியாக இருக்கும். எனவே, மூத்த குடிமக்களுக்கான நலன்களை வழங்குவது இம்மாநில அரசிற்கு மிகப்பெரிய சவாலாக உள்ளது. முதியோர்களின் பாதுகாப்பு, ஆரோக்கியம், ஊட்டச்சத்து நிலை, மறுவாழ்வு ஆகியவற்றிலுள்ள சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டு மாநில அரசு "**முதியோருக்கான மாநிலக் கொள்கையை**" வகுத்து அதனை வெளியிடும் தருவாயில் உள்ளது.

வளர்ச்சிக் கொள்கையில் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நிலைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். ஒரு தேசத்தின்



எதிர்காலம் அங்குள்ள குழந்தைகளிடமே உள்ளது என்று கூறுவது வெறும் வார்த்தை அல்ல. ஒருவருடைய உடல் மற்றும் அறிவு சார்ந்த வளர்ச்சி குழந்தைப் பருவத்திலேயே தீர்மானிக்கப்படுகிறது என்பதும், குழந்தைப் பருவத்தில் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் வளரும்போது அவர்களின் எதிர்கால வாழ்வு தீங்கு விளைவிப்பதாக அமையும் என்பதும் பதிவுசெய்யப்பட்ட உண்மையாகும். வளமான மனிதவளம் மற்றும் மனித வளத்தின் மீதான முதலீடு என்பதே ஒரு நாட்டின் அதிக வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாகும்.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும், ஒரு கோடிக்கும் அதிகமான குழந்தைகள் ஒரு தனிநபருக்கு தேவையான ஆற்றலை வழங்கும் போதுமான உணவு கூட வழங்க இயலாத குடும்பங்களில் பிறக்கின்றனர். நாட்டின் மொத்த பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடைவதால் அது ஏழை மக்களுக்கு மிகுந்த பயனளிக்கும் என்ற விளைவிற்காக (Trickle down effect)

குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றாமல் காத்திருக்க முடியாது. குழந்தைகளின் தேவைகளை உடனே நிறைவேற்றுவது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

அரசியலமைப்பின் வழிகாட்டுதல் நெறிமுறைக் கோட்பாடுகளில் உள்ள பிரிவு 47, "மக்களின் ஊட்டச்சத்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் மற்றும் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவது போன்றவை ஒரு அரசின் தலையாய கடமைகளாகும்" என வலியுறுத்துகிறது.

குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு போன்ற பிரச்சனைகள் சிக்கலான ஒன்றாகும். இது குடும்பம், சமூகம் மற்றும் ஒட்டுமொத்த மாநில அளவில் செயல்படும் பல்வேறு காரணிகளுடன் தொடர்புடையது. இவற்றில் மிக முக்கியமானவை:



- வறுமை மற்றும் அதன் விளைவாக குறைந்த வாங்கும் திறன்.
- குழந்தையின் தேவைகள் மற்றும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு இல்லாமை, குடும்பங்களுக்கிடையே காணப்படும் பாகுபாடான உணவு வழங்கும் முறை மற்றும் பல பாரம்பரிய நம்பிக்கைகள், நடைமுறைகள் ஆகியன முறையான ஊட்டச்சத்து நிலைப்பாட்டிற்கு எதிரான அணுகுமுறைகளாகும்.
- பாதுகாக்கப்படாத குடிநீர் வழங்கல், குறைந்த வடிகால் வசதிகள் மற்றும் திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கங்கள் ஆகியன ஊட்டச்சத்துக் குறைபாட்டை அதிகப்படுத்தும். இது தொடர் தொற்று நோய்களுக்கு வழிவகுத்து, ஆரோக்கியமற்ற வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்தும்.

பசி மற்றும் பட்டினியில் இருந்து மக்களை பாதுகாப்பதில் நீண்ட பாரம்பரியத்தை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அய்யன் திருவள்ளுவர், பசியின் கொடுமையை வன்மையாக எதிர்க்கும் வகையில்,

**"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக வுலகி யற்றியான்"** – குறள் 1062

என தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார். மேலும் உணவுப் பொருட்கள் எல்லோருக்கும் சமமாகக் கிடைத்திட வேண்டும் என்பதிலும், எவருக்கும் உணவுப் பற்றாக்குறை ஏற்படக்கூடாது என்பதிலும் அழுத்தமான கருத்துக்களைக் கொண்டிருந்த சுதந்திரப் போராட்ட வீரரும், மகாகவியுமான பாரதியார்,

**"தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லை**
**எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்"**

என தனது கருத்தை அழுத்தம் திருத்தமாக வெளியிட்டார். மேற்கண்ட கருத்தினை வலியுறுத்தும்



வகையில் இவ்வரசு, ஊட்டச்சத்து மற்றும் சுகாதார திட்டங்களை நடைமுறைப்படுத்தி தமிழ்நாட்டினை "ஊட்டச்சத்துக் குறைபாடில்லா மாநிலமாக" மாற்றிட உறுதி பூண்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்றானது நாட்டிலுள்ள மக்களின் வாழ்க்கையை மிகவும் பாதித்துவிட்டது. குறிப்பாக, பல்வேறு குடும்பங்களை அதிக அளவில் பாதிப்படையச் செய்ததால் பல குழந்தைகள் ஆதரவற்றவர்களாகவும், பெற்றோர்களில் ஒருவரை இழந்தும் உள்ளனர். குடும்பத்தில் வருமானம் ஈட்டும் நபரை இழந்ததால் வாழ்வாதாரம் இல்லாமல் பாதுகாப்பற்ற மோசமான நிலைக்கு தள்ளப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகளே ஆவர். இந்த இக்கட்டான கொரோனா பெருந்தொற்று காலச் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிதி உதவி மற்றும் உடனடி நிவாரண உதவிகளை வழங்கும் பொருட்டு

பல அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அதன்படி பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கல்வியுதவி, உணவு, உறைவிட வசதி மற்றும் அரசுத் திட்டங்களில் பயனடைவதில் முன்னுரிமை ஆகியவை வழங்கப்பட்டன. மேலும் குழந்தைகளின் பெயரில் ரூ.5 இலட்சம் வைப்பீடாகவும், ரூ.3 இலட்சம் உடனடி நிவாரண தொகையாகவும் மற்றும் மாதம்தோறும் ரூ.3000/- பராமரிப்பு தொகையாகவும் வழங்கப்பட்டுவருகிறது.

வளர்ச்சியை நோக்கமாக கொண்ட இவ்வரசு நலிவுற்ற குடும்பங்களை பேணிக் காப்பதில் அக்கறை செலுத்துகிறது. மேலும், குழந்தைகளுக்கான அன்பு மற்றும் அரவணைப்பான சூழலை வழங்க குழந்தைகள் காப்பகங்களை கடைசி நிவாரணமாக வைத்துள்ளது. குழந்தைகளை உருவாக்குவதில் குடும்ப சூழல் மட்டுமே சிறப்பானதாக அமையும், தவிர மற்ற எந்த சூழ்நிலையும் இதற்கு ஈடாகாது. வறுமையின் காரணமாக குழந்தைகளை காப்பகங்களில் விடுவது



இளைஞர் நீதிச் சட்ட விதிகளை மீறும் செயலாகும். நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் உதவிகளைக்கோரி காத்திருப்போர் பட்டியலில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவது மாநில அரசின் சீரிய கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குழந்தைகளின் நலனில் அதிக அக்கறை கொண்ட அரசு, அவர்களுக்கான வளர்ச்சி நிதியில் எந்த பற்றாக்குறையும் ஏற்படாத வண்ணம் முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருகிறது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி நிதி ஆதரவு திட்டத்தில் பயன்பெற காத்திருப்போர் பட்டியலில் இருந்த அனைத்து குழந்தைகளுக்கும் ஒட்டு மொத்தமாக மாநில நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு அளித்து பயனடையச் செய்தது.

மாநில அரசு, அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் குழந்தைகளை பாதுகாத்து, ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்கிட தேவையான திட்டங்களை முன்னிறுத்தி

முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. குழந்தைகள் மீது இழைக்கப்படும் பாலியல் வன்கொடுமை அவர்களை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், வன்முறைக்கு ஆளான குழந்தைகளின் உடனடி தேவைகளுக்கு இடைக்கால நிவாரணம் வழங்குவது மட்டுமல்லாமல் அவர்களின் நீண்டகால மறுவாழ்விற்கு உதவிடும் வகையில் இழப்பீடுகளையும் வழங்குகிறது. பல்வேறு குற்றங்களினால் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட பெண்களுக்கான இழப்பீடு தொகைக்கான பொது நிதியிலிருந்து, பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கடந்த காலங்களில் இழப்பீடு வழங்கப்பட்டு வந்தது. குழந்தைகளுக்கான இழப்பீட்டுத்தொகை காலதாமதமாக வழங்கப்படுவதை சரிசெய்யும் பொருட்டு இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் முதன்முறையாக போக்சோ சட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கான



நிவாரணத்தொகை வழங்க தனி நிதித் தொகுப்பு (தமிழ்நாடு பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான இழப்பீட்டு நிதி) உருவாக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

அரசு, "யூனிசெப்" உடன் இணைந்து குழந்தைகள் பாதுகாப்புச் சேவைகள் தொடர்பான பங்குதாரர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, நாட்டிலேயே முதலாவதாக "சமூக உரிமைக்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையத்தை" நிறுவியுள்ளது. மேலும் அனைத்து குழந்தைகளின் நலனுக்காகவும் **"தமிழ்நாடு மாநில குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை 2021"** – ஐ அரசு உருவாக்கியுள்ளது.

நலிவுற்ற, ஒடுக்கப்பட்ட, சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்ட தன் உரிமைகளை கோர இயலாத பெண்கள், குழந்தைகள், முதியோர் மற்றும் திருநங்கையர் ஆகியோரின் நலனை பாதுகாப்பதையும் அவர்களின் நிலையை உயர்த்துவதையும் கடமையாகக்

கொண்டு உத்வேகத்துடன் செயல்பட்டு அனைத்து பிரிவினருக்குமான சமூக நீதியையும் மற்றும் உரிமைகளையும் உறுதிசெய்யும் விதமாக கொள்கைகளையும் திட்டங்களையும் தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.



# அத்தியாயம்–2

## சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை

பெண்கள், குழந்தைகள், திருநங்கையர் மற்றும் மூத்த குடிமக்கள் போன்ற சமுதாயத்தின் விளிம்பு நிலை பிரிவினரின் உரிமைகளை பாதுகாத்திடும் வகையில் சமூக சட்டங்களையும் நலத்திட்டங்களையும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயல்படுத்தி வருகிறது.

### 2.1 குழந்தைகள் நலன்

இந்தியாவில்தான் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மக்கட் தொகை அதிகமாக, அதாவது மொத்த மக்கட் தொகையில் 39% உள்ளனர். சமுதாயத்தின் மிகவும் நலிவுற்ற பிரிவினராக குழந்தைகள் உள்ளனர். குழந்தைகள் நம் நாட்டின் மிக உயரிய சொத்தாக கருதப்படுகின்றனர். ஏனெனில் ஒரு நாட்டின் எதிர்காலம், அதன் குழந்தைகள் எவ்வாறு

முதிர்ச்சி மற்றும் வளர்ச்சி அடைகிறார்கள் என்பதை பொருத்தே அமையும். ஒவ்வொரு குழந்தைக்கும் கண்ணியமான வாழ்க்கை வாழவும், வன்முறை, சுரண்டல், முறைகேடு, புறக்கணிப்பு, மறுக்கப்படுதல் மற்றும் பாகுபாடுகளற்ற பாதுகாப்பான வாழ்க்கை வாழவும் உரிமையுண்டு. குழந்தைகளின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் அனைத்து விதமான சுரண்டல் மற்றும் வன்கொடுமைகளிலிருந்து பாதுகாத்தல் என்பது சமுதாயத்தின் ஒவ்வொரு தனிப்பட்ட நபர் மட்டுமல்லாது அரசின் முதன்மையான கடமையாகும்.

ஒவ்வொரு குழந்தையும் வாழ்க்கையை சிறப்பாக தொடங்கவும், செழிக்கவும், தனது ஆற்றலை மேம்படுத்தவும் அரசு தொடர்ந்து ஆதரவு அளித்திட உறுதி கொண்டுள்ளது. அரசியலமைப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல, வன்கொடுமை மற்றும் தீங்கிலிருந்து குழந்தைகளை பாதுகாத்திடவும் அவர்களுக்கு அனைத்து அடிப்படை உரிமைகளையும் உத்தரவாதம் அளித்திடும் வகையிலும் தமிழ்நாடு



மாநில குழந்தைகளுக்கான கொள்கை, 2021 உருவாக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளின் பாதுகாப்பில் மிகுந்த அக்கறை கொண்ட அரசு, குழந்தைகள் தொடர்பான பல்வேறு சட்டங்கள் மற்றும் திட்டங்களை இயற்றி செயல்படுத்தி வருகிறது. வலிமையான குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பினை ஏற்படுத்தி குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கிட அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாக அரசு மேற்கொண்டு வருகிறது.

### 2.1.1 தொட்டில் குழந்தை திட்டம்

1991–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மாநிலத்தின் சில பகுதிகளில் பெண்சிசுக்கொலை தொடர்பான பழக்கவழக்கங்களால் குழந்தை பாலின விகிதம் வெகுவாக குறைந்ததை பிரதிபலித்தது. இதற்கு பல்வேறு சமூக பொருளாதார காரணங்கள் உள்ளன.

சமூகத்தில் நிலவும் இத்தகைய மோசமான பழக்கவழக்கங்களுக்கு வறுமை, வரதட்சணை கொடுமை, திருமணமாகாத பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள், மாற்றுத்திறனாளி குழந்தைகள், பஞ்சம், பெருந்தொற்று நோய் போன்ற பல்வேறு காரணங்கள் உள்ளன. பெண் குழந்தைகள் பிறப்பு மீதான குறைந்த மதிப்பு மற்றும் ஆண் குழந்தைகள் மீதான விருப்பமும் பெண்சிசுக்களை அறிந்தே கொல்லும் நிலையினை ஏற்படுத்தி உள்ளது.

பெண் குழந்தைகள் பெற்றோரால் கைவிடப்பட்டாலும், அவர்களுக்கு சரியான பராமரிப்பும் ஆதரவும் கிடைப்பதை உறுதிசெய்ய, தமிழக அரசு 1992–ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் தொட்டில் குழந்தைத் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிமுகம் செய்தது. மருத்துவமனைகளில் தொட்டில்களை அமைப்பதன் மூலம், தாய்மார்கள் தாங்கள் விரும்பாத பெண் குழந்தைகளை தொட்டில்களில் பாதுகாப்பாக விட்டுச் செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது. இது



குழந்தைகளை மரணத்தின் பிடியில் இருந்து மீட்பதற்கும், பெண் குழந்தைகளின் உண்மையான மதிப்பை மேம்படுத்துவதற்கும் ஒரு தனித்துவமான நடவடிக்கையாகும்.

இத்திட்டத்தின் கீழ், பெண் குழந்தைகளையும் மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகளையும், வறுமை மற்றும் பராமரிக்க விருப்பமின்மை காரணமாக, பெற்றோர்கள் தாமாக முன்வந்து குழந்தைகளை தொட்டிலில் விட்டுச் செல்ல இத்திட்டம் வழிவகை செய்கிறது. அவ்வாறு பெறப்பட்ட குழந்தைகள், உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் சட்டப்பூர்வமாக தத்து கொடுக்கப்படுகின்றனர்.

2001 ஆம் ஆண்டில், பெண் சிசுக்கொலை வழக்கத்திலிருந்த மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டம் நீட்டிக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, குழந்தை பாலின விகிதம்

குறைவாகப் பதிவான கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களுக்கு 2011-ல் இந்தத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. அதன்படி, சம்மந்தப்பட்ட மாவட்டங்களில் வரவேற்பு மையங்கள் தொடங்கப்பட்டன. மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், குழந்தைகள் இல்லங்கள் மற்றும் காப்பகங்களில் வைக்கப்பட்டுள்ள தொட்டில்கள் மூலம் பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகள் பெறப்படுகின்றனர்.

பெண் சிசுக்கொலை எனும் தீய பழக்கத்தை தடுக்கவும், குறைந்து வரும் குழந்தை பாலின விகிதத்தை சரிசெய்யவும், நிர்வாக இயந்திரத்திற்கு அதிகப் பொறுப்பளித்து சட்டத்தை முழுவீச்சில் செயல்படுத்தியும் குற்றவாளிகளை தண்டிக்கவும் தமிழ்நாடு அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து மார்ச் 2022 வரை



மொத்தம் 5781 குழந்தைகள் (ஆண் 1283, பெண் 4498) பெறப்பட்டுள்ளனர்.

**2022-2023 வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.42.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.2 சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான இல்லங்கள்

தத்தெடுக்க விரும்பும் பெற்றொர்களால் தவிர்க்கப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு கவனமும் மற்றும் பாதுகாப்பும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் இல்லங்கள் வாயிலாக வழங்கிடும் வகையில் சிறப்புத் திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ் பெறப்படும் குழந்தைகள், தத்தெடுக்க விரும்பும் பெற்றோரால், பல்வேறு காரணங்களுக்காக, குறிப்பாக உடல் குறைபாடுகள் உள்ள குழந்தைகள் தத்தெடுக்கப்படுவதில்லை. இந்த வேறுபாட்டை

களைந்திட தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கீழ்க்கண்ட நான்கு இல்லங்களுக்கு சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளை பராமரிப்பதற்காக அரசு மானியம் வழங்குகிறது:-

1. ஸ்ரீ அருணோதயம் டிரஸ்ட், சென்னை
2. கம்யூனிட்டி ஹெல்த் எஜுகேஷன் சொசைட்டி (CHES), திருவள்ளூர்
3. பிரேமவாசம், காஞ்சிபுரம்
4. பேமிலிஸ் ஃபார் சில்ரன், கோயம்புத்தூர்

தற்போது, இவ்வில்லங்களில் 135 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக, தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு ரூ.120/-வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

**2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.37.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



### 2.1.3 முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

ஒரு நாட்டின் எதிர்காலம் பாலின சமத்துவத்தை உறுதி செய்வதன் மூலம், பெண் குழந்தைகளும் போதுமான பிரதிநிதித்துவத்துடன், தகுதி பெற்று, வளர்ச்சியின் பாதையில் பங்கேற்க இயலும். பாலின சமத்துவம் என்பது ஆண் மற்றும் பெண் குழந்தைகள் இருபாலருக்கும் கல்வி, மருத்துவம், பொருளாதாரம் மற்றும் அரசியல் உள்ளிட்டவற்றில் சமவாய்ப்புகளை வழங்குவதாகும். ஆணாதிக்கம் மிகுந்த சமூகத்தில் பெண் குழந்தைகள் பாலின பாகுபாடுகளுக்கு ஆளாவதுடன் இந்நாளிலும் சுமையாக கருதப்படுகின்றனர். எனவே, பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்பித்து அதிகாரம் அளித்து அவர்களை மேம்படுத்த அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

பெண் சிசுக்கொலையை ஒழித்திடவும், ஆண் குழந்தைகளை விரும்பும் போக்கை மட்டுப்படுத்திடவும்

குடும்பக் கட்டுப்பாட்டை ஊக்கப்படுத்திடவும் தமிழ்நாடு அரசு, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்தி, பெண் குழந்தைகளின் நலனை பாதுகாக்கிறது.

முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் 1992–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பெண் குழந்தைகளின் கல்வியை உறுதி செய்திடவும் மற்றும் அவர்களின் உரிமைகளை காத்திடவும் அரசால் அக்குழந்தைகளின் பெயரில் நேரடியாக வைப்பு நிதி முதலீடு செய்யும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளின் பெயரில் நிலையான வைப்புத்தொகை "தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில்" முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத்தொகையின் ரசீது நகல் பெண் குழந்தையின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. பெண் குழந்தைக்கு 18 வயது நிறைவடைந்ததும், திரண்ட வட்டி



விகிதத்துடன் கூடிய வைப்பு தொகை முதிர்வு தொகையாக உயர்கல்வி பயில வழங்கப்படுகிறது.

**திட்டத்தின் நோக்கங்கள்**

- பெண் குழந்தைகள் குறைந்தபட்சம் 10–ஆம் வகுப்பு வரை கல்வி பெறுவதை உறுதி செய்தல் பின் உயர்கல்வி பெறவும் ஊக்குவித்தல்.
- 18 வயதிற்கு பிறகு திருமணம் செய்து கொள்ளும் மனப்பாங்கினை பெண் குழந்தைகளிடம் ஊக்குவித்தல்.
- இரண்டு பெண் குழந்தைகளுடன் குடும்ப கட்டுப்பாடு செய்து கொள்ள பெற்றோர்களை ஊக்குவித்தல்.
- பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிக்கும் திறன்களை மேம்படுத்த குடும்பத்தின் பங்களிப்பை உறுதி செய்தல்.
- பெண் குழந்தைகளின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் சமூக பொருளாதார மேம்பாடு வழங்குதல்.

**திட்டத்தின் வகைகள்**

**திட்டம்–I**

இத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை மட்டும் பிறந்து இருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் நிலையான வைப்புத் தொகையாக ரூ.50,000/– தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகையின் இரசீது நகல் பெண் குழந்தையின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

**திட்டம்–II**

இத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருக்கும் பட்சத்தில், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் நிலையான வைப்புத் தொகையாக தலா ரூ.25,000/– தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகையின் இரசீதுகளின் நகல்கள்



பெண் குழந்தைகளின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

**திட்டத்தில் பயன் பெற தேவையான தகுதிகள்**

- குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை/இரு பெண் குழந்தைகள் மட்டும் இருக்க வேண்டும். ஆண் குழந்தை இருக்கக்கூடாது, எதிர்காலத்தில் ஆண் குழந்தையை தத்தெடுக்கவும் கூடாது.
- பெற்றோரில் ஒருவர் 40 வயதிற்குள் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டிருக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கும்போது குழந்தைகளின் பெற்றோர் தமிழ்நாட்டில் 10 ஆண்டுகள் தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும்.
- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/–க்குள் இருக்க வேண்டும்.
- திட்டம்–1ல், குழந்தையின் 3 வயது முடிவதற்குள்ளும், திட்டம்–2ல் இரண்டாவது

குழந்தையின் 3 வயது முடிவதற்குள்ளும் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்க வேண்டும்.

- முதல் மற்றும் இரண்டாம் பிரசவங்களின்போது ஒன்றுக்கு மேற்பட்ட பெண் குழந்தைகள் இருப்பின், அவர்கள் திட்டம் 2-ன் கீழ் பயன் பெறுவர்.

**திட்டத்தின் பயனாளிகள்**

இத்திட்டத்தின் கீழ் மார்ச் 2022 வரை 10,46,605 பெண் குழந்தைகள் பதிவு செய்யப்பட்டு ரூ.1705.52 கோடி தொகை வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2021-2022-ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் 33,359 பெண் குழந்தைகள் பதிவு செய்யப்பட்டு ரூ.83.45 கோடி தொகை வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2015 முதல் மார்ச் 2021 வரை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் 26,561 பெண் குழந்தைகளுக்கு ரூ.76.44 கோடி முதிர்வுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.



அரசின் தொடர்ச்சியான சீரிய முயற்சியினால், 2021-22-ஆம் ஆண்டில் 30,114 பெண் குழந்தைகளுக்கு ரூ.90.18 கோடி முதிர்வுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.92.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.1.4 பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் திட்டம்**

"பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்" திட்டம் பெண் குழந்தைகளுக்கான ஒன்றிய அரசு நிதியுதவி பெறும் திட்டமாகும். பெண் குழந்தைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களுக்கான நல திட்டங்களின் செயல்திறனை அதிகரிக்கவும் பாலின ரீதியில் கருக்கலைப்பு செய்தல், சிசுக்கொலை செய்தல் போன்ற சமூக கொடுமைகளிலிருந்து பெண் குழந்தைகளைக் காத்தல் மற்றும் நாடு முழுவதும்

அவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

இத்திட்டம், குழந்தை பாலின விகிதப்படி ஆண் குழந்தைகளை விட குறைவாக பெண் குழந்தைகள் உள்ளதாக கண்டறியப்பட்ட 11 மாவட்டங்களை இலக்காக கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயனாளிகளுக்கு நேரடியாக பணப்பலன்கள் ஏதுமின்றி சமூக மனமாற்றத்திற்கு உதவிடும் வகையில் விழிப்புணர்வு வழங்குவதை அடிப்படையாக கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**திட்டத்தின் நோக்கங்கள்**

1. பாலினப்பாகுபாடு அடிப்படையில் பெண் குழந்தைகள் கொல்லப்படுவதை தடுத்தல்.
2. பெண் குழந்தை உயிர் வாழ்வதையும் அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்தல்.



3. பெண் குழந்தையின் கல்வியினை உறுதி செய்தல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் அவர்களது பங்கேற்பினை மேம்படுத்துதல்.

**திட்டத்தின் செயல்பாடுகள்**

தமிழ்நாட்டில் 2015-ஆம் ஆண்டு முதல் கடலூர் மாவட்டத்தில் "பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்" திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதை தொடர்ந்து, குழந்தை பாலின விகிதம் தேசிய சராசரியை விடக் குறைவாக இருந்த 10 மாவட்டங்களுக்கு 2018-ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. (அரியலூர், தருமபுரி, நாமக்கல், சேலம், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னை). இந்த மாவட்டங்களில் பெண் குழந்தைகளின் முக்கியத்துவம் குறித்து அனைத்து நிலைகளிலும் பல துறைகளும் ஒருங்கிணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் மேற்கண்ட 11 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. மேலும், ஒரு மாவட்டத்திற்கு ரூ.50.00 இலட்சம் வீதம் ரூ.5.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மீதமுள்ள 27 மாவட்டங்களில், பெண் குழந்தைகளின் பிறப்பை ஊக்குவிப்பதற்கும், பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கும், தொலைத்தொடர்பு மற்றும் ஊடக செய்திகள் வாயிலாக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பல்வேறு துறை அலுவலர்களால் களப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், பாராட்டு கடிதம் வழங்குதல் மூலம் பெண் குழந்தை பிறப்பை கொண்டாடுதல், தாய்மார்களுக்கு சுகாதார பொருட்கள் வழங்குதல், மரக்கன்றுகள் வழங்குதல், பெண் மற்றும் ஆண் குழந்தைகளின் பிறப்பு எண்ணிக்கையை தெரிவிக்கும் தகவல்பலகை பராமரித்தல், கையெழுத்து



இயக்கம், மனித சங்கிலி, பேரணி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியரிடையே ஓவியப் போட்டி, கட்டுரை போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல், சுவரொட்டிகள், பதாகைகள் ஆகியவற்றை அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களில் நிறுவுதல் ஆகிய செயல்பாடுகள் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2.1.5 குழந்தை திருமணங்களை தடுத்தல்**

குழந்தை திருமணம் என்பது மனித உரிமைகளை மீறுவதுடன், பெண் குழந்தைகள் தங்கள் உடல்நலன் மற்றும் கல்வி சார்ந்த அடிப்படை உரிமைகளை பெறுவதை தடுத்து, அவர்களின் எதிர்கால வளர்ச்சியை தடுக்கிறது. மேலும், அவர்களின் பொருளாதார வாய்ப்புகளை குறைப்பதுடன், வன்முறைகளுக்கு உள்ளாகும் சூழல், இளவயது மற்றும் பேராபத்தான கர்ப்பம், பேறுகால இறப்பு மற்றும் தொற்று நோய்களுக்கு ஆளாக்குகிறது.

**குழந்தை திருமண தடைச் சட்டம், 2006**

குழந்தை திருமண தடைச் சட்டமானது இந்திய அரசால் 2006–ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டம் குழந்தை திருமணத்தை தடை செய்யவும், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கவும், நிவாரணம் அளித்திடவும் குழந்தை திருமணத்திற்கு உடந்தையாக இருப்பவர்கள், ஊக்குவிப்பவர்கள் மற்றும் நடத்துபவர்களுக்கு கடுமையான தண்டனைகளை உறுதி செய்யவும் உகந்த வழிவகைகளை கொண்டிருக்கிறது. குழந்தை திருமணங்களை அறவே ஒழித்திட, தமிழ்நாடு குழந்தை திருமண தடுப்பு விதிகள், 2009 மாநில அரசால் உருவாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**சட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- ஆண்களுக்கு 21 வயது மற்றும் பெண்களுக்கு 18 வயது என்பதை திருமண வயதாக இச்சட்டம் குறிப்பிடுகிறது.



- இச்சட்டத்தின்படி, குழந்தை திருமணம் என்பது தானாக நடவடிக்கை எடுக்கத்தக்க மற்றும் பிணையில் விடுவிக்க இயலாத குற்றமாகும்.
- குழந்தை திருமணம் என்பது செல்லதக்கதல்ல மற்றும் இரத்து செய்யப்படக் கூடியது.
- குழந்தை திருமணத்தால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு பராமரிப்பு மற்றும் இருப்பிடம் வழங்கிட சட்டத்தில் வழிவகை உள்ளது.
- குழந்தை திருமணங்கள் நடைபெறாமல் தடுக்க நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளை வழங்கலாம்.

**சட்டத்தின் கீழ் தண்டனை விவரம்**

- 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், குழந்தை திருமணத்தில் ஈடுபட்டால் அவருக்கு 2 ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத் தண்டனை அல்லது ரூ.1,00,000/– (ஒரு இலட்சம்) வரை அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

- குழந்தை திருமணத்தை ஏற்பாடு செய்பவர், நடத்துபவர், வழிநடத்துபவர் மற்றும் உடந்தையாக இருப்பவர்களுக்கும் 2 ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத்தண்டனை மற்றும் ரூ.1,00,000/– (ஒரு இலட்சம்) வரை அபராதம் விதிக்கப்படும்.
- குழந்தைக்கு பொறுப்பாக இருப்பவர், பெற்றோர், பாதுகாவலர் அல்லது சங்கங்களின் உறுப்பினர், குழந்தை திருமணங்களை ஊக்குவிப்பவர், நடத்துவதற்கு அனுமதி அளிப்பவர், நடைபெறுவதனை தடுக்க தவறுபவர், குழந்தை திருமணத்தில் கலந்து கொள்பவர் அல்லது பங்கேற்பவர் எவராக இருப்பினும் சட்டத்தின்படி 2 ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத்தண்டனை மற்றும் ரூ.1,00,000/– வரை அபராதம் விதிக்கப்படும். இருப்பினும் பெண்களுக்கு இச்சட்டத்தின் கீழ் சிறைத்தண்டனை வழங்கிட இயலாது.



**குழந்தை திருமண தடுப்பு அலுவலர்**

இச்சட்டத்தை வலுவாக செயல்படுத்திட மாவட்ட சமூகநல அலுவலர்களை இச்சட்டத்தின் பிரிவு 17–ன் படி, குழந்தை திருமண தடுப்பு அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது.

**குழந்தை திருமண தடுப்பு அலுவலரின் பணிகள்**

அ. குழந்தை திருமணம் குறித்த தகவல் கிடைக்கப் பெற்றவுடன் எத்தகைய நடவடிக்கை பொருத்தமோ அத்தகைய நடவடிக்கை மேற்கொண்டு குழந்தை திருமணங்களை தடுத்தல்.

ஆ. இச்சட்டத்தின் விதிகளை மீறும் நபர்கள் மீது திறம்பட வழக்கு தொடுப்பதற்கான ஆதாரங்களை சேகரித்தல்.

இ. தனிநபர்களையும் உள்ளூர் மக்களையும் குழந்தை திருமணங்கள் நடத்துதல், உதவி புரிதல், துணை போகுதல் அல்லது அனுமதி

அளித்தல் ஆகியவற்றில் பொதுவாக ஈடுபடக் கூடாது என அறிவுறுத்துதல்.

ஈ. குழந்தை திருமணங்களால் ஏற்படும் தீங்குகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

உ. குழந்தை திருமணங்களால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து சமூகத்திற்கு உணர்த்துதல்.

ஊ. மாநில அரசு கோரும் காலமுறை அறிக்கைகள், புள்ளி விவரங்களை சமர்ப்பித்தல்.

எ. மாநில அரசால் நிர்ணயிக்கப்பட்ட இதர செயல்பாடுகள் மற்றும் கடமைகளை புரிதல்.

**ஊராட்சி அளவிலான மையக்குழு**

ஊரகப்பகுதிகளில் குழந்தை திருமணங்களை தடுக்கவும் புகார் தெரிவிக்கவும் ஊராட்சித் தலைவர் தலைமையில் மையக்குழு கீழ்க்காணும் உறுப்பினர்களை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.



| | | |
|---|---|---|
| 1. ஊராட்சித் தலைவர் | – | தலைவர் |
| 2. விரிவாக்க அலுவலர் (சமூக நலன்) | – | செயலர் |
| 3. கிராம நிர்வாக அலுவலர் | – | உறுப்பினர் |
| 4. செயலர், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு/ சுய உதவிக் குழு | – | உறுப்பினர் |
| 5. தலைமை ஆசிரியர்/ மூத்த ஆசிரியர் (தலைமை ஆசிரியர் இல்லாத பட்சத்தில்) | – | உறுப்பினர் |
| 6. ஒரு பெண் வார்டு உறுப்பினர் (ஒன்றுக்கு மேற்ப்பட்ட பெண் வார்டு உறுப்பினர் இருப்பின் வயதில் மூத்த பெண் உறுப்பினர்) | – | உறுப்பினர் |

**குழந்தை திருமணத்தை தடுப்பதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும்

காவல் கண்காணிப்பாளர்களுடன் 09.03.2022 முதல் 11.03.2022 வரை நடத்திய ஆய்வுக்கூட்டத்தில் குழந்தை திருமண தடுப்பு குறித்த கூட்டப்பொருள் சேர்க்கப்பட்டு, விரிவான விவாதம் மேற்கொள்ளப்பட்டது. குழந்தை திருமணங்கள் நடைபெறும் முன்னரே மாவட்ட நிர்வாகம் மூலம் ஒருங்கிணைந்த தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

- மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களால், மண்டல அளவில் சேலம், மதுரை, தூத்துக்குடி மற்றும் சென்னையில் மாவட்ட காவல்துறை, சமூகப் பாதுகாப்பு துறை, சமூக நலத் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், குழந்தை உதவி எண் செயல்படுத்தும் தொண்டு



நிறுவனங்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு, குழந்தை திருமணங்களை தடுத்திட அனைத்து சார்பு துறையினருடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு கடுமையான நடவடிக்கைகளை விரைந்து எடுத்திடவும், நடைபெற்ற குழந்தை திருமணங்கள் மீது முதல் தகவல் அறிக்கை உடனடியாக பதியவும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

- குழந்தைத் திருமணம் எனும் கொடுமையிலிருந்து பெண் குழந்தைகளை பாதுகாப்பதற்காக, குழந்தைத் திருமணம் தொடர்பான குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு துறையின் அனைத்து திறன் வளர்ப்பு பயிற்சிகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- பெண் குழந்தைகளின் கல்வியை மையமாக கொண்டும், குழந்தை திருமணத்தை அறவே தடுத்திடும் நோக்கிலும், பெண் குழந்தை

பாதுகாப்புத் திட்டம், அனைத்து திருமண நிதியுதவி திட்டங்களும் உள்ளடக்கிய பல்வேறு நலத்திட்டங்கள், பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியடையும்போது பயனடையும் வகையில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- பல்வேறு கள அலுவலர்கள் மற்றும் உள்ளூர் மக்களைக் கொண்ட கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு ஏற்படுத்தப்பட்டு, குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகளை கண்காணிக்க கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.
- ஒருங்கிணைந்த சேவை மையங்கள் வாயிலாகவும், குழந்தை திருமணத் தகவல் கிடைக்கப்பெற்றவுடன் நேரடியாக களத்திற்கு சென்று குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்படுகிறது.
- ஒன்றிய அரசு திட்டமான மகிளா சக்தி கேந்திரா திட்டத்தின் கீழ் கிராமங்கள், வட்டாரங்கள்



மற்றும் குழந்தை திருமணங்கள் அதிகம் நடைபெறும் இடங்களில் சுப முகூர்த்த தினங்களுக்கு முன்னதாக, குழந்தை திருமண தடைச் சட்டம் 2006, குழந்தை திருமணத்தால் நிகழும் பாதிப்புகள் மற்றும் குழந்தை **உதவி எண்.1098** குறித்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

- குழந்தைத் திருமணத்திலிருந்து மீட்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்திடும் வகையில், 2021–2022–ஆம் ஆண்டில் 1,015 பெண் குழந்தைகளுக்கு மாதம் ரூ.1,000/– செலவின வீதத்தில், மூன்று மாத கால தொழிற் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- சமூக வலைதளத்தில் ஒரு பிரிவாக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இயக்குநரகம் மூலம் "தமிழ் மகளிர் குரல்" என்னும் தனி வலையொளி உருவாக்கப்பட்டு குழந்தைகள் மற்றும் பெண்கள் தொடர்பான பிரச்சனைகள்

குறித்த விழிப்புணர்வு குறும்படங்கள், பொது மக்கள் பார்வைக்காக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

- குழந்தை திருமணங்களால் ஏற்படும் தீய விளைவுகள், இலவச உதவி எண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் கல்வியின் முக்கியத்துவம் ஆகியவற்றை உணர்த்திடும் 13 வகையான சுவரொட்டிகள் யூனிசெப் நிறுவன உதவியுடன் வடிவமைக்கப்பட்டு அச்சடிக்கப்பட்டு, சமூகக் கூடங்கள், பேருந்து நிலையங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் காட்சிப்படுத்தி குழந்தை திருமணங்களை ஒழித்திடும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த அனைத்து களப்பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
- யூனிசெப், மாநில கரூவூலமையத்தின் உதவியுடன் "இளந்தென்றல் பெட்டகம்" என்ற 23 வகையான பயிற்சி கையேடுகளை உள்ளூர்



மொழியிலும் குழந்தை திருமணங்கள் குறித்து பல்வேறு தகவல்கள் அடங்கிய 4 குறும்படங்களையும் குழந்தை திருமணம் தடுப்பு சார்ந்த அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் பயிற்சி வழங்கிட ஏதுவாக தயாரித்து அளித்துள்ளது. இந்த பயிற்சி கையேடுகள்/ குறும்படங்கள் உதவியுடன் பாலினம் சார்ந்த வன்முறை, குழந்தை திருமணங்கள் அவற்றை தடுப்பதற்கான நிலையான வழிகாட்டி முறை உருவாக்கப்பட்டு மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**மார்ச் 2022** வரை, மாநிலத்தில் **17,557** குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த **2021–ஆம்** ஆண்டு மட்டும் **2,816** குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

### 2.1.6 பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கான விருதுகள்

நாட்டில் முதன் முறையாக தமிழ்நாடு அரசு, பெண் குழந்தைகளின் திறன்களை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையிலும், பெண் குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்து செயல்படும் குழந்தைகளின் முயற்சியை பாராட்டும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் 18 வயதுக்குட்டப்பட்ட ஒரு பெண் குழந்தைக்கு தேசிய பெண் குழந்தைகள் தினமான ஜனவரி 24-ம் தேதி அன்று மாநில விருது ஒன்றை வழங்கி வருகிறது. இந்த விருது ரொக்கப்பரிசான ரூ.1,00,000-ற்கான காசோலையும், பாராட்டு பத்திரமும் உள்ளடக்கியதாகும்.

தமிழ்நாடு பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினமான பிப்ரவரி 24 அன்று ஒவ்வொரு ஆண்டும் பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றும் மாவட்டங்களை அங்கீகரிக்கும் விதமாக மூன்று



மாவட்ட ஆட்சியர்களுக்கு தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

## 2.2 மகளிர் நலன்

தமிழ்நாடு அரசால் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலம் சமூக நீதி, சமத்துவம், சுயமரியாதை, பெண் உரிமைக் கோட்பாடுகளை நிலை நிறுத்திடும் விதமாக, மகளிர் நலன் மற்றும் பாதுகாப்பிற்கான பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின் கீழ், சமுதாயத்தின் சம அங்கமாக உள்ள மகளிர், கல்வி மற்றும் சமுதாய முன்னேற்றம் அடைவதற்கான முயற்சியில் இத்துறை ஊக்கத்தோடு அயராது செயலாற்றி வருகிறது.

பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் சமூகம், மேம்பட்ட சமுதாயமாக உருவாகும். தற்போது அரசு, திட்டங்கள் மற்றும் சட்டங்களை சீரிய முறையில்

செயல்படுத்தி வருவதால் பெண்களின் நிலை மேலும் மேம்பாடு அடையத் தொடங்கியுள்ளது.

மேலும் பெண்கள், கல்வியில் முன்னேற்றம் பெறுவதால் சமூகத்தில் எதிர் கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் ஆளுமை திறனை பெறுகிறார்கள். இதனால், சமூகக் குற்றங்கள் தடுக்கப்படுவதுடன் பெண்கள் தன்னம்பிக்கையோடும், பாதுகாப்போடும் சமுதாயத்தில் நடமாடும் அதிகாரம் பெற்றவர்களாகின்றனர்.

### 2.2.1 பெண்களுக்கு அரசு பேருந்தில் கட்டணமில்லா பயணம்

பணிபுரியும் மகளிர், உயர்கல்வி பயிலும் மாணவியர்கள் உட்பட அனைத்து மகளிரின் பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு போக்குவரத்துக் கழக கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகர பேருந்துகளில் கட்டணமில்லா பயண வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.



பாதுகாப்பான பயணம் என்பது பெண்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். பிறரை சார்ந்திராமல் பெண்கள் கல்விக் கூடங்களுக்கும், கல்லூரிகளுக்கும், வேலை செய்யும் இடங்களுக்கும் தாமாகவே சென்று வருவதால் கட்டணமில்லா பேருந்து வசதி மிகப் பெரிய தாக்கத்தை சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளது. பெண்களின் பயணத்திற்கான அன்றாட செலவுகள் குறைக்கப்பட்டு, கல்வி, உணவு மற்றும் உடை போன்ற அத்தியாவசிய செலவுகளை அவர்கள் மேற்கொள்வதற்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் மகளிர் மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவிகள் உள்ளிட்ட அனைத்து மகளிரும் சுமார் 91.85 கோடி பாதுகாப்பான பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

### 2.2.2 திருமண நிதியுதவித் திட்டம்

தமிழக அரசால் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்கள், பெண் கல்வியை உறுதி செய்தல், குழந்தை திருமணத்தை தடுத்தல், விதவை மறுமணம் மற்றும் கலப்பு திருமணங்களை ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டன.

1. **டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு கலப்பு திருமண நிதியுதவித் திட்டம்**

   சமுதாயத்தில் காணப்படும் சாதி வேறுபாடு மற்றும் வரதட்சணைக் கொடுமைகளை களையும் பொருட்டு, கலப்புத் திருமணங்களுக்கு நிதியுதவி அளித்து ஊக்கப்படுத்த 1968 முதல் செயல்பட்டு வருகிறது.



2. **டாக்டர். தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம்**

   1975–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு விதவை மறுமணத்தினை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3. **ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம்**

   ஏழை கைம்பெண் தாய்மார்களின் துயர் தீர்க்கும் வகையில் அவர்களது மகளின் திருமணத்தை நடத்த உதவும் நோக்கில் 1982–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4. **அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டம்**

   தாய் மற்றும் தந்தையை இழந்த ஆதரவற்ற பெண்கள், திருமணம் செய்து கொள்ள உதவி செய்திடும் வகையில் 1985–ஆம் ஆண்டு அரசால் துவங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**திருமண நிதியுதவித் திட்டங்களில் பயன் பெறுவதற்கான தகுதிகள்:-**

| திருமண நிதி உதவித் திட்டத்தின் பெயர் | ஆண்டு வருமான வரம்பு (ரூ) | குறைந்த பட்ச வயது வரம்பு | கல்வித் தகுதி | விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|
| 1. டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் திட்டம் - I: ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மற்றும் பிறஇனத்தவர் திட்டம் II: முற்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/மிகவும் பிற்படுத்தப் பட்டவகுப்பு | வருமான வரம்பு இல்லை | மணமகள் - 18 வயது மணமகன் - 21 வயது | குறைந்த பட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பழங் குடியினர் -5ம் வகுப்பு | திருமணம் முடிந்த இரண்டு ஆண்டிற்குள் |
| 2. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம் | வருமான வரம்பு இல்லை | மணமகள் - 20 வயது மணமகன் - 40 வயது (அதிக பட்சம்) | இல்லை | மறுமணம் முடிந்த 6 மாதக் காலத்திற்குள் |



| திருமண நிதி உதவித் திட்டத்தின் பெயர் | ஆண்டு வருமான வரம்பு (ரூ) | குறைந்த பட்ச வயது வரம்பு | கல்வித் தகுதி | விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|
| 3, ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம் | ரூ.72,000 | மணமகள் - 18 வயது மணமகன் - 21 வயது | இல்லை | விண்ணப்பங்களை திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்பாக அளிக்க வேண்டும். சிறப்பு நேர்வுகளில், தக்க காரணங்கள் இருந்தால், திருமணத்திற்கு முதல் நாள் வரை மனுக்களை ஏற்றுக்கொள்ளலாம். |
| 4. அன்னை தெரசா அம்மையார் நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டம் | வருமான வரம்பு இல்லை | மணமகள் - 18 வயது மணமகன் - 21 வயது | இல்லை | திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்பு விண்ணப்பிக்க வேண்டும். சிறப்பு நேர்வுகளில், தக்க காரணங்கள் இருந்தால், திருமணத்திற்கு முதல் நாள் வரை மனுக்களை ஏற்றுக்கொள்ளலாம். |

ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா அம்மையார் நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய திருமண உதவித் திட்டங்களில், 8 கிராம் தங்க நாணயத்துடன் பட்டம்/பட்டயம் பெற்றவர்களுக்கு ரூ.50,000/-, ஏனையோருக்கு ரூ.25,000/- நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ், 8 கிராம் தங்க நாணயத்துடன் பட்டதாரி அல்லாதோருக்கான நிதியுதவித் தொகையான ரூ.25,000/-ல், மின்னணு பரிமாற்றம் மூலம் ரூ.15,000/- மற்றும் தேசிய சேமிப்பு பத்திரமாக ரூ.10,000/- பட்டம் / பட்டயம் பெற்றோருக்கான நிதியுதவி தொகை ரூ.50,000/-ல், மின்னணு பரிமாற்றம் மூலம் ரூ.30,000/- மற்றும் தேசிய சேமிப்பு பத்திரமாக ரூ.20,000/-மும் வழங்கப்படுகிறது.

2021-2022-ஆம் நிதியாண்டில் மேற்படி திருமண நிதி உதவித் திட்டங்களின் கீழ் 94,700 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**2022-2023-ஆம் ஆண்டு வரவுசெலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.64.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



### 2.2.3 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்

மாறிவரும் காலச் சூழ்நிலைகளுக்கேற்ப பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சார்ந்த பெண்களின் உயர்கல்வியை உறுதி செய்யவும் தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்விச் சேர்க்கை மிகக் குறைவாக இருப்பதைக் கருத்தில்கொண்டும், **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டம்** என்ற திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. பெண்களுக்குக் கல்வி வழங்குதல் என்பது பெண்களின் திறன்கள், அறிவு மற்றும் தன்னம்பிக்கையை வளர்க்கும் சிறந்த உற்பத்தி முதலீடு ஆதலால் அரசுப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் மாணவிகளுக்கு, பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு மற்றும் தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை மாதம் ரூ.1,000

அவர்கள் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படும்.

மாணவிகள் ஏற்கனவே பிற கல்வி உதவித் தொகை பெற்று வந்தாலும் இந்த புதிய திட்டத்தின் கீழ் ஊக்கத் தொகையையும் பெற இயலும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 6 இலட்சம் மாணவிகள் ஒவ்வொரு ஆண்டும் பயன்பெற வாய்ப்புள்ளது.

**2022–2023–ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.697.78 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.4 சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

சமூகத்தில் பெண்களின் நிலையை உயர்த்திட, குறிப்பாக பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ளும் வகையில், அவர்கள் சுயமாக தொழில் புரிந்து



அவர்களின் வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்து கொள்ளவும் இத்திட்டம் உதவுகிறது.

இத்திட்டத்தின் கீழ் மோட்டார் இணைக்கப்பட்ட இலவச தையல் இயந்திரங்கள் அரசால் ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது. 2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.1.35 கோடி செலவில் 2250 நபர்களுக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

**2022–2023–ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.1.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.5 அரசு சேவை இல்லங்கள்

அரசு சேவை இல்லங்கள், ஆதரவற்ற, கைவிடப்பட்ட கைம்பெண்கள் மற்றும் ஏழைப்பெண்கள் ஆகியோருக்கு சிறப்பு பாதுகாப்பு அளித்திடவும், அவர்கள் மீண்டும் தங்கள் வாழ்க்கையை செம்மையாக அமைத்துக் கொள்ளவும் வழிவகை

செய்கிறது. செங்கல்பட்டு, சேலம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஏழு மாவட்டங்களில் அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சேவை இல்லங்களில் உள்ளுறைவோர்களுக்கு தங்கும் இடம், உணவு, சுகாதாரம், பயிற்சி மற்றும் மருத்துவ வசதி போன்றவை அளிக்கப்பட்டு வருகிறது. இச்சேவை இல்லங்களில் உள்ள பெண்களின் திறனை மேம்படுத்த தொழிற்பயிற்சி, கணினிப் பயிற்சியுடன் ஆங்கில திறன் வளர்ப்பு, அலுவலக நிர்வாக பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதல் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

அரசு சேவை இல்லங்களில் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து முடித்த பெண்குழந்தைகள் உயர்கல்வி பயில்வதை ஊக்கப்படுத்திடும் வகையில், தொழில்சார் கல்வி பயின்றிட ரூ.50,000/- மற்றும் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு படித்திட ரூ.30,000/- நிதியுதவி அரசால் வழங்கப்பட்டு வருகின்றது.



அனைத்து சேவை இல்லங்களிலும் உள்ளுறைவோரின் பாதுகாப்பினை உறுதி செய்திட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. 2021-2022-ஆம் ஆண்டில் இவ்வில்லங்களில் 564 குழந்தைகள் தங்கி பயனடைந்து வருகின்றனர்.

**2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.5.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.6 மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

ஆணுக்கு பெண் நிகரானவள் என்று பறை சாற்றும் வகையில் தற்போது பெண்கள் அனைத்து நிலைகளிலும் முன்னேற்ற பாதையை நோக்கி பீடு நடை போடுகின்றனர். தமிழ்நாடு அரசின் பல்வேறு நலத்திட்டங்களும் அவர்களின் வெற்றி பாதையில் பெரும் பங்கு வகிக்கின்றது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்படும் மகளிர் தொழிற் கூட்டுறவு

சங்கங்களில் 18 வயது முதல் 40 வயது நிரம்பிய வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் உறுப்பினர்களாகப் பயனடையலாம். இச்சங்க உறுப்பினர்கள் தாங்கள் வசிக்கும் இடத்தில் இருந்து கொண்டே, தங்கள் இல்ல பணிகளின் ஊடே, பள்ளிக் குழந்தைகளுக்கான சீருடைகள் தைக்கும் பணியினை மேற்கொள்கின்றனர். இதனால் அவர்களின் தனிநபர் வருமானம் உறுதி செய்யப்படுவதுடன், குடும்பத்தின் வருமான சுமையை, குடும்ப தலைவர்களுடன் சேர்ந்து சமன் செய்திட வழி வகுக்கிறது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் 125 மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில், 99 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 1 திருநங்கையர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கம் சமூக நல இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், 25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவு



சங்கங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநர் மற்றும் குழும இயக்குநரின் கட்டுப்பாட்டிலும் செயல்படுகின்றன.

இம்மகளிர் தையற் தொழிற் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் பயன்பெறும் பள்ளி மாணவ/ மாணவியர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை ஆகிய துறைகளின் கீழ் இயங்கும் பள்ளி மாணவ / மாணவியர்களுக்கும் நான்கு இணை சீருடைகள் தைத்து வழங்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இதனால் பெண்களுக்கு வேலை வாய்ப்பு உறுதி செய்யப்படுவதுடன் அன்றாட செலவினங்களுக்கு தேவையான முறையான வருவாயை ஈட்டவும் அவர்களால் முடிகிறது.

**கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அவற்றில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை விவரம்:-**

| வ. எண் | கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 84 | 80,592 |
| 2 | எழுதுபொருள் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் (தையற் பணியிலும் ஈடுபடுகின்றனர்) | 15 | 4,428 |
| 3 | இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 25 | 1,350 |
| 4 | திருநங்கையர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கம் | 1 | 68 |
| **மொத்தம்** | | **125** | **86,438** |

2021-2022-ஆம் கல்வியாண்டில் 38.42 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு நான்கு இணை



சீருடைகள் தைத்து வழங்கப்பட்டு, அதற்கான தையல் கூலி ரூ.81.68 கோடி பள்ளிக் கல்வித்துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

### 2.2.7 குறுகிய கால தங்கும் இல்லம்

ஒன்றிய அரசு 2016-ஆம் ஆண்டில் 'ஸ்வதார்' மற்றும் 'குறுகிய கால தங்கும் இல்லங்கள்' ஆகிய இரண்டு திட்டங்களை ஒன்றிணைத்து "குறுகிய கால தங்கும் இல்லங்கள்" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. சமூக பாதுகாப்பு இயக்குநரகத்தின் கீழ் செயல்பட்டு வந்த இந்த இல்லங்கள் சமூக நல இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

இத்திட்டமானது இக்கட்டான சூழ்நிலையில் உள்ள பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் தங்குமிடம், உணவு, உடை, ஆலோசனை, பயிற்சி, மருத்துவம் மற்றும் சட்ட உதவி போன்றவற்றை வழங்குகிறது.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் ஒரு குறுகிய கால தங்கும் இல்லத்தில் 30 பெண்கள் அதிகபட்சம் 5 ஆண்டுகள் வரை தங்கலாம். 60 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் முதியோர் இல்லங்களுக்கு மாற்றப்படுவார்கள். இந்த இல்லங்களில் 12 வயது வரை ஆண் குழந்தைகளும், 18 வயது வரை பெண் குழந்தைகளும் தங்கள் தாயுடன் தங்கி பயனடையலாம்.

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே முறையே 60:40 என்ற நிதிப் பங்களிப்பில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**2022–2023–ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.5.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



**2.2.8 மகளிர் சக்தி மையம்**

மகளிர் சக்தி மையம் எனும் இத்திட்டம் ஒன்றிய அரசால் 2017–18 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. கிராமப்புற மகளிர் மேம்பாட்டிற்காக அரசு நலத்திட்டங்கள், திறன் பயிற்சிகள், அடிப்படை சட்ட உதவிகள், கல்வியறிவு, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மகளிர் சக்தி மையம் மேற்கொள்கிறது.

இத்திட்டத்திற்கான நிதியானது, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60: 40 என்ற விகித அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இத்திட்டம் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2.2.8.1 மாநில பெண்கள் வள மையம்**

மாநில பெண்கள் வள மையமானது, பெண்களை மையமாகக் கொண்ட ஒருங்கிணைந்த சேவை மையம், பெண்கள் உதவி மையம் போன்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுவதற்கான தொழில்நுட்ப

ஆலோசனை, மகளிரை பாதிக்கக்கூடிய பிரச்சினைகள் குறித்த ஆய்வுகள் மற்றும் பெண்கள் சம்பந்தமான அரசு திட்டங்கள், கொள்கைகள், சட்டங்கள் குறித்து ஆய்வு மற்றும் மதிப்பீடு செய்து அரசு துறைக்கு பொருத்தமான பரிந்துரைகளை மாநில அளவில் வழங்கி வருகிறது.

**2022– 2023 ஆம் ஆண்டு வரவு– செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ38.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.2.8.2 மாவட்ட மற்றும் வட்டார பெண்கள் வள மையங்கள்**

மாவட்ட பெண்கள் வள மையமானது, மாநில மற்றும் வட்டார வள மையங்களுக்கு ஒரு இணைப்பு பாலமாக செயல்பட்டு, அரசு துறை திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை, மாணவ தன்னார்வலர்கள் மூலம் கிராமந்தோறும் மேற்கொண்டு ஏழை எளிய மக்கள் அதிக எண்ணிக்கையில் அத்திட்டங்களில் பயன் பெற உதவி புரிகிறது. முன்னேற விழையும்



இரண்டு மாவட்டங்களான விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டங்களில் தலா 8 வட்டாரங்களில் வட்டார பெண்கள் வளமையங்கள் செயல்படுகின்றன.

**2022– 2023 ஆம் ஆண்டு வரவு– செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ9.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.2.8.3 ஒருங்கிணைந்த சேவை மையம்**

தனியார் மற்றும் பொது இடங்களில், குடும்பங்களில், சமுதாயத்தில் மற்றும் பணிபுரியும் இடங்களில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவிட, ஒன்றிய அரசின் 100 சதவீத நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த சேவை மையம் என்னும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது, பாலினம் சார்ந்த துன்புறுத்தல் மற்றும் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தற்காலிக தங்கும் வசதி, மருத்துவ உதவி, சட்ட உதவி, உளவியல் ஆலோசனை மற்றும் ஆற்றுப்படுத்துதல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த சேவைகள் ஓரிடத்தில்

கிடைக்கும் வகையில், 34 ஒருங்கிணைந்த சேவை மையங்கள் 32 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மையங்கள் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள்/மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகங்களில் செயல்படுகின்றன.

புதிதாக உருவாக்கப்பட்ட இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் தென்காசி ஆகிய நான்கு மாவட்டங்களில் சேவை மையங்கள் அமைக்க ஒன்றிய அரசால் 2021-2022 ஆண்டில் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் புதிதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கு ஒன்றிய அரசிடமிருந்து ஒப்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

மார்ச் 2022 வரை, ஒருங்கிணைந்த சேவை மையங்களின் மூலம் 26,273 மகளிர் பயனடைந்துள்ளனர். அவற்றில் 7,371 புகார்கள் குடும்ப வன்முறையை சார்ந்தவை. இதுவரை 2,493 பாதிக்கப்பட்ட மகளிருக்கு ஒருங்கிணைந்த சேவை



மையங்களில் தற்காலிகமாக தங்குவதற்கு இட வசதி அளிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த சேவை மையங்களுக்கு சொந்த கட்டடம் கட்ட ரூ.48.00 இலட்சம் வீதம் ஒன்றிய அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**2.2.8.4 மகளிர் உதவி எண் - 181**

2018 நவம்பர் முதல் ஒன்றிய அரசின் 100% நிதியுதவியுடன் நாடு முழுவதும் ஒரே சீரான மகளிர் உதவி **எண்.181** ஏற்படுத்தப்பட்டுள்ளது. வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களின் 24 மணி நேர உடனடி மற்றும் அவசர கால அழைப்பை ஏற்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பெண்களுக்கான அரசின் திட்டங்கள் குறித்த விவரங்களை, தகவல் கோரும் பெண்களுக்கு இம்மையம் அளித்து வருகிறது. 2021-22-ஆம் ஆண்டில் தொடர் செலவினமாக

ஒன்றிய அரசால் ரூ.50.53 இலட்சம் மகளிர் உதவி மையத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

மகளிர் உதவி எண் தற்போது சிறுசேரி சிப்காட் தொழிற்பேட்டையில் ஆம்டெக்ஸ் நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2021–22–ஆம் ஆண்டில் பெறப்பட்ட அழைப்புகள் விவரம் பின்வருமாறு:

| தகவல் கோரும் அழைப்புகள் | பிற அழைப்புகள் (தொடர் அழைப்புகள், ஆய்வு அழைப்புகள், மற்றும் பிற). | பரிந்துரை செய்யப்பட்ட அழைப்புகள் | மொத்த அழைப்புகள் |
|---|---|---|---|
| 4,188 | 99,767 | 15,046 | 1,19,001 |

**மகளிர் உதவி எண் வாயிலாக துறை வாரியாக வழங்கப்பட்ட பரிந்துரை சேவைகள்**

| வ. எண் | பரிந்துரை சேவைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த சேவை மையம் | 9149 |
| 2. | காவல் துறை | 3106 |
| 3. | இதர துறை பரிந்துரை | 983 |
| 4. | இதர உதவி எண் | 466 |
| 5. | இணைய தள குற்றம் | 363 |
| 6. | இலவச சட்ட ஆலோசனை | 292 |
| 7. | குழந்தை பாதுகாப்பு அலுவலர் | 241 |
| 8. | மாவட்ட சமூக நலத் துறை | 204 |
| 9. | ஆற்றுப்படுத்துதல் ஆலோசனை | 195 |
| 10. | மனநல ஆலோசனை | 47 |
| **மொத்தம்** | | **15,046** |



### 2.2.8.5 நிர்பயா நிதி

பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கிடும் நோக்கில் 2016–ஆம் ஆண்டில் ஒன்றிய உள்துறை அமைச்சகம் மூலம் நிர்பயா நிதி ஏற்படுத்தப்பட்டது. நாட்டில் சென்னை உட்பட 8 நகரங்களில், பெண்களின் பாதுகாப்பிற்காக, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சென்னை பெருநகர மாநகராட்சிக்கு ரூ.425.06 கோடி மதிப்பில் பெருநகர சென்னை காவல் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை மாநகர போக்குவரத்து துறை மற்றும் சமூக நலத்துறை ஆகிய நான்கு துறைகள்

மூலம் **12** திட்டங்களை செயல்படுத்திட ஒன்றிய அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இந்நிதி 60:40 என்ற விகிதத்தில், ஒன்றிய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் 2018–19–ஆம் ஆண்டு முதல் துறைகளுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டு, செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலம் மகளிர் உதவி எண் சேவையினை வலுப்படுத்திட ரூ.12.96 கோடி இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.9.72 கோடி 2021–2022–ஆம் ஆண்டு வரை பெறப்பட்டது. கூடுதல் பணியாளர்களுடன் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் பெண்கள் உதவி எண் சேவையினை தரம் உயர்த்திடவும், மூன்று ஆண்டுகளுக்கு அச்சேவையினை செயல்படுத்திடவும், ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



மேலும், பெண்கள் உதவி எண்ணிற்கு சிறப்பு வலைத்தளம் உருவாக்கப்பட்டு தகவல் பரிமாற்றம் செய்யும் வசதி, பாதிக்கப்பட்ட பெண்கள் டெலிகான்பரன்ஸ்ங் மூலம் தமக்கு தேவையான சட்ட உதவி, ஆலோசனைகள், காவல்துறை, மருத்துவ உதவி ஆகியவற்றை பெறவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 2.2.8.6 பெண்களுக்கான சமூக நலச் சட்டங்கள்

பெண்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை உறுதிசெய்யும் பொருட்டு, சமூக நலத் துறை கீழ்ககாணும் சமூக நலச் சட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961
2. குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005 மற்றும் விதிகள் 2006
3. பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப்

பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013

4. தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தல்) சட்டம், 2014 மற்றும் தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தல்) விதிகள், 2015.

**2.2.8.7 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005**

2005–ஆம் ஆண்டின் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தில், பெண்கள் பாதுகாப்பாக வன்முறை இல்லாத குடும்பத்தில் வசிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டம் பெண்கள் உரிமையோடு தங்கள் புகுந்த வீட்டில் வாழ்வதற்கான உரிமையையும், அவர்தம் குழந்தைகளுக்கான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பையும் வழங்குகிறது.



**இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

- பாதிக்கப்பட்ட நபர்களிடையே மற்ற வழக்கு விசாரணைகள் நிலுவையிலிருந்த போதிலும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005ன் கீழ் வழக்குகளை பதிவு செய்யலாம்.
- ஒரேவழக்கில் பல தீர்ப்புகளை பெற இச்சட்டம் வழிவகை செய்துள்ளது
- வார்த்தைகள் மற்றும் மனரீதியான கொடுமைகளுக்கும் நிவாரணம் அளிக்கிறது.
- குற்றவியல் அமர்வு நீதிமன்றத்தின் ஆணையினை எதிர்த்து 30 நாட்களுக்குள் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் மேல்முறையீடு செய்யலாம்.

**பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் சேவையளிப்பவர்கள்**

ஒவ்வொரு மாவட்ட சமூகநல அலுவலகத்திலும் ஒரு பாதுகாப்பு அலுவலர் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

இப்பாதுகாப்பு அலுவலர் பெண்களுக்கு ஏற்படும் குடும்ப வன்முறை குறித்து அறிக்கை தாக்கல் செய்து சட்டப் பூர்வமான தீர்வுகளை பெற உதவுவார். குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005–ன் கீழ் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள தொண்டு நிறுவனங்கள் சேவை அளிப்பவர்களாக செயல்படுகிறார்கள்.

**குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்**

| வ. எண். | விவரம் | 2008 – 2021 |
|---|---|---|
| 1 | பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 61,303 |
| 2 | நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 23,805 |
| 3 | பாதுகாப்பு அலுவலரால் முடிக்கப்பட்ட வழக்குகள் | 36,436 |
| 4 | பாதுகாப்பு அலுவலரிடம் விசாரணையில் உள்ள வழக்குகள் | 1,062 |



**2.2.8.8 வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961**

- ❖ வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961ஆம் ஆண்டு இயற்றப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு வரதட்சணை தடுப்பு விதிகள், 2004ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- ❖ இச்சட்டமானது 1989ல் திருத்தம் செய்யப்பட்டு, வரதட்சணை தடுப்பு விதிகள், 2004–ன் படி மாவட்ட சமூக நல அலுவலர்களை வரதட்சணை தடுப்பு அலுவலர்களாக நியமனம் செய்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ❖ காவல்துறை/ நீதிமன்றம், மாவட்ட சமூக நல அலுவலர்களிடமிருந்து உண்மையான அறிக்கையை பெற்ற பிறகு வழக்கை பதிவு செய்கிறது.
- ❖ ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26–ஆம் நாள் வரதட்சணை தடுப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது.

**வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்**

| வ. எண். | விவரம் | 2006 – 2021 |
|---|---|---|
| 1 | மாவட்ட சமூக நல அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 14,447 |

| வ. எண். | விவரம் | 2006 – 2021 |
|---|---|---|
| 2 | ஆற்றுப்படுத்துதல் மூலம் சுமூகமாக தீர்க்கப்பட்ட வழக்குகள் | 11,331 |
| 3 | மாவட்ட சமூக நல அலுவலரால் காவல்துறைக்கு பரிந்துரைக்கப்பட்ட வழக்குகள் | 2,438 |
| 4 | மாவட்ட சமூக நல அலுவலரின் விசாரணையில் உள்ள வழக்குகள். | 678 |

### 2..2.8.9 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள்

பணிபுரியும் பெண்கள் பணிநிமித்தம் தங்கள் வீட்டைவிட்டு வெளியே தங்கவேண்டிய நிலையில் குறைந்த வாடகையில் பாதுகாப்பான தங்கும் விடுதிகள் அவசியமாகிறது. எனவே, தமிழகத்தில் 18 மாவட்டங்களில், பணிபுரியும் மகளிருக்கான 28 அரசு விடுதிகள் நடத்தப்படுகின்றன

### 2..2.8.10 தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதி நிறுவனம்

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் படி, தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் கழகம் லிமிடெட், சிறப்பு திட்ட சாதனமாக (Special Purpose Vehicle) கடந்த 2018–19 நிதியாண்டில் உருவாக்கப்பட்டது.



இந்த நிறுவனம் மகளிர் தங்கும் விடுதிகள், குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லம், குழந்தைகள் பராமரிப்பு நிறுவனம் ஆகியவற்றிற்கு நவீன வசதிகள் உடைய உள்கட்டமைப்பு அமைத்து மேலாண்மை மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை ஏற்று நடத்தும், இந்நிறுவனம் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் நிறுவனத்தின் நிதி பெற்று செயல்படும். சமூக நல இயக்குநர் இதனை செயல்படுத்தும் ஒருங்கிணைப்பாளர் ஆவார்.

இத்திட்டத்தின் நோக்கமானது விடுதிகளை உருவாக்குதல், புதுப்பித்தல், வடிவமைத்தல், கட்டுதல், மேம்படுத்துதல் மற்றும் செப்பனிடுதல் ஆகும்.

### 2.2.8.11 தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை

இந்தியாவின் பொருளாதாரத்தில், தமிழ்நாடு இரண்டாவது பெரிய மாநிலமாக விளங்குகிறது. இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களை விட தமிழ்நாட்டில் வறுமை நிலை குறைவாக

உள்ளது. மாநிலத்தில் தொழிலாளர் பங்களிப்பில் பெண்களின் திறமையான பங்கேற்பினை மேம்படுத்தவும், நிலையான வளர்ச்சி விகிதத்தை அடையவும், மாநில மகளிர் கொள்கை வகுக்கப்படுமென அரசால் அறிவிக்கப்பட்டது.

பெண்களுக்கான புதிய கொள்கையின் கட்டமைப்பானது பெண்களின் பாதுகாப்பு, பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதாகும். ஐக்கிய நாடுகள்– பெண்கள் அமைப்பு, உலக வங்கி, யுனிசெப் போன்ற சர்வதேச நிறுவனங்களும், பிரபல அறிஞர்கள், பெண் ஆர்வலர்கள், உழைக்கும் பெண்கள் போன்ற பங்குதாரர்களும் பங்கேற்ற மண்டல அளவிலான பல்வேறு ஆலோசனை கூட்டங்கள் நடைப்பெற்றன.

இந்த கொள்கை சமூக நீதி, சமத்துவம், சம வாய்ப்பு, சுய மரியாதை ஆகியவற்றில் கவனம் செலுத்தும். ஒருங்கிணைப்பு, வாய்ப்புகள் மற்றும்



வளங்களுக்கான சம அணுகுதல் மற்றும் பெண்களின் உரிமைக்கான ஆதரவு அளிக்கும். சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நல்வாழ்வு இந்த கொள்கையின் அடித்தளமாக இருக்கும்.

**2.3 மூத்த குடிமக்கள் நலன்:**

மூத்த குடிமக்கள் என்பவர் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர் ஆவர். மூத்த குடிமக்கள் உட்பட அனைவரும் மகிழ்ச்சி மற்றும் வசதியுடன் கூடிய முழுமையான நல்வாழ்வு நிறைந்த வாழ்க்கை வாழ தகுதியுடையவர்கள் ஆவர். மூத்த குடிமக்கள் இளைய தலைமுறையினருக்கு அறிவு மற்றும் அனுபவத்தின் கருவூலமாக திகழ்கின்றனர்.

அறிவியல் மற்றும் மருத்துவ முன்னேற்றங்களின் காரணமாக மனித ஆயுட்காலம் அதிகரித்து வருவதன் விளைவாக மூத்த குடிமக்களின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துள்ளது. அடுத்த நாற்பது ஆண்டுகளில் இந்தியாவில் மூத்த

**குடிமக்களின்** எண்ணிக்கை வியக்கத்தகு அளவில் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட 'இந்தியாவில் முதியோர் 2021' அறிக்கையின்படி, 2031–**ஆம்** ஆண்டில் தமிழ்நாட்டில் **மூத்த குடிமக்களின்** எண்ணிக்கை 18.20 சதவீதமாக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது. **மூத்த குடிமக்களின்** எண்ணிக்கை அதிகரிப்பால், மூத்த குடிமக்கள், கண்ணியமான அமைதியான வாழ்க்கையை நடத்துவதற்கு உகந்த மற்றும் பாதுகாப்பான சூழலை வழங்குவது அரசிற்கு பெரும் சவாலாக உள்ளது.

இந்தச் சவால்களைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தின் சமூக மற்றும் அரசியலமைப்புக் கடமைகளை நிறைவேற்றவும், சமூக நீதி மற்றும் மனித உரிமைக் கொள்கைகளை நிலைநிறுத்தவும், மூத்த குடிமக்களுக்கு ஏற்ற சூழலை உறுதி செய்யவும், "தமிழ்நாடு மூத்த குடிமக்களுக்கான மாநிலக் கொள்கை, 2022" வரைவினை அரசு வகுத்துள்ளது.



மூத்த குடிமக்களுக்காக பணிபுரியும் தொண்டு நிறுவனங்கள், சமூக அடிப்படையிலான அமைப்புகள், முதியோர் நல நிபுணர்கள், தன்னார்வலர்கள், மூத்த குடிமக்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் போன்ற பங்குதாரர்களோடு நடத்தப்பட்ட பல்வேறு ஆலோசனை கூட்டங்களின் அடிப்படையில் இவ்வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வரைவுக் கொள்கை தமிழ்நாடு அரசின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, பொது மக்களின் கருத்துக்களும் பெறப்பட்டுள்ளன. மூத்தக் குடிமக்களின் பராமரிப்பானது பல்வேறு துறைகள் சம்மந்தப்பட்டதால் அத்துறைகளின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் பெறுவதற்காக வரைவுக் கொள்கை அனுப்பப்பட்டுள்ளது.

மூத்த குடிமக்களின் உரிமைகளை நிலைநிறுத்த வேண்டிய காலக்கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதால், அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுடன், அமைதியான

வாழ்க்கையை நடத்துவதற்கு உகந்த பாதுகாப்பான சூழலை வழங்குவதில் அரசு முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டுவருகிறது. இந்நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையானது ஆதரவற்ற மூத்த குடிமக்களின் அடிப்படை தேவைகளான உணவு, உடை, தங்குமிடம் மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குவதற்கென முதியோர் இல்லங்கள், மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த வளாகங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும், மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டங்கள் மற்றும் நிறுவனம் சாராத பராமரிப்பு சேவைகளை வழங்குவதுடன் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007–இல் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளையும் நிறைவேற்றுகிறது .



### 2.3.1 பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு இச்சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்படுகிறது. தமிழ்நாடு அரசு, இச்சட்டத்தின் கீழ் மாநில விதிகளை 31.12.2009 அன்று வெளியிட்டுள்ளது.

பெற்றோர்கள் மற்றும் மூத்த குடிமக்களைப் பராமரிப்பது அவர்களின் குழந்தைகள் மற்றும் சட்டப்பூர்வ வாரிசுகளின் கடமையாகும். மூத்த குடிமக்களின் உடல் நலம், மனநலம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான பிரச்சனைகளுக்கு, பராமரிப்பு தீர்ப்பாயங்கள் மூலம் நிவாரணம் பெற இச்சட்டம் வழிவகை செய்கிறது.

**சட்டத்தின் சிறப்பம்சங்கள்**

ஒரு மூத்த குடிமகன் அல்லது பெற்றோர், தனது வருமானத்தில் இருந்தோ அல்லது அவருக்குச்

சொந்தமான சொத்தில் இருந்தோ தன்னைப் பராமரிக்க முடியாத நிலையில், கீழ்க்கண்டவாறு உள்ள தனது குழந்தைகள்/ சட்டப்பூர்வ வாரிசுகளிடமிருந்து பராமரிப்புத் தொகையைப் பெற விண்ணப்பம் செய்ய உரிமை உண்டு:–

- இச்சட்டம், மூத்த குடிமக்கள் மற்றும் ஈன்றெடுத்த, தத்தெடுத்த, மாற்றான் தந்தை அல்லது மாற்றான் தாய் ஆகியவர்களை உள்ளடக்கியது.
- குழந்தைகள்/ சட்டப்பூர்வ வாரிசுகளால் பராமரிக்கப்படாமல் பாதிக்கப்பட்ட அனைத்து மூத்தக் குடிமக்களும் இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பராமரிப்பு தீர்ப்பாயங்களுக்கு மனு அளித்து அதிகபட்சம் ரூ.10,000/– வரை ஜீவனாம்சமாக பெற்றுக்கொள்ளலாம்.



- இச்சட்டத்தின் கீழ் ஜீவனாம்சம் கோரி பெறப்பட்ட விண்ணப்பங்கள் 90 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும்.
- பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு வழங்கக்கூடிய பொறுப்பில் உள்ளவர் மூத்த குடிமக்களை கைவிட்டால் அவர்களுக்கு, 3 மாதங்கள் சிறை தண்டனை அல்லது ரூ.5,000/– வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.
- இச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் முதல் ஒரு பெற்றோர் அல்லது மூத்த குடிமகன் தங்களது பிள்ளைகள் அல்லது வாரிசுதாரர்கள் தங்களை பராமரிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் சொத்துக்களை தானசெட்டில்மெண்ட் செய்த பின், அவர்கள் அதன்படி நடக்காவிட்டால் பராமரிப்பு தீர்ப்பாயங்களில், அந்த தான செட்டில்மெண்டை ரத்து செய்யக் கோரி விண்ணப்பம் செய்யலாம்.

### 2.3.2 சட்டத்தின் கீழ் குறை தீர்க்கும் வழிமுறை

**பாராமரிப்பு தீர்ப்பாயங்கள்**

இச்சட்டத்தின் பிரிவு 5–ன் கீழ் வழக்கை தீர்ப்பதற்காகவும், முடிவு செய்வதற்காகவும் மற்றும் பாராமரிப்பு ஆணை வழங்குவதற்காகவும் அரசானது இச்சட்டத்தின் பிரிவு 7–ன் கீழ் வருவாய் கோட்ட அலுவலர்களை பாராமரிப்பு தீர்ப்பாயங்களாக நியமித்துள்ளது. இதுபோன்று 94 தீர்ப்பாயங்கள் தமிழ் நாட்டில் செயல்படுகின்றன. இத்தீர்ப்பாயம் உரிமையியல் நீதிமன்றங்களுக்கான அனைத்து அதிகாரங்களையும் கொண்டுள்ளது.

**சமரச அலுவலர்**

மாநில அரசானது, மாவட்ட சமூக நல அலுவலர்களை சமரச அலுவலர்களாக நியமித்துள்ளது. பாதிக்கப்பட்ட முதியவர் மற்றும் எதிர் தரப்பினர் இருவரும் சமரசம் செய்து கொள்ள விருப்பப்பட்டால், தீர்ப்பாயம் அவ்வழக்கை சமரச அலுவலர் அல்லது இரு தரப்பினரும் ஒப்புக்கொண்ட நபரை சமரச அலுவலராக



நியமித்து, ஒரு மாத காலத்திற்குள் தீர்வு காண வழக்கினை சம்மந்தப்பட்ட ஆவணங்களுடன் அனுப்பலாம்.

**பராமரிப்பு அலுவலர்**

இச்சட்டத்தின் பிரிவு 18(1) ன் கீழ் அரசு, மாவட்ட சமூக நல அலுவலர்களை பராமரிப்பு அலுவலர்களாக நியமித்துள்ளது. இவர் பராமரிப்பு தீர்ப்பாயங்களிலோ அல்லது மேல்முறையீடு தீர்ப்பாயத்திலோ அப்பெற்றோர் விரும்பினால் அவர்கள் சார்பில் தோன்றி அவர்கள் தரப்பு வாதத்தை உரைக்கலாம்.

**மேல்முறையீடு தீர்ப்பாயம்**

பராமரிப்பு தீர்ப்பாயத்தின் ஆணையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய மாநில அரசு, மாவட்ட ஆட்சியர்களை மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களாக நியமித்துள்ளது.

தீர்ப்பாயத்தின் ஆணைகளுக்கு எதிராக 60 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம். எனினும்,

மேல்முறையீட்டாளர் தகுந்த காரணத்தினால் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் மேல்முறையீடு செய்ய இயலவில்லை என்று கருதினால் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் மேல்முறையீட்டு விண்ணப்பத்தினை ஏற்றுக்கொள்ளலாம்.

### 2.3.3 மாநில மற்றும் மாவட்ட அளவிலான மூத்த குடிமக்கள் நலக் குழு

தலைமைச் செயலாளர் அவர்களை தலைவராக கொண்டு மாநில அளவிலான மூத்த குடிமக்கள் நலக்குழுவும் மாவட்ட ஆட்சியர்களை தலைவராக கொண்டு மாவட்ட அளவிலான மூத்த குடிமக்கள் நலக்குழுவும் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007–னை சிறப்பாக செயல்படுத்துவதை உறுதிசெய்வதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



### 2.3.4 மாநில அரசு நிதியின் கீழ் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள்

தங்கள் குடும்பங்களால் கைவிடப்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற முதியோர்களின் வாழ்க்கையை பாதுகாக்க, தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்களுக்கு மாநில அரசு பராமரிப்பு மானியம் வழங்கி வருகிறது. இவ்வில்லங்களில் உணவு, உடை, தங்குமிடம், சுகாதாரம் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் போன்றவை வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லங்களிலும் 40 முதியோர்கள் தங்கி பயன்பெறலாம். ஒரு முதியோருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,200/– உணவு மானியமாக வழங்கப்படுகிறது.

2021–2022–ஆம் நிதியாண்டில், 21 முதியோர் இல்லங்களில் 711 முதியோர்கள் பயனடைந்துள்ளனர். இவ்வில்லங்களுக்கென ரூ.102.01 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான

செலவினம் மாநிலம் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு இடையே 5:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

**2022– 2023 ஆம் ஆண்டு வரவு– செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ1.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.5 மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள்

மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் ஒருவருக்கொருவர் தங்கள் அன்பையும் பாசத்தையும் பகிர்ந்து கொள்ளும் விதமாக ஒருங்கிணைந்த வளாகங்கள் 2011–2012 ஆண்டு முதல் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஒருங்கிணைந்த வளாகங்கள் மாநில அரசின் நிதியுதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகத்திலும் 25



முதியவர்கள் மற்றும் 25 குழந்தைகள் தங்க வைக்கப்படுகின்றனர். 2021–22 ஆம் நிதியாண்டில், 43 ஒருங்கிணைந்த வளாகங்கள் செயல்பட்டு வருகின்றன, இதில் 959 குழந்தைகள் மற்றும் 989 மூத்த குடிமக்கள் பயனடைந்துள்ளனர். மாநில அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் முறையே 75:25 என்ற விகிதத்தில் ரூ.590.47 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2022– 2023 ஆம் ஆண்டு வரவு– செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.6.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.6 மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம்:

தற்போது கூட்டுக் குடும்பம் என்ற அழகிய குடும்ப அமைப்பு பல்வேறு சமூக, பொருளாதார காரணிகளால் சீர்குலைந்து தனிக் குடும்பப் போக்கு உருவாகியுள்ளது. இத்தகைய போக்கினால், மூத்த குடிமக்கள் தனிமையான சூழலுக்கு தள்ளப்படுகிறார்கள். இது மூத்த குடிமக்களுக்கு

மன/உடல் மற்றும் நிதி ரீதியான பாதிப்பிற்கு வழிவகுக்கிறது. மூத்த குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தைத் மேம்படுத்த, 2016-2017 ஆம் ஆண்டு முதல் மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் உணவு, தங்குமிடம், மருத்துவப் பராமரிப்பு மற்றும் பொழுதுபோக்கு போன்ற அடிப்படை வசதிகளை ஒன்றிய அரசு வழங்குவதன் மூலம் மூத்த குடிமக்கள் பயனுள்ள ஆக்கப்பூர்வமான வாழ்கையை கழிக்கின்றனர்.

அரசு சாரா நிறுவனங்களால் நடத்தப்படும் 66 முதியோர் இல்லங்களுக்கு 90:10 என்ற விகிதத்தில் ஒன்றிய அரசு நேரடியாக மானியம் வழங்குகிறது. இந்தத் திட்டம் ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது. இவ்வில்லங்கள் மூலம், வீடற்ற 60 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற மற்றும் குடும்பத்தால் கைவிடப்பட்ட ஆதரவற்ற முதியோர்களுக்கு வாழ்வாதாரம், உணவு, உடை,



தங்குமிடம் மருத்துவ உதவி மற்றும் பொழுதுபோக்கு சேவைகள் வழங்கி பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 3 நடமாடும் மருத்துவப் பிரிவுகள், 2 தொடர் பராமரிப்பு இல்லங்கள், 1 இயன்முறை சிகிச்சை மற்றும் வட்டார வள மையத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. 2021-22-ஆம் ஆண்டில், 72 திட்டங்களுக்கு ரூ.13.58 கோடி செலவினத்தில் 3,048 முதியோர்கள் பயனடையும் வகையில், மாநில அரசினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

### 2.3.7 முதியோருக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம்

ஐக்கிய நாடுகள் சபை ஜூன் 15-ஆம் தேதியை உலக முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தினமாக அறிவித்துள்ளது. இத்தினம் மூத்த குடிமக்களைப் பாதுகாக்கவும், ஆதரவளிக்கவும், விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் மாநில அரசால் அனுசரிக்கப்படுகிறது. இந்நாளில் பள்ளி/கல்லூரி மாணவர்கள் மற்றும் அரசு ஊழியர்கள்

முதியோருக்கு எதிரான கொடுஞ்செயலை தடுக்கும் உறுதிமொழி எடுக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**2022– 2023 ஆம் ஆண்டு வரவு– செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.3.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.3.8 சர்வதேச முதியோர் தினம்**

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் 14–ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி முதியோர்களை மதிக்கும் வகையிலும், அவர்களின் சேவைகளை போற்றும் வகையிலும், சர்வதேச முதியோர் தினம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 1–ம் தேதி தமிழ்நாட்டில் மாநில மற்றும் மாவட்ட அளவில் கொண்டாடப்படுகிறது.

"**14567**" என்ற முதியோர் உதவி எண் மற்றும் 2007–ஆம் ஆண்டிற்கான பெற்றோர் மற்றும்



மூத்த குடிமக்களின் பராமரிப்பு நலச் சட்டத்தின் முக்கிய அம்சங்களை சென்னை மாவட்டத்தில் மெட்ரோ ரயில்களில் பலகை (Panel Board) மூலம் பரப்பப்பட்டுள்ளதோடு மாவட்ட அளவிலும் முதியோர்களை கௌரவிக்கும் வகையில் இத்தினம் கடந்த ஆண்டு கொண்டாடப்பட்டது.

**2022– 2023 ஆம் ஆண்டு வரவு– செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.5.23 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.3.9 மூத்த குடிமக்கள் உதவி எண் 14567**

இந்தியா முழுவதற்கும் பொதுவான, மூத்த குடிமக்கள் உதவி எண் "14567" ஒன்றிய அரசால் 28.04.2021 முதல் அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை சேவைகளை வழங்குவதற்காக தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் ஒருங்கிணைப்புடன்

தொடங்கப்பட்டது. முதியோர் உதவி எண்ணை இயக்கும் நிறுவனத்திற்கு 100 சதவீத நிதி உதவியை ஒன்றிய அரசு வழங்குகிறது. 2021–2022–ஆம் ஆண்டிற்கு ரூ.1.67 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மூத்த குடிமக்கள் உதவி எண் 14567–ஐ தொடர்பு கொள்ளும் மூத்த குடிமக்களுக்கு கீழ்காணும் சேவைகள் வழங்கப்படுகின்றன:–

- மீட்பு உதவி
- முதியோர் இல்லங்கள் பற்றிய தகவல்கள்
- மூத்த குடிமக்கள் நலத்திட்டங்கள் பற்றிய தகவல்கள்
- மனநல ஆலோசனை
- தமிழ்நாடு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 குறித்த சட்ட வழிகாட்டுதல்.



**உதவி எண் அழைப்புகளின் விவரங்கள்:–**

| மாதம் | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அழைப்புகள் | நடவடிக்கை எடுக்க தேவையற்ற அழைப்புகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 17.05.2021 முதல் 31.05.2021 வரை) | 595 | 620 | 1,215 |
| ஜூன் – 2021 | 4,952 | 5,572 | 10524 |
| ஜூலை – 2021 | 1,212 | 3,882 | 5094 |
| ஆகஸ்டு – 2021 | 529 | 2,177 | 2706 |
| செப்டம்பர்– 2021 | 820 | 4,021 | 4841 |
| அக்டோபர்– 2021 | 671 | 4,214 | 4885 |
| நவம்பர் – 2021 | 582 | 3,176 | 3758 |
| டிசம்பர் – 2021 | 352 | 2,493 | 2845 |

| மாதம் | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அழைப்புகள் | நடவடிக்கை எடுக்க தேவையற்ற அழைப்புகள் | மொத்தம் |
|---|---|---|---|
| ஜனவரி – 2022 | 610 | 2,249 | 2859 |
| பிப்ரவரி – 2022 | 358 | 1,946 | 2304 |
| மார்ச் – 2022 | 375 | 2,375 | 2750 |
| **மொத்தம்** | **11,056** | **32,725** | **43781** |

மார்ச் – 2022 வரை பெறப்பட்ட 43,781 அழைப்புகளில் 11,056 அழைப்புகள் மூத்த குடிமக்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அழைப்புகளாகவும், மீதம் உள்ள 32,725 அழைப்புகள் திட்டம் தொடர்பில்லாத நடவடிக்கை எடுக்கத் தேவையற்ற அழைப்புகளாகவும், (எடுப்பதற்கு முன் துண்டிக்கப்பட்ட அழைப்புகள், தொந்தரவு தரும் அழைப்புகள், வழங்கப்படும் சேவைகள் தவிர பிற சேவைகள் குறித்து பெறப்படும் அழைப்புகள் மற்றும்



முதியோர் அல்லாதவர்களிடமிருந்து பெறப்படும் அழைப்புகள்) பெறப்பட்டுள்ளது.

**2.3.10 மூத்த குடிமக்களுக்கான தேசிய செயல் திட்டம்**

மூத்த குடிமக்களின் நலனை உறுதி செய்வதற்காக, இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் 2019–2025–ஆம் ஆண்டிற்கான, மூத்த குடிமக்களுக்கான தேசிய செயல் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இந்த செயல் திட்டம், தேசிய கொள்கை மற்றும் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007–ன் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. மூத்த குடிமக்களின் முன்னுரிமைகள் மற்றும் தேவைகளை நிறைவேற்ற, இச்செயல் திட்டத்தில் பின்வரும் 10 கூறுகள் சேர்க்கப்பட்டுள்ளன:–

i. நிதி பாதுகாப்பு
ii. சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து
iii. தங்குமிடம் மற்றும் முதியோர் நலன்

iv. மூத்த குடிமக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கான பாதுகாப்பு

v. தலைமுறைகளுக்கிடையே பிணைப்புடன் கூடிய பயனுள்ள ஆக்கபூர்வமான முதுமை.

vi. முதியோருக்கு ஏற்ற போக்குவரத்து வசதிகள் மற்றும் உகந்த சூழலை உருவாக்குதல்.

vii. விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாடு.

viii. சமுதாயத்தில் முதியோர் சார்ந்த பொருளாதார நடவடிக்கள், முதியோர்நேய உபகரணங்கள் மற்றும் சேவைகளை ஊக்குவித்தல்.

ix. ஆராய்ச்சி மற்றும் ஆய்வு.

x. திட்ட மேலாண்மை

மூத்த குடிமக்களுக்கான தேசிய செயல் திட்டத்தை மாநில அளவில் செயல்படுத்திட,



ரூ.1,18,00,000/– நிதி கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:–

| வ. எண் | திட்டங்கள் | நிதி ஒதுக்கீடு (ரூ.) |
|---|---|---|
| 1. | மூத்த குடிமக்களின் தரவுத்தளத்தை உருவாக்குதல் | 25,00,000 |
| 2. | மூத்த குடிமக்களுக்கான செயலியை உருவாக்குதல் | 15,00,000 |
| 3. | மூத்த குடிமக்களுக்கான விழிப்புணர்வு உருவாக்கும் திட்டம் | 33,00,000 |
| 4. | திறன் மேம்பாடு | 15,00,000 |
| 5. | நடமாடும் மருத்துவப் பிரிவு | 30,00,000 |
| **மொத்தம்** | | 1,18,00,000 |

**2.3.11. தமிழ்நாடு மாநில மூத்த குடிமக்களுக்கான வரைவு கொள்கை, 2022**

மூத்தக் குடிமக்கள் கண்ணியத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்கும் சுரண்டல் மற்றும் மன / உடல் ரீதியான துன்புறுத்தல்களிலிருந்து விடுபடுவதற்கான உரிமைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு கடந்த ஆண்டு மூத்த குடிமக்களுக்கான

தமிழ்நாடு மாநிலக் கொள்கை வகுக்கப்படும் என அறிவித்தது. ஹெல்ப் ஏஜ் இந்தியா, ஜே–பால் தெற்காசியா, தமிழ்நாடு மூத்தக் குடிமக்கள் மன்றங்கள், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை சமூகப் பணி கல்லூரி போன்ற தொழில்நுட்ப பங்குதாரர்களுடன் இணைந்து தொடர் கூட்டங்கள், பட்டறைகள் மற்றும் ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளன. ஆலோசனை கூட்டங்களில் பல்வேறு விவாதங்களுக்குப் பிறகு, மூத்தக் குடிமக்கள் தொடர்பான தமிழ்நாடு மாநிலக் கொள்கை, 2022 குறித்த வரைவுக் கொள்கை உருவாக்கப்பட்டு, பொதுமக்கள் மற்றும் பிறரிடமிருந்து கருத்துக்களைப் பெறுவதற்காக இணைய தளத்தில் வெளியிடப்பட்டது. பெறப்பட்ட பரிந்துரைகள்/ கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு வரைவுக் கொள்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், முதியோர் பராமரிப்பு பல்வேறு துறைகளால் கவனிக்கப்பட்டு வருவதால் சுகாதாரத்துறை, உள்துறை, போக்குவரத்துத் துறை,



வருவாய்த் துறை போன்ற சார்பு துறைகளின் மதிப்புமிக்க உள்ளீடுகள், கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பெறுவதற்காக, வரைவுக் கொள்கை அனுப்பப்பட்டுள்ளது. அவை பெறப்பட்டவுடன் வரைவுக் கொள்கை இறுதி செய்யப்பட்டு வெளியிடப்படும்.

மூத்த குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், வாழ்வாதாரம்/ வருமானப் பாதுகாப்பு, வீட்டுவசதி மற்றும் சுற்றுச்சூழல், பாதுகாப்பு வழிமுறைகள், நிறுவன பராமரிப்பு, விழிப்புணர்வு மற்றும் கல்வி, ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்துதல், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு மற்றும் மூத்தக் குடிமக்களுக்கான தனி இயக்குநரகத்தை உருவாக்குதல் போன்றவற்றில் மூத்த குடிமக்களுக்கான மாநில வரைவு கவனம் செலுத்துகிறது.

**2.4 திருநங்கையர் நலன்**

**திருநங்கைகளும் இந்த சமுதாயத்தில் ஓர் அங்கம் என்பதை உணர்ந்து, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக "தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியத்தை" 15–4–2008 அன்று தமிழ்நாடு**

அரசால் ஏற்படுத்தப்பட்டது. திருநங்கைகளின் நலன், சமூக பாதுகாப்பு, சமூக அங்கீகாரம் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திருநங்கைகளின் நலனை மேம்படுத்தும் விதமாக, "திருநங்கைகள்" என்ற கைபேசி செயலி உருவாக்கப்பட்டு அவர்களது சுய விவரங்கள் பதிவு செய்யப்பட்டு அடையாள அட்டை பெறுவது எளிமையாக்கப்பட்டுள்ளது.

திருநங்கைகள் நலவாரியத்தின் மூலம் திருநங்கைகள் பின்வரும் சேவைகளை பெறுவதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது: –

- அடையாள அட்டை
- குடும்ப அட்டை
- வீட்டு மனை பட்டா
- குடியிருப்பு வீடுகள்
- தையல் இயந்திரம்
- உயர் கல்வி உதவித்தொகை
- சுய உதவி குழுக்கள் உருவாக்குதல்.



- திருநங்கையர் வாழ்வாதாரத்தினை உயர்த்திடும் வகையில் தொழில் செய்திட மானியத் தொகை ரூ.50,000/– வரை வழங்கப்பட்டு வருகிறது.

திருநங்கைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், 40 வயதிற்கு மேற்பட்ட திருநங்கையருக்கு மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1000/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. 2021–2022–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ், 1071 திருநங்கையர் பயனடைந்துள்ளனர்.

திருநங்கையர்களில் தங்களுடைய தனித் திறமையால் பல்வேறு துறைகளில் முன்னேறியவர்கள் மற்றும் திருநங்கையர் நலனுக்காக சிறப்பாக பணியாற்றிய திருநங்கையர்களை ஊக்குவிக்கும் விதமாக, திருநங்கையர் தினமான ஏப்ரல் 15–அன்று ஒரு திருநங்கைக்கு ரூ.1,00,000/க்கான காசோலை மற்றும் சான்றிதழ் அடங்கிய மாநில அளவிலான "திருநங்கைக்கான விருது" 2020–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், திருநங்கைகள் பாதுகாப்பான பயணம் மேற்கொள்வதற்கு ஏதுவாக சாதாரண கட்டண நகர பேருந்துகளில் கட்டணமில்லா பயண வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 5.27 இலட்சம் பயணங்களை திருநங்கைகள் மேற்கொண்டுள்ளனர்.

திருநங்கைகள் சுயதொழில் துவங்கிட மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக ரூ.72.55 இலட்சம் செலவினத்தில் 141 திருநங்கைகள் பயனடைந்துள்ளனர்.

திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், திருநங்கைகளுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும், 20 திருநங்கைகளுக்கு சென்னை அண்ணா மேலாண்மை நிறுவனம் மூலம் திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.6.19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



## 2.5 தமிழ்நாடு மகளிர் ஆணையம்

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான மனுக்களை விசாரிக்கவும், பெண்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்திடவும் சட்டரீதியான அமைப்பான (Statutory Body) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 2008-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை விசாரணை செய்து உடனடியாக தீர்வு காண இவ்வாணையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாணையம் பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை ஆராய்ந்து உரிய தீர்வுகளை அரசுக்கு பரிந்துரைக்கிறது. மேலும், பெண்கள் தொடர்பான சமூக நீதி சட்டங்களான வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம் 2007, பணிபுரியும் இடங்களில் ஏற்படும் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும்

(தடுப்பு, தடை மற்றும் தீர்வு)சட்டம், 2013 ஆகிய சட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படுவதை இவ்வாணையம் உறுதி செய்கிறது.

மேலும், தேசிய மகளிர் ஆணையத்தின் உதவியோடு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மாவட்டந்தோறும் பெண்களுக்கான சட்ட விழிப்புணர்வு முகாம்களை நடத்திவருகிறது. நடைப்பயணம், பேரணி போன்ற பல்வேறு சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாநில மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படுகின்றன.

**2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.102.81 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.6 தமிழ் நாடு சமூக நல வாரியம்**

தமிழ்நாட்டில் 1954-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்து வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பெண்கள் மற்றும்



குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக செயல்படுகிறது. இவ்வாரியம், ஒன்றிய சமூக நல வாரியத்தின் திட்டங்கள் மற்றும் மாநில அரசின் திட்டங்கள் நன்முறையில் செயல்படுத்தப்படுவதை கண்காணித்தும் வருகிறது.

தமிழ்நாடு சமூக நல வாரியம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு உதவி செய்து பெண்களுக்கு கல்வி, பயிற்சி, விழிப்புணர்வு மற்றும் குடும்ப நல ஆலோசனை ஆகியவை வழங்கி வருகிறது.

**2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.113.49 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.6.1 குடும்ப ஆலோசனை மையம் (மாநில அரசு நிதியுதவி)**

தம்பதிகளுக்கும் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கி,

சமூகத்தின் அடிப்படை அங்கமான குடும்பங்கள் பிரிந்துவிடாமல் பாதுகாத்து, குடும்ப ஒற்றுமையை மேம்படுத்துவதே குடும்ப ஆலோசனை மையங்களின் நோக்கமாகும். தங்களது குடும்ப பிரச்சனைகளுக்கு தீர்வு காண விரும்புவோர் இம்மையங்களை அணுகலாம்.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும் பெண்கள், குழந்தைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு மையத்திலும் உள்ள இரண்டு தகுதி வாய்ந்த ஆலோசகர்கள் மூலம் ஆலோசனைகள் வழங்கியும், உரிய துறைகளுக்கு பரிந்துரைத்தும், குடும்ப ஆலோசனை மையம் செயல்பட்டு வருகின்றது.

வரதட்சணைக் கொடுமைகள், குடிப்பழக்கத்தால் ஏற்படும் குடும்ப பிரச்சனைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்கும் மற்றும் எய்ட்ஸ் நோயாளிகளுக்கும், இம்மையம் தக்க ஆலோசனைகளையும், உரிய வழிகாட்டுதல்களையும் வழங்கி உதவி வருகின்றது.



சென்னை, திருவள்ளூர், திருவாரூர், விழுப்புரம் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் ஐந்து தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் ஒவ்வொரு குடும்ப ஆலோசனை மையத்திற்கும் மானிய உதவியாக தலா ரூ.1,80,000/- வீதம் தமிழ்நாடு சமூக நல வாரியம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

**2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.10.06 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.6.2 குடும்ப ஆலோசனை மையம் (ஒன்றிய அரசு மானியம்)

ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் 1984-ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் குடும்ப ஆலோசனை மையம் தமிழ்நாடு சமூக நல வாரியம் மூலமாக துவங்கப்பட்டது.

தற்போது தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 56 மையங்களில் 2 மையங்கள் சென்னை (புழல்) மற்றும் வேலூரில் உள்ள பெண்கள் மத்திய சிறைச்சாலையில்

செயல்பட்டு வருகிறது. மூன்று மையங்கள் முறையே காவல் துறை ஆணையரகம், ஆயிரம் விளக்கு மற்றும் பூக்கடையில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள 51 மையங்கள் 2018–19–ஆம் ஆண்டு முதல் மாநில அரசு அலுவலகங்களான மாவட்ட ஆட்சியர் வளாகம், மாவட்ட சமூக நல அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு குடும்ப ஆலோசனை மையங்களில் 2 குடும்ப ஆலோசகர்கள் பணிபுரிகிறார்கள்.

தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் மூலம் 2020–21–ஆம் ஆண்டில் ரூ.182.40 இலட்சம் மானியமாக குடும்ப ஆலோசனை மையத்திற்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 66,424 நபர்கள் பயனடைந்துள்ளனர்.



## 2.7 மாநில விருதுகள்

### 2..7.1 அவ்வையார் விருது

அவ்வையார் விருது சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் மிக சிறந்து விளங்கும் மகளிருக்கு சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8–ம் தேதி அன்று ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வையார் விருது பெறுபவர், 8 கிராம், எடையுள்ள தங்கப்பதக்கம், ரூ.1.00/– இலட்சம் காசோலை, சால்வை மற்றும் சான்று ஆகியவை வழங்கி கௌரவப்படுத்தப்படுகிறார்.

### 2.7.2 பெண்களுக்காக சிறந்த சேவை புரிந்த நிறுவனத்திற்கான விருது மற்றும் சிறந்த சமூக சேவகர் விருது

ஒவ்வொரு ஆண்டும், சுதந்திர தினத்தன்று, பெண்களுக்காக சிறப்பாக பணியாற்றிய சிறந்த சமூக சேவகர் மற்றும் பெண்களுக்காக சிறப்பாக

தொண்டாற்றிய சிறந்த நிறுவனத்திற்கு சுதந்திர தின விருது வழங்கப்படுகிறது. சிறந்த சமூக சேவகர்களுக்கு 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சால்வை மற்றும் சான்று ஆகியவை வழங்கப்படுகின்றன. சிறந்த நிறுவனத்திற்கு ரூ.50,000/- ரொக்கப் பரிசுடன் சால்வை மற்றும் தங்கப் பதக்கமும் வழங்கப்படுகின்றன.



## அத்தியாயம் – 3

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

### 3.1 மதிய உணவு திட்டம்

கல்வி என்பது ஒருவருடைய அறிவினை திறக்கக்கூடிய திறவுகோல். ஊட்டச்சத்துடன் கூடிய கல்வி என்பது குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடித்தளமாகிறது. மதிய உணவுத் திட்டம், பள்ளி செல்லும் குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவைகளை நிறைவு செய்திடும் பொருட்டு அனைத்து அரசு தொடக்கப்பள்ளிகளிலும் முதன்மைத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. சத்துணவுத் திட்டம், குழந்தைகளை தவறாமல் பள்ளிக்கு செல்ல தூண்டுவது மட்டுமல்லாமல் வகுப்பறையில் பசியின்றி படிக்கவும் உதவுகிறது. இத்திட்டம் குழந்தைகளின் ஆரோக்கியத்தினையும், கல்வியினையும் மேம்படுத்துகிறது மற்றும் இந்தியாவின் வருங்கால குடிமக்களாக இருக்கும் குழந்தைகளின் ஊட்டச்சத்தினை உறுதி செய்கிறது. சரிவிகித

சத்தான உணவினை வழங்குவதன் மூலம் நீண்ட காலத்திற்கு குழந்தைகளிடையேயான ஊட்டச்சத்து குறைபாட்டினை போக்குவதன் மூலம் மனித வளர்ச்சி மேம்படுத்தப்படுகிறது என்பதையும் திட்டத்தின் வரலாறு தெளிவாக பிரதிபலிக்கிறது.

1962–ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் திரு. கே.காமராசர் அவர்களால் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மதிய உணவு திட்டம் தொடங்கப்பட்டது. 1982ல் சத்துணவு திட்டமாக தொடங்கப்பட்டது. குழந்தைகளுக்கு தேவையான ஊட்டச்சத்து வழங்கப்படுவதை உறுதி செய்திட ஏதுவாக இத்திட்டத்தினை மெருகேற்றும் வகையில் சத்துணவில் முட்டை வழங்கும் நடைமுறை 1989ல் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் அறிமுகப்படுத்தப்படுத்தப்பட்டது.



## 3.2 திட்டத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும்

- குழந்தைகளை தவறாமல் பள்ளிக்கு செல்ல தூண்டுதல்.
- மாணவர் சேர்க்கையினை அதிகரித்தல், மற்றும் பள்ளி இடை நிற்றலைத் தடுத்தல்.
- அனைவருக்கும் ஆரம்ப கல்வி வழங்குதல்.
- குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலையினை மேம்படுத்துதல் மற்றும் எழுத்தறிவு விகிதத்தினை அதிகரித்தல்.
- சத்துணவுத் திட்டத்தில் பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்குவதின் மூலம் அவர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.

## 3.3 திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

i. 1–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் தொடக்கப்பள்ளி குழந்தைகள், மற்றும் 6–ஆம் வகுப்பு முதல் 10 –ஆம் வகுப்பு வரை பயிலும் உயர் தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளி குழந்தைகளுக்கு சுவையான சூடான சத்தான கலவை சாதம், மசாலா முட்டைகளுடன் ஓர் ஆண்டில் மொத்தம் 220 வேலைநாட்களிலும் வழங்கப்படுகிறது.

ii. 15 மாவட்டங்களிலுள்ள தேசிய குழந்தை தொழிலாளர் சிறப்பு மையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள குழந்தைகளுக்கு ஓர் ஆண்டில் 312 நாட்களுக்கு சுவையான சூடான சத்தான கலவை சாதம், மசாலா முட்டைகளுடன் வழங்கப்படுகிறது.

iii. உணவு உரிமை விதிமுறைகள்– தொடக்கப் பள்ளிகளில் (1 முதல் 5ம் வகுப்பு வரை) பயிலும் குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு 100 கிராம் அரிசி மற்றும் உயர்தொடக்க மற்றும் உயர்நிலை பள்ளிகளில் (6 – 10ம் வகுப்பு வரை) பயிலும் குழந்தைகளுக்கு 150 கிராம் அளவு அரிசி என்ற கணக்கீட்டின்படி நாளொன்றுக்கு வழங்கப்படுகிறது.



## 3.4 பரிணாம வளர்ச்சி

| வருடம் | சத்துணவுத் திட்டத்தின் வளர்ச்சி |
|---|---|
| 1925 | சென்னை மாநகராட்சியில் தொடங்கப்பட்டது |
| 1962 | தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மதிய உணவு திட்டம் தொடங்கப்பட்டது. |
| 1982 | 5+ முதல் 9+ வயது வரை பள்ளி செல்லும் ஏழை குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. |
| 1984 | 6–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. |
| 1989 | பள்ளி செல்லும் அனைத்து குழந்தைகளுக்கும் இரு வாரங்களுக்கு ஒரு முறை முட்டை வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. |

| | |
|---|---|
| 1997 | சத்துணவுத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளுக்கு முக்கிய பிரமுகர்களின் பிறந்தநாள் அன்று இனிப்பு பொங்கல் வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. |
| 1998 | 2 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. |
| 2006 | 2 முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் இரு முறை முட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2007 | 2 முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் மூன்று முறை முட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2010 | 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் (வாரத்தில் ஐந்து நாட்கள்) முட்டை வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. |
| 2014 | பயனாளிகளுக்கு பல வகை கலவை சாதம் மசாலா முட்டையுடன் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. |



### 3.5. பயனாளிகள் 2022-2023

| வ. எண் | நிலை | சத்துணவு மையங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | **தொடக்கப்பள்ளி (1 முதல் 5ம் வகுப்பு வரை)** | 26,909 | 24,25,031 |
| 2 | **உயர்தொடக்கப்பள்ளி (6 முதல் 8ம் வகுப்பு வரை)** | 16117 | 15,51,225 |
| 3 | **9 மற்றும் 10ஆம் வகுப்பு** | | 6,90,705 |
| 4 | **தேசிய குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளிகள்** | 164 | 3,497 |
| | **மொத்தம்** | 43,190 | 46,70,458 |

### 3.6 சத்துணவு திட்டத்தில் வழங்கப்படும் கலவை உணவுகள்.

வெஜிடபுள் பிரியாணி, சாம்பார் சாதம், மீல் மேக்கருடன் கூடிய வெஜிடபுள் சாதம், மற்றும் பிற கலவை சாத உணவுகள் 5 வகையான மசாலா முட்டையுடன் 2014 முதல் வழங்கப்படுகிறது.

கொரோனா நோய்த்தொற்று காரணமாக பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டதை முன்னிட்டு அரிசி, பருப்பு, முட்டை ஆகிய

உலர் உணவுப் பொருட்கள் சத்துணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. சத்துணவு பயனாளிகளின் ஊட்டச்சத்து நிலையினை கண்டறியும் பொருட்டு பள்ளிக் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து உடல் நிலை குறியீடு (BMI) கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கூடுதல் ஊட்டச்சத்து.**

1. ஒவ்வொரு குழந்தைக்கும் வாரத்திற்கு ஒரு முறை 20 கிராம் வேகவைக்கப்பட்ட கருப்பு கொண்டைக் கடலை / பச்சைப்பயறு வழங்கப்படுகிறது.
2. வாரத்திற்கொருமுறை 20 கிராம் வேகவைக்கப்பட்ட உருளைக் கிழங்கு வழங்கப்படுகிறது.
3. "A" அக்மார்க் தரத்துடன் கூடிய 46 கிராம் முதல் 52 கிராம் வரையிலான எடை கொண்ட முட்டை அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் வழங்கப்படுகிறது.
4. முட்டை உண்ண விருப்பமில்லாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் (100கிராம்) வழங்கப்படுகிறது.



5. இருமுறை செறிவூட்டப்பட்ட அயோடின் மற்றும் இரும்பு சத்துடன் கூடிய உப்பு சமையலுக்கு பயன்படுத்தப்படுகிறது.
6. இருமுறை செறிவூட்டப்பட்ட வைட்டமின் 'A' மற்றும் 'D' சத்துடன் கூடிய எண்ணெய் தினமும் சத்துணவில் பயன்படுத்தப்படுகிறது.

**மதிய உணவு திட்டத்தின் கீழ் ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்கு தேவையான ஊட்டச்சத்து கணக்கீட்டு அளவு முறைகள்**

| வ. எண் | வகுப்பு | ஒன்றிய அரசு நெறி முறைகள் | | மாநில அரசால் வழங்கப்படுவது | |
|---|---|---|---|---|---|
| | | கலோரி (கிலோ கலோரிகள்) | புரதம் (கிராம்) | கலோரி (கிலோ கலோரிகள்) | புரதம் (கிராம்) |
| 1. | தொடக்கப்பள்ளி | 450 | 12 | 557.00 | 18.92 |
| 2. | உயர் தொடக்கப்பள்ளி | 700 | 20 | 735.00 | 22.77 |
| 3. | 9 மற்றும்10ஆம் வகுப்பு | --- | --- | 735.00 | 22.77 |

## 3.7 தேசிய மதிய உணவு திட்டம்

தொடக்கக் கல்வி பெறும் குழந்தைகளுக்கான "தேசிய ஊட்டச்சத்து திட்டம் 15.08.1995–ல் ஒன்றிய

அரசால் ஆரம்பிக்கப்பட்டு 1997–1998 முதல் செயல்படுத்தப்படுத்தப்பட்டு, பின்னர் உயர் தொடக்கப் பள்ளிகளில் அக்டோபர் 2007–ல் விரிவு படுத்தப்பட்டது. ஒன்றிய அரசு, கல்வி அமைச்சகம், பள்ளிக் கல்வி மற்றும் கல்வியறிவுத் துறை, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சூடான சமைத்த உணவு வழங்குவதற்கு பிரதம மந்திரி ஊட்டச்சத்து சக்தி கட்டமைப்பு திட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் உணவூட்டுச் செலவினம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நியமங்களில் சமையல் உதவியாளர்களுக்கான மதிப்பூதியம் ஆகிய செலவினத்தை ஒன்றிய/மாநில அரசுகளால் நிதி பகிர்வின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. அரிசி, போக்குவரத்துச் செலவினம் மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செலவினத்திற்கு ஒன்றிய அரசால் 100 சதவீதம் வழங்கப்படுகிறது. உயர்நிலை பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு



வழங்குவதற்கான செலவினம் முழுவதும் மாநில அரசின் நிதியில் இருந்து வழங்கப்படுகிறது.

### 3.8 உணவூட்டுச் செலவினம்

நாளொன்றுக்கு / ஒரு குழந்தைக்கு (ரூபாயில்)

| வகுப்பு | மதிய உணவு செலவினம் | ஒன்றிய அரசு (60%) | மாநில அரசு (40%) | மாநில அரசின் கூடுதல் பங்களிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளி (1 முதல் 5 ஆம் வகுப்பு வரை) | 4.97 | 2.98 | 1.99 | 3.57 | 8.54 |
| உயர் தொடக்கப் பள்ளி (6 முதல் 8 ஆம் வகுப்பு வரை) | 7.45 | 4.47 | 2.98 | 1.20 | 8.65 |
| 9, 10ஆம் வகுப்பு | 100 விழுக்காடு மாநில அரசின் பங்களிப்பு | | | | 10.26 |

### 3.9 உணவு பொருட்கள் மேலாண்மை

அரிசி, பருப்பு, செறிவூட்டப்பட்ட எண்ணெய், செறிவூட்டப்பட்ட உப்பு, கருப்பு கொண்டைக்கடலை, பச்சைப்பயறு ஆகிய உணவுப் பொருட்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் விநியோகிக்கப்படுகிறது. சத்துணவு மையத்திற்கு தேவையான காய்கறிகள் மற்றும் தாளிதப் பொருட்கள்

வாங்குவதற்கு மூன்று மாதத்திற்கு ஒருமுறை முன்பணம் வழங்கப்படுகிறது.

**3.10 சத்துணவு மையத்தின் உட்கட்டமைப்பு வசதிகள்**

மதிய உணவை சமைப்பதற்கும், உணவு பொருட்களை பாதுகாப்பாக சேமிப்பதற்கும் வைப்பறையுடன் கூடிய சமையலறைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 2021-22 ம் நிதியாண்டில் 1,291 வைப்பறையுடன் கூடிய சமையலறைக் கட்டடங்கள் கட்ட ரூ.69 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சத்துணவு மையங்களை நவீனப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக சத்துணவு மையங்களில் போதிய சமையல் உபகரணங்கள் மற்றும் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**3.11 சத்துணவு மையங்களை கண்காணிக்கும் முறை**

- மூன்று அடுக்கு கண்காணிப்பு அமைப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது (மாநிலம்/மாவட்டம்/வட்டாரம்)



- சத்துணவு மையங்களில் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலின் படியும் நடைமுறை விதிமுறைகளின்படியும் உணவின் தரம் மற்றும் அளவு குறித்து சத்துணவு திட்ட கள அலுவலர்களால் கண்காணிக்கப்படுகிறது.
- சத்துணவு பரிமாறப்படுவதற்கு முன்பு உணவின் சுவை பள்ளிகளின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களால் சரிபார்க்கப்படுகிறது.
- சத்துணவு மையங்களுக்கு சர்வதேச தரச்சான்று (ISO) பெறுவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. இதுவரை 100 சத்துணவு மையங்களுக்கு சர்வதேச தர நிர்ணய அமைப்பின் கீழ் சான்றிதழ் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் சட்டத்தின் கீழ், அனைத்து சத்துணவு மையங்களையும் பதிவு செய்து ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்து வரும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.
- சத்துணவு மையங்களுக்கான கணக்குகள் அந்தந்த கிராம பஞ்சாயத்துகளில் நடைபெறும் கூட்டங்களில் வைக்கப்படுகிறது.

- சமூக தணிக்கை நடைமுறைகளும் துவக்கப்பட்டுள்ளன.

**3.12 குறை தீர்க்கும் முறை**

சத்துணவுத் திட்ட செயல்பாடுகளின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திடும் வகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இயக்குநரகத்தில் செயல்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணமில்லா தொலைபேசி எண் மற்றும் இணையவழி செயலி (மென்பொருள்) மூலமாக தொடர்பு கொண்டு பொது மக்கள் தங்களின் கருத்து மற்றும் புகார்களைத் தெரிவிக்கலாம்.

கட்டணமில்லா தொலைபேசி எண் : **1800-425-8971.**
இணைய வழி மின்னஞ்சல் - **http:// www.middaymeal.tn.gov.in-online complaint**

பெறப்படும் புகார்கள்/ கருத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றினை 30 நாட்களுக்குள் நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.



**3.13. சத்துணவு மையங்களுக்கு சுகாதார பேழைகள் வழங்குதல்.**

சத்துணவு மைய பயனாளிகளுக்கு சுகாதாரமான முறையில் உணவு சமைத்திட ஏதுவாக 2021-22 ஆம் ஆண்டில் 25,000 சத்துணவு மையங்களுக்கு ஒரு மையத்திற்கு ரூ.650/- வீதம் இரண்டு நீள அங்கிகள், ஒரு தலைக் கவசம், ஒரு நகவெட்டி, 5 கை துடைக்கும் துண்டுகள், 6 கிருமி நாசினி சோப்புகள் ஆகியவை அடங்கிய சுகாதார பேழைகள் ரூ.1.62 கோடி செலவினத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**3.14 திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி**

- உணவு பாதுகாப்பு குறித்து இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையம் மூலம் ஒரு நாள் நிகழ்நிலை புத்தாக்கப் பயிற்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (சஉதி) சென்னை பெருநகர மாநகராட்சி கூடுதல் கல்வி அலுவலர் ஆகியோர்களுக்கு அளிக்கப்பட்டது.

- உணவு பாதுகாப்பு மற்றும் சான்றளிப்பு பயிற்சி சத்துணவு அமைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- திறன் மேம்பாட்டு பயிற்சி சத்துணவு அமைப்பாளர்களுக்கு அண்ணா மேலாண்மை பயிற்சி மையத்தில் பல்வேறு கட்டங்களாக வழங்கப்படுகிறது.

**3.15 முன்களப்பணியாளர்களுக்கான விருதுகள்**

- ஒவ்வொரு மாவட்டத்திலும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு சமையல் போட்டி நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு ரூ.5000/- ரொக்கப்பரிசும், சான்றிதழ்களும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கப்படுகிறது.
- சிறந்த செயல்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சத்துணவு அமைப்பாளர் தேர்வு செய்யப்பட்டு ரூ.5000/- ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழும் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படுகிறது.



**3.16 பயனாளிகளின் உடல் நல பரிசோதனை**

- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையுடன் ஒருங்கிணைந்து அனைத்து பள்ளிகளிலும் தொடர்ந்து சுகாதார முகாம்கள் நடத்தப்படுகின்றன.
- சுகாதார முகாமின் போது, பொது சுகாதார பரிசோதனையை தவிர இரத்தசோகை, கண் மற்றும் பல் பரிசோதனையும் மேற்கொள்ளப்படுகின்றது.
- இரும்புச் சத்து, போலிக் அமில மாத்திரைகள், குடற்புழு நீக்கமாத்திரைகள் ஆகியவையும் வழங்கப்பட்டுவருகிறது. மேலும், குழந்தைகளுக்கு சுகாதார அட்டைகள் சுகாதாரதுறையுடன் இணைந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

**3.17 சத்துணவு பணியாளர்களுக்கான சலுகைகள்.**

- இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டில் மட்டும் சத்துணவு பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் மற்றும் பிற படிகளுடன் வழங்கப்பட்டு வருகிறது.

- ஒவ்வொரு சத்துணவு மையத்திற்கும் சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- 500 பயனாளிகளுக்கு மேல் உள்ள சத்துணவு மையங்களுக்கு கூடுதலாக ஒரு சமையலர் நியமனம் செய்யப்படுகின்றனர்.
- இந்திய அரசின் நெறிமுறைகளின்படி சத்துணவு பணியாளர் ஒருவருக்கு மாதம் ரூ.1,000 தொகுப்பூதியம் என்ற அடிப்படையில் 10 மாதங்களுக்கு ஒன்றிய மாநில அரசின் நிதி பங்களிப்பில் 60:40 என்ற விகிதத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இப்பணியாளர்களது நலனில் மிகுந்த அக்கறையுடன் செயல்படும் மாநில அரசு, பின்வரும் சிறப்புக் காலமுறை ஊதியத்தினை முற்றிலும் மாநில நிதியிலிருந்து வழங்கி வருகிறது.



சத்துணவு பணியாளர்களுக்கு வழங்கப்படும் சிறப்புக் கால முறை ஊதியம் பின்வருமாறு

| பதவி | ஊதிய விகிதம் (ரூ) |
|---|---|
| அமைப்பாளர் | 7,700 – 24,200 |
| சமையலர் | 4,100 – 12,500 |
| சமையல் உதவியாளர் | 3,000 – 9,000 |

**சத்துணவுப் பணியாளர்களுக்கு கூடுதலாக வழங்கப்படும் சலுகைகள்**

வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி, மலைவாழ்படி, பொங்கல் கருணைத் தொகை, பண்டிகை முன்பணம், தற்செயல் விடுப்பு, மகப்பேறு விடுப்பு, மகளிர் ஊர் நல அலுவலர் / அலுவலக உதவியாளர்களாக பணி நியமனம், பணி ஓய்வு பெறும் நாளில் ஒட்டு மொத்த தொகை, சிறப்பு சேமநல நிதி, கருணை அடிப்படையில் பணி நியமனம் போன்ற பல கூடுதல் சலுகைகள் வழங்கப்பட்டு

வருகின்றன. இத்துடன் கூடுதலாக ஓய்வு பெறும் வயதும் உயர்த்தப்பட்டுள்ளது.

### 3.18 சத்துணவு திட்டத்தில் சிறப்பு முயற்சிகள்

- தமிழ்நாடு அரசின் புதுமையான முன்னோடித் திட்டத்தின் கீழ் தருமபுரி, மதுரை, தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 9 வகையிலான நுண்ணூட்ட சத்துக்களுடன் (வைட்டமின் A, வைட்டமின் B1, வைட்டமின் B2, வைட்டமின் B3, வைட்டமின் B6, வைட்டமின் B12,போலிக் அமிலம், இரும்பு மற்றும் துத்தநாகம்) கூடிய செறிவூட்டப்பட்ட அரிசி நவம்பர் 2019 முதல் பயன்படுத்தப்பட்டது.
- மேலும் ஒரு முன்னோடி திட்டமாக மூன்று ஊட்டச்சத்துகளால் (இரும்புசத்து, போலிக் அமிலம் மற்றும் வைட்டமின் B12) செறிவூட்டப்பட்ட அரிசி, திருச்சி மாவட்டத்தில் 01.10.2020 முதல் செயல்படுத்தப்பட்டது.



- அக்டோபர், 2021 முதல் இந்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி அனைத்து பள்ளி சத்துணவு மையங்களுக்கும் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- உடல் நிலைக் குறியீடு – 43,190 பள்ளி சத்துணவு மையங்களில் பயனடைந்து வரும் 46,70,458 குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலையினை, உடல் நிறை குறியீடு கணக்கீடுகள் மூலம் கண்டறியும் பணிகள் பள்ளிக் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ரூ.2.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- குடிநீர் ஆதாரம் மற்றும் குடிநீர் இணைப்பு வசதிகள் உள்ள 1000 சத்துணவு மையங்களில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை மொத்தம்

ரூ.80.00 லட்சம் செலவினத்தில் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

**3.19 சமூகத் தணிக்கை**

2021–22–ஆம் ஆண்டில் ஐந்து மாவட்டங்களிலிருந்து தலா ஒன்று வீதம் ஐந்து, சத்துணவு மையங்கள் தேர்வு செய்யப்பட்டு நவம்பர், 2021ல் சமூகத் தணிக்கை தமிழ்நாடு சமூகத் தணிக்கை சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டது.

அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் 95 பள்ளி சத்துணவு மையங்களில் சமூகத் தணிக்கை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

200 பள்ளி சத்துணவு மையங்களில் சமூகத் தணிக்கைப் பணிகளை 2022–2023–ஆம் நிதியாண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.



**3.20 சத்துணவு மையங்களில் காய்கறி தோட்டம் அமைத்தல்**

- குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் நுண் ஊட்டச்சத்துக் குறைபாடு பிரச்சனையை தீர்க்க ஏதுவாக பசுமையான காய்கறிகள் மற்றும் கீரைகள் சத்துணவில் வழங்கிடும் பொருட்டு பள்ளி சத்துணவு காய்கறி தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- இயற்கை மற்றும் தோட்டக்கலை குறித்து குழந்தைகளுக்கு முதன்மையான அனுபவம் ஏற்படுத்துதல்
- காய்கறிகளில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துகள், துரித உணவின் தீங்கு மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து குழந்தைகளின் அறிவு திறனை உயர்த்துதல்.

**2022–2023–ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.2076.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## அத்தியாயம்–4

## ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்

குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்காக ஒருங்கிணைக்கப்பட்ட சேவைகளை வழங்கும் உலகின் மிகப்பெரிய திட்டங்களில் ஒன்றான ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் 1975–ல் துவக்கப்பட்டது.

### 4.2 நோக்கங்கள்

- 0–6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துதல்
- குழந்தையின் சரியான உளவியல், உடல் மற்றும் சமூக வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தல்
- இறப்பு, நோயுற்ற தன்மை, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பள்ளி இடைநிற்றல் நிகழ்வுகளைக் குறைத்தல்



- குழந்தை வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு பல்வேறு துறைகளுக்கு இடையே பயனுள்ள ஒருங்கிணைப்பை பெறுதல்
- சரியான ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி மூலம் குழந்தையின் இயல்பான ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்துத் தேவைகளைக் கவனிக்கும் வகையில் தாய்மார்களின் திறனை மேம்படுத்துதல்.

### 4.3 பயனாளிகள்

- பிறந்தது முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள்
- கர்ப்பிணி பெண்கள்
- பாலூட்டும் தாய்மார்கள்
- 11 முதல் 14 வயதிற்குட்பட்ட பள்ளிசெல்லா வளரிளம் பெண்கள்

**4.4 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின் கீழ் வழங்கப்படும் ஆறு முக்கிய சேவைகள்**

- துணை ஊட்டச்சத்து
- முறைசாரா முன்பருவக் கல்வி
- ஊட்டச்சத்து மற்றும் சுகாதார கல்வி
- நோய்த்தடுப்பு
- சுகாதார பரிசோதனை சேவைகள்
- மருத்துவப் பரிந்துரை

ஆறு சேவைகளில், நோய்த்தடுப்பு, சுகாதார பரிசோதனை மற்றும் மருத்துவப் பரிந்துரை சேவைகள் ஆகிய மூன்று சேவைகள் சுகாதாரத் துறையுடன் தொடர்புடையவை, ஆதலால் சுகாதாரத்துறையுடன் இணைந்து வழங்கப்படுகின்றன. பிற மூன்று சேவைகள் மைய அளவில் அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள் மூலம் குழந்தைகள் மையங்களில் வழங்கப்படுகின்றன.



**4.5 பயனாளிகளுக்கு வழங்கப்படும் சேவைகள் பின்வருமாறு**

| சேவைகள் | பயனாளிகள் | யாரால் சேவைகள் வழங்கப்படுகிறது |
|---|---|---|
| i) துணை ஊட்டச்சத்து | (i) 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் கர்ப்பிணிப் பெண்கள் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்கள் | அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் |
| ii) தடுப்பூசி | 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | மருத்துவ அலுவலர் மற்றும் துணை சுகாதார செவிலியர் |
| iii) சுகாதார பரிசோதனை | 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | மருத்துவ அலுவலர் , துணை சுகாதார செவிலியர் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர் |
| iv) மருத்துவப் பரிந்துரை சேவைகள் | 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | மருத்துவ அலுவலர் , துணை சுகாதார செவிலியர் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர் |

| சேவைகள் | பயனாளிகள் | யாரால் சேவைகள் வழங்கப்படுகிறது |
|---|---|---|
| v) முன்பருவக் கல்வி | 2 முதல் 6 வயதுக் குழந்தைகள் | அங்கன்வாடிப் பணியாளர் |
| vi) ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி | பெண்கள் (15–45 வயது) | குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் / மேற்பார்வை யாளர்கள் அங்கன்வாடிப் பணியாளர் / மருத்துவ அலுவலர் , துணை சுகாதார செவிலியர் |

**4.6 செயல்பாடுகள்**

தமிழகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் 49,499 முதன்மை குழந்தைகள் மையங்கள், 4,940 குழந்தைகள் குறு மையங்கள் என மொத்தமாக 54,439 குழந்தைகள் மையங்கள் செயல்படுகின்றன.

25 பயனாளிகளுக்கு மேல் பயன்பெறும் குழந்தைகள் குறு மையங்களை முதன்மை மையங்களாக மாற்றிட ஒன்றிய அரசு பரிந்துரை



செய்துள்ளது. அதனடிப்படையில் துறைரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**4.7 குழந்தைகள் மையங்கள் மற்றும் குழந்தைகள் குறு மையங்கள் அமைப்பதற்கான மக்கள்தொகை விதிமுறைகள்**

- 400–800 மக்கள் தொகைக்கு ஒரு முதன்மை குழந்தைகள் மையம்
- 300–800 மக்கள் தொகைக்கு பழங்குடியினர்/ மலைப்பகுதி மற்றும் பிற கடினமான பகுதிகளுக்கு ஒரு குழந்தைகள் மையம்.
- 150–400 மக்கள் தொகைக்கு ஒரு குறு மையம்.

**4.8 2022–2023–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு விவரம்**

**(ரூபாய் கோடியில்)**

| மொத்த நிதி ஒதுக்கீடு | திட்ட செலவினம் | ஒன்றிய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மாநில அரசின் தனிப்பட்ட பங்கு | மாநில அரசின் மொத்த பங்கு |
|---|---|---|---|---|---|
| **2,702.24** | **1,464.96** | **836.53** | **628.43** | **1,237.28** | **1,865.71** |

2022–2023–ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் செயல்பாட்டிற்கான ஒன்றிய அரசின் பங்கு 31% மற்றும் மாநில அரசின் பங்கு 69% ஆகும்.

### 4.9 பயனாளிகளின் விவரம்

| | |
|---|---|
| 6 மாதம் –1 வயதுக் குழந்தைகள் | 4,09,976 |
| 1–2 வயதுக் குழந்தைகள் | 7,07,443 |
| 2–3 வயதுக் குழந்தைகள் | 7,63,538 |
| 3–6 வயதுக் குழந்தைகள் | 8,18,585 |
| கூடுதல் | 26,99,542 |
| கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 7,51,580 |
| வளரிளம் பெண்கள் (11–14 வயதுடைய பள்ளிசெல்லாத) | 242 |
| மொத்தம் | 34,51,364 |

### 4.10 ஊட்டச்சத்து உணவுத் திட்டம்

துணை உணவுத் திட்டத்தில் கீழ்காணும் இருபிரிவுகள் உள்ளது

1. ஊட்டச்சத்து உணவாக சத்து மாவு வழங்குதல்
2. சூடான சமைத்த உணவு



குழந்தைகள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட உணவின் அளவு (ஆர்டிஏ) மற்றும் சராசரி தினசரி உட்கொள்ளல் (ஏடிஐ) ஆகியவற்றுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் துணை ஊட்டச்சத்து வழங்குதல் என்பது முதன்மையாக செயல்படுத்தப்படுகிறது.

6 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் அனைவரும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சேவைகளைப் பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள். வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் மட்டுமே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனாளிகளாகப் பதிவு செய்திட வேண்டும் என்ற அளவுகோல் இல்லை. இத்திட்டம் அனைத்து வகைப் பயனாளிகளுக்கும் பொதுவானது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ள ஆறு சேவைகளில் ஒன்றான

துணை ஊட்டச்சத்துத் திட்டம் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013ன் கீழ் ஒரு உரிமையாக மாற்றப்பட்டுள்ளது.

**தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013–ன்படி, பரிந்துரைக்கப்பட்டு ஒன்றிய அரசால் அனுமதிக்கப்பட்ட செலவின விவரம்**

| பயனாளிகள் விவரம் | நாள் ஒன்றுக்கு பரிந்துரைக்கப்பட்ட ஊட்டச்சத்தின் அளவு | | பயனாளி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு அனுமதிக்கப்பட்ட செலவினம் |
|---|---|---|---|
| | புரதம் (Protein in gms) | கலோரி சக்தி (Energy in Kcal) | |
| 6 மாதம் முதல் 6 வயது இயல்பு நிலைக் குழந்தைகள் | 12– 15 | 500 | ரூ.8.00 |
| 6 மாதம் முதல் 6 வயது (கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள) குழந்தைகள் | 20 – 25 | 800 | ரூ.12.00 |
| கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 18 – 20 | 600 | ரூ.9.50 |



**4.10.1 இணை உணவு (சத்து மாவு)**

6 மாதக் குழந்தையின் ஆற்றல் மற்றும் ஊட்டச்சத்துத்திற்கான தேவை அனைத்தும் தாய்ப்பாலின் மூலம் கிடைப்பபதை விட அதிகமாகத் தேவைப்படுகிறது, அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இணை உணவு அவசியமாகிறது. 2 வயது அல்லது அதற்கு மேலும் தாய்ப்பால் கொடுப்பதைத் தொடர வேண்டும், குழந்தை விரும்பும் போது அதன் தேவைக்கேற்ப இருக்க வேண்டும். தொடர்ச்சியான வளர்ச்சி, தேவையான ஆற்றல் மற்றும் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களை வழங்க இணை உணவு தேவைப்படுகிறது.

தமிழக அரசால் அமைக்கப்பட்ட நிபுணர் குழு பரிந்துரை செய்த, சத்துமாவுக் கலவையின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | விவரங்கள் | சதவீதம் |
|---|---|---|
| 1 | கோதுமை மாவு | 45.50 |
| 2 | வறுத்த கேழ்வரகு மாவு | 6.00 |
| 3 | செறிவூட்டப்பட்ட பாம் ஆயில் எண்ணெய் | 5.00 |
| 4 | முளைகட்டிய கேழ்வரகு மாவு | 5.00 |
| 5 | கொழுப்பு நீக்கப்படாத சோயா மாவு | 10.50 |
| 6 | வெல்லம் | 27.00 |
| 7 | வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் கலவை | 1 .00 |
| | மொத்தம் | 100.00 |

**நாளொன்றுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து உணவின் (சத்துமாவு) அளவு**

| வ. எண் | பயனாளிகள் வகை | ஒரு பயனாளிக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் அளவு (கிராம்) |
|---|---|---|
| 1 | 6 – 24 மாதக் குழந்தைகள் | 125 |
| 2 | 6 –24 மாதக் குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்து குறைவு) | 200 |
| 3 | 2 –3 வயது குழந்தைகள் | 100 |



| வ. எண் | பயனாளிகள் வகை | ஒரு பயனாளிக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் அளவு (கிராம்) |
|---|---|---|
| 4 | 2 –3 வயது குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்துக் குறைவு | 165 |
| 5 | 3 – 5 வயது குழந்தைகள் | 10 |
| 6 | 3 – 5 வயது குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்துக் குறைவு) | 100 |
| 7 | கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 165 |
| 8 | வளரிளம் பெண்கள் (11 முதல் 14 வயதிற்குட்பட்ட பள்ளி செல்லாதோர்) | 165 |

### 4.10.2 சூடான சமைத்த உணவு

2 முதல் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துக் குறைபாட்டை போக்கி அவர்களின் கல்வியறிவு விகிதத்தை அதிகரிக்கும் நோக்கில் சத்தான மதிய உணவை வழங்கும் மாபெரும் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது. இத்திட்டம் 1982 இல், தொடங்கப் பட்டதிலிருந்து பல மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. புரதச்சத்தினை அதிகரிப்பதற்காக, வேகவைத்த முட்டை 1989 இல், அறிமுகப்படுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து பச்சைப்பயறு, கொண்டைக்கடலை, உருளைக்கிழங்கு ஆகியன அடுத்தடுத்த ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டன.

குழந்தைகளின் செரிமானத் திறன் மற்றும் சிறப்புத் தன்மைகளை கருத்தில் கொண்டு 2013 – 14 முதல் சூடான சமைத்த உணவு கீழ்காணும் வகையில் வழங்கப்படுகிறது

| நாள் | உணவு வகைகள் |
|---|---|
| திங்கள் கிழமை | தக்காளி சாதம் + வேகவைத்தமுட்டை |
| செவ்வாய் கிழமை | கலவை சாதம் + வேக வைத்த கருப்புக் கொண்டைக் கடலை அல்லது வேக வைத்த பச்சைப்பயறு |
| புதன் கிழமை | காய்கறிப்புலவு + வேகவைத்த முட்டை |
| வியாழக் கிழமை | எலுமிச்சை சாதம் + வேகவைத்த முட்டை |
| வெள்ளிக் கிழமை | பருப்பு சாதம் + வேக வைத்த உருளைக்கிழங்கு |
| சனிக் கிழமை | கலவை சாதம் |
| ஞாயிற்றுக் கிழமை | வீட்டிற்கு எடுத்துச்செல்லும் வகையில் உலர் உணவுப்பொருட்கள் (அரிசி மற்றும் பருப்பு) |



பயனாளிகளுக்கு நாள்தோறும் வழங்கப்படும் துணை உணவுகளின் (சத்துமாவு மற்றும் சூடான சமைத்த) உணவில் உள்ள ஊட்டச்சத்துக்களின் விவரம்

| வ. எண் | பயனாளிகள் | நாள் ஒன்றிற்கு சத்துமாவு + மதிய உணவில் உள்ள அரிசி மற்றும் முட்டை (வாரத்திற்கு) (கிராமில்) | துணை உணவின் (சத்துமாவு + சமைத்த உணவு + முட்டை) மூலம் வழங்கப்படும் ஊட்டச்சத்தின் அளவு (நாள் ஒன்றுக்கு) | |
|---|---|---|---|---|
| | | | புரதச் சத்து (கிராமில்) | ஆற்றல் (கலோரிச் சத்து) (கிலோ கலோரியில்) |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 6 மாதம் முதல் 1 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 125 | 13.75 | 500 |

| வ. எண் | பயனாளிகள் | நாள் ஒன்றிற்கு சத்துமாவு + மதிய உணவில் உள்ள அரிசி மற்றும் முட்டை (வாரத்திற்கு) (கிராமில்) | துணை உணவின் (சத்துமாவு + சமைத்த உணவு + முட்டை) மூலம் வழங்கப்படும் ஊட்டச்சத்தின் அளவு (நாள் ஒன்றுக்கு) | |
|---|---|---|---|---|
| | | | புரதச் சத்து (கிராமில்) | ஆற்றல் (கலோரிச் சத்து) (கிலோ கலோரியில்) |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 2 | 6 மாதம் முதல் 1 வயதிற்குட்பட்ட கடுமையான ஊட்டச்சத்துக் குறைவுள்ள குழந்தைகள் | 200 | 22.00 | 800 |
| 3 | 1 முதல் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 125 + வாரம் ஒரு முட்டை | 14.85 | 514.44 |
| 4 | 1 முதல் 2 வயதிற்குட்பட்ட கடுமையான ஊட்டச்சத்துக் குறைவுள்ள குழந்தைகள் | 200 + வாரம் ஒரு முட்டை | 23.10 | 814.44 |





| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 5 | 2 முதல் 3 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 100 + 80 + வாரம் 3 முட்டைகள் | 24.27 | 868.79 |
| 6 | 2 முதல் 3 வயதிற்குட்பட்ட கடுமையான ஊட்டச்சத்துக் குறைவுள்ள குழந்தைகள் | 165 +80 + வாரம் 3 முட்டைகள் | 31.42 | 1128.79 |
| 7 | 3 முதல் 6 வயதுடைய குழந்தைகள் | 10 + 80+ வாரம் 3 முட்டைகள் | 14.37 | 508.79 |
| 8 | 3 முதல் 6 வயதிற்குட் பட்ட கடுமையான ஊட்டச்சத்துக் குறைவுள்ள குழந்தைகள் | 100 + 80 + வாரம் 3 முட்டைகள் | 24.27 | 868,79 |
| 9 | கர்ப்பிணிப் பெண்கள் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 11 முதல் 14 வயதுடைய பள்ளி செல்லா வளரிளம் பெண்கள் | 165 | 18.15 | 660.00 |

நாளொன்றுக்கு வழங்கப்படும் துணை உணவின் ஊட்டச்சத்து மதிப்பு (சத்துமாவு + சூடான சமைத்த உணவு) கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ., எண் | பயனாளிகளின் வகை | பயனாளி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு அனுமதிக்கப்பட்ட செலவினம் | பயனாளி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு மேற்கொள்ளப் படும் செலவினம் | ஒன்றிய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மாநில அரசின் கூடுதல் பங்கு |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | 6 மாதம் முதல் 1 வயதுக் குழந்தைகள் | 8.00 | 7.86 | 3.93 | 3.93 | இல்லை |
| 2 | 6 மாதம் முதல் 1 வயது கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறை உள்ள குழந்தைகள் | 12.00 | 12.58 | 6.00 | 6.00 | 0.58 |
| 3 | 1 முதல் 2 வயது வரை உள்ள குழந்தைகள் | 8.00 | 8.73 | 4.00 | 4.00 | 0.73 |



தொடர்ச்சி....

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 4 | 1 முதல் 2 வயது கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறை உள்ள குழந்தைகள் | 12.00 | 13.45 | 6.00 | 6.00 | 1.45 |
| 5 | 2 வயது முதல் 3 வயதுவரை உள்ள குழந்தைகள் | 8.00 | 12.05 | 4.00 | 4.00 | 4.05 |
| 6 | 2 வயது முதல் 3 வயது கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறை உள்ள குழந்தைகள் | 12.00 | 16.14 | 6.00 | 6.00 | 4.14 |
| 7 | 3 வயது முதல் 6 வயதுவரை உள்ள குழந்தைகள் | 8.00 | 6.40 | 3.20 | 3.20 | இல்லை |
| 8 | 3 வயது முதல் 6 வயது கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறை உள்ள குழந்தைகள் | 12.00 | 12.05 | 6.00 | 6.00 | 0,05 |
| 9 | கர்ப்பிணிகள் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 11 முதல் 14 வயது வரையிலான பள்ளி செல்லா வளரிளம் பெண்கள் | 9.50 | 10.38 | 4.75 | 4.75 | 0.88 |

### 4.10.3 செறிவூட்டப்பட்ட உணவுப் பொருட்களின் பயன்பாடு

உடலின் பல முக்கிய செயல்பாடுகளுக்கு நுண்ணூட்டச்சத்துக்கள் அவசியம். நமது உடலால் நுண்ணூட்டச்சத்துக்களை தானாகவே உற்பத்தி செய்ய இயலாது. அவை நம் உணவில் இருந்தே பெறப்பட வேண்டும். செறிவூட்டப்பட்ட உணவுகள், நுண்ணூட்டச்சத்துக்கள் சேர்க்கப்பட்ட உணவுகள் ஆகும். இது உணவின் ஊட்டச்சத்தின் மதிப்பை அதிகரிக்க உதவுவதுடன் ஆரோக்கியத்திற்கும் நன்மைபயக்கும். குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்கள் ஆகியோரிடையே காணப்படும் நுண்ணூட்டச்சத்துக் குறைபாட்டை போக்கிட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் துணை உணவில் பின்வரும் செறிவூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன:–



- இரும்புச்சத்து மற்றும் அயோடின் சத்துடன் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு.
- வைட்டமின் "ஏ" மற்றும் வைட்டமின் "டி" ஆகியவற்றால் செறிவூட்டப்பட்ட பனை எண்ணெய்.
- வைட்டமின்கள் மற்றும் தாதுக்களால் செறிவூட்டப்பட்ட சத்துமாவு.
- இரும்புச்சத்து, போலிக் அமிலம் மற்றும் வைட்டமின் "பி12" ஆகியவற்றால் செறிவூட்டப்பட்ட அரிசி.

### 4.11 தேசிய ஊட்டச்சத்துக் குழுமம் (போஷன் அபியான்)

ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட உந்துதலாக இந்திய அரசு தேசிய ஊட்டச்சத்து குழுமத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் 80:20 (ஒன்றிய : மாநிலம்) என்ற விகித்தில் நிதிப் பங்களிப்பு முறையில் செயல்படுத்தப்படுகிறது.

### 4.11.1 திட்டத்தின் நோக்கம்

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013 இன் கீழ் திட்டமிடப்பட்டுள்ளபடி, ஊட்டச்சத்துத் திட்டத்திற்கு கூடுதல் நிதி பங்களிப்புடன், மாநில அரசின் பாராட்டத்தக்க முயற்சிகள் மற்றும் கட்டாய ஊட்டச்சத்து விதிமுறைகளை திறம்பட செயல்படுத்தியதன் காரணமாகவும் மேலும் ஒன்றிய மகளிர் மற்றும் குழந்தை வளர்ச்சி அமைச்சகத்திடமிருந்து அவ்வப்போது பெறப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையிலும், தேசிய ஊட்டச்சத்துத் திட்டத்தால், ஊட்டச்சத்துக் குறியீடுகள் ஒரு கவனிக்கத்தக்க மற்றும் அளவிடக்கூடிய விளைவுகளைக் எட்டியுள்ளன. அவை பின்வருமாறு குறிக்கப்படுகின்றன.



| குறியீடு | NFHS-5 (2019-21) | | ஊட்டச்சத்து கண்காணிப்பு செயலி | நிலை |
|---|---|---|---|---|
| | இந்திய அளவில் | மாநில அளவில் | தமிழ்நாடு | |
| குள்ளத்தன்மை | 35.5% | 25% | 22.44% | முன்னேற்றம் |
| மெலிவுத்தன்மை | 19.3% | 14.6% | 5.36% | முன்னேற்றம் |
| எடை குறைவு | 32.1% | 22% | 12.12% | முன்னேற்றம் |
| இரத்த சோகை உடைய 6-59 மாத வயது வரையான குழந்தைகள் | 67.1% | 57.4% | இல்லை | -- |

தேசிய ஊட்டச்சத்து குழுமம் 2.0வின் இலக்குகள் பின்வருமாறு

| அடிப்படை புள்ளி விவரங்கள் | | 2022 | 2025 | 2030 | வருடாந்திர குறைப்பு (2025 வரை) | வருடாந்திர குறைப்பு (2026 முதல் 2030 முடிய) |
|---|---|---|---|---|---|---|
| 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் சதவீதம் | | | | | | |
| குறைவான எடை | 35.70% (CNNS data 2016–18) | 34% | 28% | 8% | 2% | 4% |
| குள்ளத் தன்மை | 38.40% (CNNS data 2016–18) | 36% | 30% | 10% | 2% | 4% |
| நோஞ்சான் (மெலிவுத் தன்மை) | 21% (CNNS data 2016–18) | 19% | 13% | 3% | 2% | 2% |
| கர்ப்பிணிப் பெண்கள் | | | | | | |
| இரத்த சோகை | 65% (இரத்த சோகை முக்த் பாரத் புள்ளிவிவரம்: 2016–18) | 62% | 53% | 23% | 3% | 6% |



### 4.11.2 தேசிய ஊட்டச்சத்து குழுமம் 2.0

தேசிய ஊட்டச்சத்து குழுமம் 2.0 என்பது இந்தியா முழுமைக்குமான திட்டமாகும். தொழில்நுட்ப அணுகுமுறை மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் மூலம் குழந்தைகள், வளரிளம் பருவத்தினர், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

ஊட்டச்சத்து குழுமம் 2.0 திட்டம் ஊட்டச்சத்து குறைபாட்டிலிருந்து மக்களின் உடல்நலம், ஆரோக்கியம் மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் ஆகியவற்றை வளர்க்க, அடிப்படை மாற்றம் பெற்று திறன்மிகு குழந்தைகள் மையம் மற்றும் ஊட்டச்சத்து குழுமம் 2.0 என அழைக்கப்படுகின்றது.

திறன்மிகு குழந்தைகள் மையக் கூறுகள், மூன்று முதன்மை பிரிவுகளாக மறுவடிவமைக்கப்பட்டுள்ளது.

1. 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள 14 வயது முதல் 18 வயது வரையிலான வளரிளம் பெண்கள் அனைவருக்கும் சத்துமாவு அளிக்கும் திட்டம்.
2. ஆரம்பகால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி (3–6 வயது).
3. குழந்தைகள் மைய கட்டமைப்பினை தரம் உயர்த்தி திறன் மிகு குழந்தைகள் மையங்களாக மாற்றுதல்.

தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தலா 400 குழந்தைகள் மையங்களை தரம் உயத்த ஒன்றிய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.



**4.11.3 ஊட்டச்சத்து கண்காணிப்பு செயலி (POSHAN Tracker)**

ஒன்றிய அரசு மூலம், ஊட்டச்சத்து குழுமம் 2.0 திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து கண்காணிப்பு செயலி ஜனவரி 2021 ஆண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த செயலி மூலம், குழந்தைகள் மையத்தில் அங்கன்வாடிப் பணியாளர்களால் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகள் மற்றும் பயனாளிகளான பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சேவைகள் முழுமையான அளவில் கண்காணிக்கப்படுகிறது. இச்செயலியில் 54,439 குழந்தை மையங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மாநில முன்னெடுப்புத் திட்டமாக, ஊட்டச்சத்து கண்காணிப்பு செயலியில் உள்ள அனைத்து தகவல்கள் மற்றும் மாநில செயல் திட்ட தகவல்கள் தமிழ்நாடு

மின்னணு ஆளுமை நிறுவன ஒருங்கிணைப்புடன் புதிய செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 4.11.4 மக்கள் இயக்கம் (Jan Andolan)

தேசிய ஊட்டச்சத்துக் குழுமத்தின் கீழ் நடைபெறும் மக்கள் இயக்கம் ஊட்டச்சத்து பற்றிய தகவல்களை ஒவ்வொரு வீட்டையும் சென்றடையும் ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையாகும். உள்ளாட்சி அமைப்புகளின் பொது பிரதிநிதிகள், மாநில அரசுத் துறைகள், சமூக அமைப்புகள், பொது மற்றும் தனியார் துறை ஆகியோரின் பங்கேற்புடன் இவ்வியக்கம் செயல்படுத்தப்படுகிறது.

மக்கள் இயக்கம் கூறுகளின் கீழ் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்டங்களுக்குத் தேவையான நிதி வழங்கப்பட்டுள்ளது.

- ➢ சமுதாய வளைகாப்பு
- ➢ தாய்ப்பால் வார விழா
- ➢ ஊட்டச்சத்து மாதம் மற்றும் இருவார ஊட்டச்சத்து கொண்டாட்டங்கள்.
- ➢ கை கழுவும் தினம் (கைத்தூய்மை தினம்).



- ➢ இரத்தசோகை விழிப்புணர்வு முகாம்,
- ➢ மாநில அளவில், மாவட்ட அளவில், வட்டார அளவில் விழிப்புணர்வு கண்காட்சிகள்.
- ➢ அனைத்து மாவட்டங்களிலும் பாரம்பரிய உணவுத் திருவிழா (Traditional Food Festival).
- ➢ வளரிளம் பெண்களுக்கு சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நலக் கல்வி.

தேசிய ஊட்டச்சத்து மாதம் செம்படம்பர் 2021ல், 'ஆரோக்கியமான வாழ்வை நோக்கி ஒருங்கிணைந்த பயணம்' என்ற மையக் கருத்துடன் ஒரு மாத காலம் கீழ்காணும் வகையில் நடத்தப்பட்டது.

அ) ஊட்டச்சத்துத் தோட்டங்கள் அமைத்தல்.
ஆ) ஊட்டச்சத்திற்காக யோகா மற்றும் ஆரோக்கியம்
இ) கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு ஊட்டச்சத்தான உணவளித்தல்.

இவ்வியக்கத்தால் மொத்தம் 2,23,28,760 நிகழ்ச்சிகள் நடத்தி ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் சார்ந்த தகவல்கள் மக்களைச் சென்றடைந்துள்ளன.

### 4.11.5 தேசிய ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் சீருடை வழங்குதல்

2021–2022–ஆம் ஆண்டில் அனைத்து, அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு இரண்டு சீருடைப் புடவைகள் தேசிய ஊட்டச்சத்து குழுமம் திட்டத்தின்கீழ் இந்திய அரசின் 100% பங்களிப்புடன் புடவை ஒன்றிற்கு ரூ.400/– வீதம் வழங்கப்பட்டுள்ளன.

**2022–2023–ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் தேசிய ஊட்டச்சத்துத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.118.58 கோடி**(ஒன்றிய அரசு : மாநில அரசு 80:20) **நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



### 4.12 ஆரம்ப கால குழந்தைப் பராமரிப்பு மற்றும் முன்பருவக் கல்வி (ECCE)

ஆரம்ப கால குழந்தைப் பராமரிப்பு மற்றும் முன்பருவக் கல்வி (ECCE) என்பது குழந்தையின் உடல், அறிவு, மனம் மற்றும் சமூகத் தேவைகளின் முழுமையான வளர்ச்சியினை நோக்கமாக கொண்டுள்ளது. குழந்தை, வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொள்வதற்கும், நலமாக வாழ்வதற்கும் வலிமையான அடித்தளமாக அமைகிறது. இத்திட்டத்தின் முக்கிய பிரிவாகவும், முதுகெலும்பாகவும் திகழ்கிறது.

குழந்தையின் முதல் ஆறு ஆண்டுகளில் தூண்டுதல் செயல்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த வருடங்களில்தான் குழந்தையின் வளர்ச்சி நிலைகளில் வேகமான முன்னேற்றம் ஏற்படும். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் திருத்தப்பட்ட 45 வது விதியின் (Constitution ACT 2002) ன் படி ஒவ்வொரு மாநிலமும் 6 வயதிற்குட்பட்ட

குழந்தைகளுக்கு கண்டிப்பாக ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் முன்பருவக் கல்வி அளித்திடல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பெண் மற்றும் ஆண் குழந்தைகளுக்கு தரமான ஆரம்பகால குழந்தைப் பராமரிப்பு மற்றும் முன் பருவக் கல்வி அளித்து அவர்களைத் தொடக்கக் கல்விக்கு தயார் செய்வதையே நிலையான வளர்ச்சி இலக்கு எண். 4–ன்படி, (Sustainable Development goal), நோக்கமாக கொண்டுள்ளது.

நமது மாநிலத்தில், "ஆடிப்பாடி விளையாடு பாப்பா" (APVP) எனும் குழந்தையின் வளர்ச்சி, வயதுக்கேற்ற வருடாந்திர பாடத்திட்டம், தேசிய ஆரம்ப கால குழந்தைப் பராமரிப்பு மற்றும் முன்பருவக் கல்விக் கொள்கை 2013–னை பின்பற்றி தயாரிக்கப்பட்டு அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பாடத்திட்டத்தில், 11 மாதங்களுக்கும் குழந்தைகளுக்கு பிடித்தமான 11 வகையான



கருத்துக்களை மையமாக கொண்டு செயல்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. 12–ஆம் மாதத்தில் பாடத்திட்டத்தின் திருப்புதல் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

குழந்தைகள் மையப் பணியாளர்களுக்கு பாடத்திட்ட புத்தகங்கள், குழந்தைகளுக்கு வயதிற்கேற்ற (2–3, 3–4 மற்றும் 4–5 வயது) செயல்பாட்டுப் புத்தகங்கள், வயதிற்கேற்ற வளர்ச்சி மதிப்பீட்டு அட்டைகள், முன்பருவக் கல்வி நிறைவு சான்றிதழ்கள், குழந்தையின் சுயவிவரத் தொகுப்பு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் ஆண்டுதோறும் குழந்தைகள் மையத்திற்கு வழங்கப்படுகின்றன.

தமிழகத்தில் 51,600 குழந்தைகள் மையப் பணியாளர்களுக்கு இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவதற்கு, தொகுதி வாரியாக பரவலாக்கப்பட்ட முறையில் மூன்று கட்டமாக, ஆரம்ப

கால குழந்தைப் பராமரிப்பு மற்றும் முன்பருவக் கல்வி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**2022–2023–ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.27.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**4.13 மருந்து மற்றும் சுகாதாரப் பெட்டிகள் வழங்குதல்**

சிறிய நோய்களான காய்ச்சல், வயிற்றுப்போக்கு, காயம், தோல் தொற்று போன்றவற்றுக்கு சிகிச்சை அளிக்கும் மருந்து உபகரணப் பெட்டிகள் குழந்தைகள் மையங்களுக்கு வழங்கப்படுகிறது. அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு பொது சுகாதாரத் துறை மூலம் மருந்து வழங்குவது குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. மேல் மருத்துவ சிகிச்சை தேவைப்படும் குழந்தைகள் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் பரிந்துரைக்கப்படுகின்றனர்.

- குழந்தைகளிடையே சுகாதாரப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், குழந்தைகள் மையங்களில் அவர்களை சுத்தமாகவும், நேர்த்தியாகவும் பராமரிக்கவும் அனைத்து குழந்தைகள் மையங்களுக்கும் நகம் வெட்டி, சீப்பு, சோப்பு மற்றும் கைத்துண்டு அடங்கிய சுகாதாரப் பெட்டி வழங்கப்படுகிறது.
- இத்திட்டத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.7.79 கோடி வழங்கப்பட்டுவருகிறது.
- 2021–2022 ஆம் ஆண்டில், தொற்று நோய் நிலைமையைக் கருத்தில் கொண்டு அனைத்து குழந்தைகள் மையங்களுக்கும் சுகாதாரப் பெட்டிகளை கொள்முதல் செய்து வழங்குவதற்காக ரூ.7.79 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுகாதாரப் பெட்டியில் அடங்கியிருக்கும் பொருட்கள்**

| வ. எண் | சுகாதாரப் பெட்டியில் அடங்கியுள்ள பொருட்கள் | முதன்மை மையம் | குறு மையம் |
|---|---|---|---|
| 1 | முதலுதவிப் பெட்டி – சிறிய பிளாஸ்டிக் பெட்டி(1), பேண்ட் எய்ட் (20), சிறிய கத்தரிக்கோல் (1) மற்றும் | 1 | 1 |
| 2 | திரவ கை சுத்திகரிப்பான் – 50மி.லி | 5 | 1 |
| 3 | தரை சுத்திகரிக்கும் திரவம் – 1 லிட்டர் | 2 | 1 |
| 4 | ஆன்டிசெப்டிக் திரவம் – 500மி.லி | 1 | 1 |

| | | | |
|---|---|---|---|
| 5 | மீண்டும் பயன்படுத்தக்கூடிய முக கவசம் | 10 | 1 |
| 6 | சோப்பு – 75 கிராம் | 11 | 3 |
| 7 | சீப்பு – 9 முதல் 10 அங்குல | 2 | 1 |
| 8 | நக வெட்டி – நடுத்தர அளவு | 1 | -- |

**2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.7.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**4.14 வளரிளம் பெண்களுக்கான திட்டம்**

இத்திட்டம் வளரிளம் பெண்களுக்கான சிறப்புத் திட்டமாகும். இதன் குறிக்கோள் வளரிளம் பெண்களுக்கு கல்வி வசதிகளை அளித்து தன்னம்பிக்கையுடைய, தன்னிறைவு பெற்ற தனிநபர்களாக மேம்பாடு அடையச் செய்வதாகும். இத்திட்டத்தில் பள்ளி செல்லாத 11-14 வயது வளரிளம் பெண்களுக்கு, ஊட்டச்சத்து மற்றும் ஊட்டச்சத்து அல்லாத திட்டம் என இரு பிரிவுகள் உள்ளன.



ஊட்டச்சத்துப் பிரிவில், பள்ளி செல்லாத 11-14 வயது வளரிளம் பெண்கள் குழந்தைகள் மையத்தில் பதிவு செய்யப்பட்டு, துணை உணவு (சத்துமாவு) 165 கிராம், வீட்டிற்கு எடுத்துச் செல்லும் உணவாக, வருடத்திற்கு 300 நாட்கள் வழங்கப்படுகிறது.

மேலும், பள்ளி செல்லா 11-14 வயது வளரிளம் பெண்களை ஊக்கப்படுத்தி, இடையில் நின்ற பள்ளிப் படிப்பினை மீண்டும் தொடர அல்லது பல்வேறு திறன் பயிற்சிகள் பெற்றிட மற்றும் சுய மேம்பாட்டிற்கு ஆதரவான சூழ்நிலையை உருவாக்கிட இத்திட்டம் உதவுகிறது. ஊட்டச்சத்து அல்லாத பிரிவில், இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் வழங்குதல், மருத்துவப் பரிசோதனை, மருத்துவப் பரிந்துரை, ஊட்டச்சத்துக் கல்வி, சுகாதாரக் கல்வி, வாழ்க்கைத் திறன் கல்வி மற்றும் பொது சேவைகளைப் பெற்றுக் கொள்ள வழிகாட்டுதல் ஆகியன அடங்கும்.

திறன்மிகு குழந்தைகள் மையம் மற்றும் தேசிய ஊட்டச்சத்து குழுமம் 2.0-ன் கீழ் தற்போது வளரிளம்

பெண்கள் திட்டமானது, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 14–18 வயதுடைய வளரிளம் பெண்கள் பயனடையும் வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

**2022–2023–ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.27.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 4.15 பயிற்சி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில், திட்டப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் தொடர்ச்சியான பயிற்சி, திட்டப் பணிகளின் தரத்தை மேம்படுத்துவதிலும் மற்றும் திட்டம் வெற்றிகரமாக செயல்படுவதற்கும் இன்றியமையாததாக அமைகிறது.

தமிழ் நாட்டில் பரவலாக்கப்பட்ட பயிற்சி முறை பின்பற்றப்படுகிறது. குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், குழந்தைகள் பயிற்சி மையங்களின் பயிற்றுநர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் நிலை 2 ஆகியோர்களுக்கான பணிப் பயிற்சி மாநில பயிற்சி



மையத்தில் தங்கிப் பயிலும் வகையில் நடத்தப்படுகின்றது. மாநில பயிற்சி நிலையத்தில், பயிற்றுநர்கள், உள்கட்டமைப்பு வசதிகள், கற்பித்தல், கற்றல் உபகரணங்கள் மற்றும் களப்பயிற்சிகள் உள்ளன. மாநில பயிற்சி நிறுவனம் தங்கும் விடுதியுடன் செயல்படுகிறது.

குழந்தைகள் மையப் பணியாளர்களுக்கான பணிப்பயிற்சி மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கான புத்தறிவுப் பயிற்சி, தொகுதி அளவில் ஒரு தனித்துவமான சிறந்த முறையில், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர், மேற்பார்வையாளர் நிலை–1, சுகாதாரம் மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் பிரதிநிதிகளைக் கொண்ட வட்டார பயிற்சி குழுவின் மூலம் நடத்தப்படுகின்றது.

களப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியில், பச்சிளம் குழந்தைகள் மற்றும் இளம் குழந்தைகளுக்கு உணவளித்தல் நடைமுறைகள்

குறித்த பயிற்சி (IYCF) ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது.

பிறந்தவுடன் தாய்ப்பால் கொடுத்தல், ஆறுமாதங்கள் வரை தாய்ப்பால் மட்டுமே கொடுத்தல், ஆறு மாதங்கள் முடிந்தவுடன் துணை உணவு அளித்தல், தாய்சேய் நல அட்டையை பயன்படுத்துதல் போன்றவற்றிற்கு தாய்மார்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் களப்பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

கோவிட்–19 பெருந்தொற்றுக் காலத்தில் தேசிய பொது ஒருங்கிணைப்பு மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு நிறுவனம் {National Institute of Public Co–operation and Child Development (NIPCCD)}, பெங்களூரு மற்றும் புதுடில்லி, மூலம் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு பல்வேறு பயிற்சிகளை மெய்நிகர் கல்வி பயிற்சிகள் மூலம் (Online Trainings) வழங்கப்பட்டுள்ளன. பச்சிளம் மற்றும் இளம்குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகளை



மேம்படுத்துவதற்கு சுயமதிப்பீட்டுத் தாள்கள் தயாரிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களில் உள்ள, பிறந்தது முதல் 2 வயது வரை குழந்தைகள் உள்ள 9,96,066 பெற்றோர் மற்றும் பேணுவோருக்கு வழங்கப்பட்டுள்ளன.

களப்பணியாளர்களுக்குத் தேவைக்கேற்ற பயிற்சிகள் அரசு நிறுவனங்களான அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, வேளாண் ஆராய்ச்சி நிறுவனம், குழந்தைகள் நல நிறுவனம் மற்றும் நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிறுவனம் மூலம் வழங்கப்படுகின்றது.

மேலும், 75, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், 80 அங்கன்வாடிப் பயிற்றுனர்கள் (மேற்பார்வையாளர் நிலை–1), 250 மேற்பார்வையாளர் (நிலை–2), 3,465 அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் 2,000 அங்கன்வாடி உதவியாளர்களுக்கு பணிப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**2022–2023–ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.5.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**4.16 தகவல், கல்வி மற்றும் தொடர்பு**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் அளிக்கப்படும் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகள், திட்ட பயனாளிகளான, 0–6 வயது குழந்தைகள், வளர்இளம் பெண்கள், கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் சமுதாயத்தை சென்றடையவும், அவர்களிடையே திட்டப் பணிகளின் முக்கியத்துவத்தை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஊட்டச்சத்து மற்றும் சுகாதார பழக்க வழக்கங்களில் தேவையான மனமாற்றத்தை கொண்டு வரவும் தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இளம் தம்பதியருக்கான விழிப்புணர்வுக் கூட்டம்", தொலைக்காட்சி மற்றும் வானொலியில்



திட்டம் பற்றிய விளம்பரப்படுத்துதல், கர்ப்பகால முன், பின் பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம், சமுதாய பங்களிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறான தகவல் தொடர்புப் பணிகள் திட்டமிட்டு நடத்தப்படுகின்றன.

திட்டம் குறித்த புதிய தகவல்கள் மக்களையும் பணியாளர்களையும் சென்றடைய "சிட்டுக்குருவி சேதி தெரியுமா?" என்ற இதழ் இருமாதங்களுக்கொருமுறை அச்சிடப்பட்டு அனைத்து குழந்தைகள் மையங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது.

அனைத்து குழந்தைகள் மையங்களுக்கும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் போஸ்டர்கள், துண்டு பிரசுரங்கள், ஃபிளிப் சார்ட்டுகள், தொங்கும் அட்டைகள், ஊட்டச்சத்து, சுகாதாரம், தாய் மற்றும் குழந்தைகளின் கல்வி மற்றும் குழந்தை வளர்ச்சி தொடர்பான செய்திகள் அடங்கிய ஸ்டிக்கர்கள் போன்ற பல திட்டம் குறித்த பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன .

"பச்சிளம் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள்" குறித்து பல்வேறான தகவல் தொடர்பு முனைப்பு இயக்கங்கள் சுகாதாரத்தின் முக்கியத்துவம், தாய் மற்றும் குழந்தையின் ஊட்டச்சத்து ஆரோக்கியம், மற்றும் பிற பொது சுகாதாரப் பாதுகாப்பு தகவல்கள் மாவட்டம், வட்டாரம் மற்றும் மைய அளவிலும் நடத்தப்பட்டுள்ளன.

### 4.17 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் தொடர்புடைய நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

| இலக்கு | குறி இலக்கு எண் | குறி இலக்கு | மாநில குறியீடு கட்டமைப்பு | சாதனை |
|---|---|---|---|---|
| 1 | 1.3 | தேசிய அளவில் வறுமை மற்றும் அதனால் பாதிக்கப்படக்கூடிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை 2030 ஆம் ஆண்டிற்குள் அடைய மேற்கொள்ளப்படும் சமூக பாதுகாப்பு முறைகள் | 1.3.2 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனடையும் பயனாளிகள் | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் பதிவு செய்யப்பட்ட அனைவரும் பயனடைவர் |



| இலக்கு | குறி இலக்கு எண் | குறி இலக்கு | மாநில குறியீடு கட்டமைப்பு | சாதனை |
|---|---|---|---|---|
| 2 | 2.1 | 2030 ஆம் ஆண்டிற்குள் வறுமையில்லா நிலையை அடைய உறுதி செய்தல் அதற்கு குழந்தைகளின் பாதுகாப்பு, ஊட்டச்சத்து மற்றும் போதுமான உணவு அளித்தல் | 2.1.1 5 வயதுக்குட்பட்ட எடை குறைவான குழந்தைகள் சதவிகிதம் | 23.8 % லிருந்து 8.13% ஆக குறைக்கப்பட்டது |
| 3 | 2.2 | 2030 ஆம் ஆண்டிற்குள் அனைத்து விதமான ஊட்டச்சத்துக் குறைபாடுகளை தவிர்த்தல், அத்துடன் 2025ஆம் ஆண்டிற்குள் சர்வதேச அளவில் இலக்கிடப்பட்டுள்ள குறியீடுகளான 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் மெலிந்த மற்றும் குள்ளத் தன்மையினைக் குறைத்தல், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் முதியவர்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து தேவையினை பூர்த்தி செய்தல். | 2.2.1 5 வயதிற்குட்பட்ட குள்ளத்தன்மை உள்ள குழந்தைகள் சதவிகிதம்.<br><br>2.2.2 5 வயதிற்குட்பட்ட மெலிந்த குழந்தைகள் சதவிகிதம் | 27.1%லிருந்து 24.29%ஆக குறைக்கப்பட்டது<br><br>19.7 % லிருந்து 6.63% ஆக குறைக்கப்பட்டது |

**4.18 குழந்தைகள் மையங்களுக்கு வருகை புரியும் முன்பருவக் கல்வி குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ணச் சீருடைகள் வழங்குதல்**

பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை மையத்திற்கு தவறாது அனுப்புவதை ஊக்குவிக்கவும், குழந்தைகள் மையங்களுக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டும் குழந்தைகள் மையங்களுக்கு வருகைபுரியும் 2 வயது முதல் 6 வயது வரையிலான முன்பருவக்கல்வி பயிலும் குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ண சீருடைகள் வழங்கும் திட்டம் முதலில் 5 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, தற்போது இத்திட்டம் 25 ஒருங்கிணைந்த மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு குழந்தைக்கு ரூ.262.50 மதிப்பில் மாநில அரசின் நிதியினை கொண்டு, 2021–22 ஆம் ஆண்டில் 9.57 இலட்சம் குழந்தைகள் பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



மேலும் மீதமுள்ள 7 ஒருங்கிணைந்த மாவட்டங்களில் ரூ.4.15 கோடி செலவில் இத்திட்டத்தினை 2022–23 ஆம் ஆண்டில் செயல்படுத்திட நிர்வாக ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**2022–2023–ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.28.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**4.19 குழந்தைகள் மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

**(அ) குழந்தைகள் மையங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு தொகை**

அரசு சொந்த கட்டடங்களில் இயங்கி வரும் குழந்தைகள் மைய கட்டடங்களில் ஏற்படும் சிறிய வகையிலான பழுதுகளை நீக்குவதற்கும், சமையலுக்குத் தேவையான பாத்திரங்கள் வாங்குவதற்கும் மற்றும் இதர செலவினங்களுக்காக வருடாந்திர பராமரிப்பு நிதியாக ஒன்றிய அரசால், கடந்த 3 ஆண்டுகளாக குழந்தைகள்மையம் ஒன்றிற்கு

ரூ.3000/-(60:40 ஒன்றிய அரசு : மாநில அரசு என்ற நிதி பகிர்வின் அடிப்படையில்) வழங்கப்பட்டு வருகிறது

**2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.13.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(ஆ) குழந்தைகள் மையங்களுக்கு மின் வசதி ஏற்படுத்துதல்**

குழந்தைகள் மையத்திற்கு வருகைபுரியும் குழந்தைகளை கோடை கால வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டு குழந்தைகள் மையங்களுக்கு மின் இணைப்பு, மின் விசிறி மற்றும் குழல் விளக்கு ஆகியன வழங்கி மின் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் அரசு கட்டடங்களில் செயல்படும் 7,757 குழந்தைகள் மையங்களுக்கு தலா ரூ.10,000/- செலவில் மின்வசதி ஏற்படுத்திட ஆணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.



**(இ) தனியார் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் குழந்தைகள் மையங்களுக்கு வழங்கப்பட்டு வரும் வாடகை தொகையினை உயர்த்தி வழங்குதல்**

தனியார் வாடகைக் கட்டடங்களில் செயல்படும் குழந்தைகள் மையங்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர வாடகை தொகை 1.10.2021 முதல் பின்வருமாறு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

| பகுதி | ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மாதாந்திர வாடகை தொகை (ரூபாயில்) | 01.10.2021 முதல் உயர்த்தப்பட்ட மாதாந்திர வாடகை தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| ஊரகம் | 750/- | 1000/- |
| நகர்ப்புறம் | 3000/- | 4000/- |
| பெரு மாநகராட்சி | 5000/- | 6000/- |

### 4.20 தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம்

சமுதாயத்தில் பணிக்கு செல்லும் தாய்மார்களின் 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைளை மிகவும் பாதுகாப்பான இடத்தில் பராமரிக்கவும் பணிபுரியும் பெண்கள் தொடர்ந்து பணிக்கு செல்வதை ஊக்குவிக்கும் வகையில் தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம் முக்கிய பங்கு வகிக்கின்றது. தற்போது, தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டத்தின் கீழ் 320 காப்பகங்கள் 60:30:10 என்ற நிதி பகிர்வின் அடிப்படையில் (60%ஒன்றிய அரசு : 30% மாநில அரசு : 10%: தொண்டு நிறுவனம்) தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

மகளிர் தங்கள் வாழ்வில் பொருளாதார முன்னேற்றம் பெற்று தேவையான மேம்பாட்டினை அடைய, ஒன்றிய அரசு நகரப் பகுதிகளில் போதுமான இடவசதி உள்ள அங்கன்வாடி மையங்களில் குழந்தைகள் காப்பகம் அமைத்திட மாநில அரசின் பிரேரணையினை கோரியுள்ளது. அதனடிப்படையில் 



மையங்களை தெரிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**2022–2023–ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.6.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 4.21 அங்கன்வாடிப் பணியாளர்களின் நலன்

தமிழகத்தில் உள்ள 54,439 குழந்தைகள் மையங்களில் பணிபுரியும் அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் 7–வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி வழங்கப்பட்டு வருகிறது.

(ரூபாயில்)

| வ. எண். | பதவி | சிறப்பு காலமுறை ஊதியம் |
|---|---|---|
| 1. | அங்கன்வாடிப் பணியாளர்கள் | 7,700 – 24,200 |
| 2. | குறு அங்கன்வாடிப் பணியாளர்கள் | 5,700 – 18,000 |
| 3. | அங்கன்வாடி உதவியாளர்கள் | 4,100 – 12,500 |

இது தவிர, அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி, மலைவாழ்படி மற்றும் குளிர்காலப்படி மற்றும் ஆண்டு ஊதிய உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது. தமிழக அரசால் அங்கன்வாடிப் பணியாளர்கள் மேம்பாட்டிற்கென மேற்கொள்ளப்படும் கூடுதல் செலவின விவரம்:

(ரூபாயில்)

| வ. எண் | பதவி | ஒன்றிய அரசால் அனுமதிக்கப்பட்ட மதிப்பூதியம் | ஒன்றிய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மாநில அரசின் கூடுதல் பங்கு |
|---|---|---|---|---|---|
| 1 | அங்கன்வாடிப் பணியாளர் | 4,500 | 2,700 | 1,800 | 7,547 |
| 2 | குறு அங்கன்வாடிப் பணியாளர் | 3,500 | 2,100 | 1,400 | 5,927 |
| 3 | உதவியாளர் | 2,250 | 1,350 | 900 | 5,081 |

ஒட்டுமொத்த ஓய்வு தொகையாக அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ரூ.1,00,000/– மும், அங்கன்வாடி



உதவியாளர்களுக்கு ரூ.50,000/–மும் 01.10.2017 முதல் வழங்கப்படுகிறது. அங்கன்வாடி ஊழியர்களுக்கு மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வூதியப் பலன்களுடன் விருப்ப ஓய்வு அனுமதிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு இரண்டு புடவைகள் புடவை ஒன்றுக்கு ரூ.400/– வீதம் சீருடையாக வழங்கப்படுகிறது.

அங்கன்வாடி ஊழியர்களுக்கு ஆண்டுதோறும் கீழ்காணும் வகையில் கோடை விடுமுறை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பதவி | கோடை விடுமுறை விவரம் |
|---|---|---|
| 1. | அங்கன்வாடிப் பணியாளர்கள் | மே மாதம் 2வது வாரம் |
| 2. | அங்கன்வாடி உதவியாளர்கள் | மே மாதம் 3வது வாரம் |
| 3. | குறு அங்கன்வாடிப் பணியாளர்கள் | மே மாதம் 4வது வாரம் |

அங்கன்வாடி ஊழியர்களுக்கு 180 நாட்கள் மகப்பேறு விடுப்பாக இரண்டு குழந்தை பிறப்பிற்கு

அனுமதிக்கப்படுகிறது. ஊனமுற்ற அங்கன்வாடி ஊழியர்களுக்கு போக்குவரத்துப் படியாக மாதம் ஒன்றுக்கு ரூ.2500/– வீதம் வழங்கப்படுகிறது. இறந்த அங்கன்வாடி ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப நல நிதியாக ரூ.5.00 இலட்சம் வழங்கப்படுகிறது. 2015ம் ஆண்டு முதல் சிறப்பு பொது வருங்கால வைப்பு நிதி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2 வருடம் அனுபவமுள்ள 42 வயதிற்குட்பட்ட அங்கன்வாடிப் பணியாளர்கள் கிராம சுகாதார செவிலியர் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு பொது சுகாதாரத் துறையில் கிராம சுகாதார செவிலியர்களாக பணிநியமனம் வழங்கப்பட்டு வருகிறது. 10 ஆண்டுகள் பணிமுடித்த 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அங்கன்வாடிப் பணியாளர்கள் பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படுகிறது.



2021–ஆம் ஆண்டு முதல் உதவியாளர்களது ஓய்வு பெறும் வயது 58 லிருந்து 60 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 25% அங்கன்வாடி ஊழியர் பணியிடங்கள் 09.11.2021 முதல் விதவைகள் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் அனைத்து நிலைகளிலும் குழந்தையின் உயர்தரமான முழு வளர்ச்சிப் பணிகளை ஊக்குவித்து உறுதி செய்யும் வகையிலும், அதன் மூலம் சமுதாயம் மற்றும் அரசியல் பங்களிப்புடன் அனைத்து நிலையில் உள்ள மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்து அவற்றை மேம்படுத்தி முழு பங்கேற்புடன் நலப்பணிகள் சென்றடைய திட்டமிடப்பட்டுள்ளது.

## அத்தியாயம்–5

## சமூகப் பாதுகாப்பு

குழந்தைகள் மனிதகுலத்திற்கு கிடைக்கப்பெற்ற உயரிய பரிசாகும். குழந்தைப் பருவம் என்பது மனித வளர்ச்சியின் ஒரு முக்கியமான கட்டமாகவும், ஒரு சமூகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கான நம்பிக்கை கூறுகளை உள்ளடக்கியதாகவும் உள்ளது. வன்முறை, சுரண்டல், புறக்கணிப்பு மற்றும் பாகுபாடு இல்லாத பாதுகாப்பான சூழலில் அறிவுத் திறனையும் உடல் மற்றும் சமூக நலனையும் மேம்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்க தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது. குழந்தைகளின் தேவைகள் மற்றும் விருப்பங்கள் பல்வகைப்பட்டதாக உள்ளதால் அவர்களுக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் ஒரு பொதுத் திட்டமாக இல்லாமல் ஒவ்வொரு குழந்தையையும் தனிநபராக கருதி அவர்களின் பிரச்சினையையும் தீர்க்கின்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கான



தமிழ்நாடு மாநிலக் கொள்கை, 2021–ஐ அரசு சமீபத்தில் வெளியிட்டுள்ளது. இது சட்டத்தால் வகுக்கப்பட்ட கடமைகளை மட்டுமே நிறைவேற்றுவதாக இல்லாமல், குழந்தைப் பருவம் தொடங்கி, அவர்கள் சுய நிலைத்தன்மையை அடையும் வரை ஒவ்வொரு கட்டத்திலும் குழந்தைகளின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் வடிவமைக்கப்பட்டுள்ளது. சமூகப் பங்கேற்புடன் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் பல்வேறு துறைகளில் உள்ள வளங்களை ஒருங்கிணைத்து அவற்றை திறம்பட பயன்படுத்த சிறப்பான வழிமுறை வகுக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கான பாதுகாப்பு கட்டமைப்பினை, கடைநிலையிலிருந்து வலுப்படுத்துவதற்காகவும், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கவும், பாதுகாக்கவும் முழுமையாக செயலாற்றவும் கிராமம், மண்டலம், வட்டம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்றிய அரசின் நிதி ஆதரவு

திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு காரணமாக, அதிக எண்ணிக்கையிலான சிறுவர்கள் நிதியுதவியை எதிர்நோக்கி காத்திருப்புப் பட்டியலில் இருந்தனர். காத்திருப்பு பட்டியலில் இருந்த அனைத்து சிறார்களுக்கும் நிதியுதவியை முழுவதுமாக மாநில அரசின் நிதியிலிருந்து வழங்கி எவர் ஒருவரும் விடுபடுதல் கூடாது என்ற தனது உறுதிப்பாட்டை மாநில அரசு மீண்டும் நிலைநிறுத்தியுள்ளது. குழந்தைகள் பாதுகாப்பிற்கு பொறுப்பானவர்களின் செயல்திறனை மேம்படுத்தி சிறப்பான சேவைகள் வழங்குவதற்கு அரசால் சமீபத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ள பயிற்சிமையம் நீண்டகாலம் பயனளிக்கக்கூடியதாக அமைந்துள்ளது.

கோவிட்–19 தொற்றுநோயிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க அரசு மேற்கொண்ட முன்முயற்சிகள், நிறுவனங்களிலும், குடும்பங்களிலும் வசிக்கும் குழந்தைகளுக்கு ஒரு பாதுகாப்பு வலையை ஏற்படுத்தி, குழந்தைகளிடையே நோய்த்தொற்று மற்றும்



இறப்பு நிகழ்வுகளைக் கணிசமாகக் குறைத்துள்ளது. அதிக நிதி சுமை உள்ளதை பொருட்படுத்தாது கோவிட்–19 நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட பல்வேறு நலத்திட்டங்கள் குழந்தைகளின் மீதான அரசின் அக்கறையை மீண்டும் நிரூபித்து தேசிய அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது. குழந்தைகள் உலகின் மிகவும் மதிப்புமிக்க வளம் மற்றும் எதிர்காலத்திற்கான சிறந்த நம்பிக்கை என்பதை கருத்தில் கொண்டு, சமீப காலங்களில் கணிசமாக நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டு குழந்தைகளுக்காக பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5.1** சமூகப் பாதுகாப்பு இயக்குநரகம் மூலம் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளின் தேவைகளை பூர்த்தி செய்ய நிறுவனம் மற்றும் நிறுவனம் சாராத

சேவைகளை வழங்குவதற்காக சிறப்பான இளைஞர் நீதி அமைப்பை அரசு நிறுவியுள்ளது.

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–ன் விதிகளின் கீழ், சமூக பாதுகாப்புத் துறையானது குழந்தைகள் இல்லங்கள், திறந்த வெளி புகலிடங்கள், சிறப்பு தத்தெடுப்பு மையங்கள், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லம் ஆகியவற்றை பராமரித்து வருகிறது. இந்த நிறுவனங்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளின் மறுவாழ்வுக்காக பராமரிப்பு, பாதுகாப்பு, கல்வி, சிகிச்சை மற்றும் தொழில் பயிற்சிகளை வழங்குகின்றன. ஒன்றிய மற்றும் மாநில அரசு இணைந்து வழங்கும் "மிஷன் வாத்சல்யா" திட்டத்தின் கீழ் குழந்தைகள் பாதுகாப்பு சேவைகளை திறம்பட செயல்படுத்துவதற்கான கட்டமைப்புகளை மாநில அரசு உருவாக்கியுள்ளது.



பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் கடத்தலிலிருந்து மீட்கப்பட்ட மகளிருக்கு நிறுவன பராமரிப்பு வசதிகளை வழங்குவதற்காகவும், இயலும் நேர்வுகளில் அவர்களை குடும்பத்தோடு ஒன்றிணைப்பதற்காகவும் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956ன் கீழ் விழிப்புப்பணி / மகளிர் காப்பகங்கள் நிறுவப்பட்டுள்ளது.

பராமரிப்பு நிறுவனங்களிலிருந்து வீடேகும் குழந்தைகள் / பெண்களுக்கு அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் நடத்தப்படும் பிற்காப்பு நிறுவனங்களின் மூலம் பிற்காப்பு சேவை வழங்கப்படுகிறது.

**5.1.1 சமூகப் பாதுகாப்பு இயக்குநரகத்தால் செயல்படுத்தப்படும் சட்டங்கள்**

i. இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015

ii. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012

iii. குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005

iv. ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956

## 5.2 இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015, குழந்தையின் சிறந்த நலனைக் கருத்தில் கொண்டு, குழந்தை நேய சூழலுக்கு ஏற்ற அணுகுமுறையைக் கடைப்பிடித்து இடர்பாடான சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளின் முறையான பராமரிப்பு, பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல் ஆகியவற்றை உறுதி செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது. இச்சட்டம், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளை கையாளுவது குறித்து சட்ட ரீதியான வழிமுறைகளை வழங்கியுள்ளது.



### 5.2.1 பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015, பிரிவு 2 (14)–ன்படி, "பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தை" என்பது வீடு அல்லது தங்குமிடம் இல்லாமல் வாழ்வாதாரமின்றி காணப்படும் ஒரு குழந்தை அல்லது குழந்தை தொழிலாளர் சட்டத்திற்கு முரண்பாடாக வேலை செய்யும் குழந்தைகள் / மனநலம் பாதிக்கப்பட்ட / மாற்றுத் திறனாளி / பெற்றோர் அல்லது பாதுகாவலர் தகுதியற்றவர் அல்லது இயலாதவர் எனக் கண்டறிப்பட்டவர்களின் குழந்தைகள்/ சாலையோர குழந்தைகள்/ பிச்சையெடுக்கும் குழந்தைகள் / உரிய வயதை அடையாத நிலையில் திருமணத்திற்கு உட்படுத்தப்படும் ஆபத்தில் உள்ளவர் /பெற்றோர் இல்லாதவர் / பராமரிக்க எவரும் தயாராக இல்லாதவர்கள்/ தீங்கிழைக்கப்பட்ட / பெற்றோரால்

கைவிடப்பட்ட குழந்தைகள் / காணாமல்போன குழந்தைகள் மற்றும் உரிய விசாரணைக்கு பின்னர் பெற்றோர்களை கண்டறிய இயலாத குழந்தைகள் போன்ற குழந்தைகள் ஆவர்.

**5.2.1.1 குழந்தை நலக் குழுக்கள்**

குழந்தை நலக் குழுக்களானது, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–ன்படி அமைக்கப்பெற்ற சட்டப்பூர்வமான அமைப்பாகும். பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கென வழங்கப்பட்டுள்ள அதிகார வரைமுறைக்குட்பட்டு குழந்தைகள் தொடர்பான நேர்வுகளைத் தீர்வு செய்வதற்கான அமைப்பாகும். 1973ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறைவிதிகளின்படி, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை கொண்டதாகும். இக்குழு ஒரு தலைவர் மற்றும் நான்கு



உறுப்பினர்களைக் (ஒரு மகளிர் உறுப்பினர் உட்பட) கொண்டது. குழந்தை நலக் குழுவின் அனைத்து நடைமுறைகளும் குழந்தைகளின் அதிகபட்ச நலனை உறுதிசெய்யும் வகையில் குழந்தை நேய அணுகுமுறையை கடைப்பிடித்து வருகிறது. தமிழக அரசு, மாநிலத்தின் 38 மாவட்டங்களை உள்ளடக்கி 34 குழந்தை நலக்குழுக்களை நிறுவியுள்ளது. இக்குழுக்களின் மூலம் 2021–2022 ஆம் ஆண்டில் 22,968 வழக்குகள் கையாளப்பட்டுள்ளன. புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களுக்கு பிரத்தியேகமாக 6 புதிய குழந்தை நலக் குழுக்கள் அமைக்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

**குழந்தை நலக் குழுக்கள் திறம்பட செயல்படுவதற்காக 2022–2023 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.8.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

#### 5.2.1.2 குழந்தைகள் இல்லங்கள்

குழந்தை நலக் குழுக்களால், உரிய விசாரணைக்குப் பிறகு "பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்" எனக் கண்டறியப்பட்டு, குழந்தைகள் இல்லங்களில் குறுகிய கால மற்றும் நீண்ட கால பராமரிப்பு, சிகிச்சை, கல்வி, பயிற்சி, முன்னேற்றம் மற்றும் மறுவாழ்விற்காக தங்க வைக்கப்படுகின்றனர். குழந்தைகள் இல்லங்கள் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–இன் கீழ் மாநிலம் முழுவதும் நிறுவப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. மாநிலத்தில் செயல்பட்டுவரும் 978 குழந்தைகள் இல்லங்கள் சமூக பாதுகாப்புத் துறையால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. 36 குழந்தைகள் இல்லங்கள் நேரடியாக அரசாலும், 147 குழந்தைகள் இல்லங்கள் அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் மனநலம் குன்றிய மற்றும் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 5 இல்லங்கள்



தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்காணும் 147 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு குழந்தை பாதுகாப்புச் சேவைகளின் கீழ் ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.2,160/–வீதம் பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டு வருவதுடன், வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக உணவு, உடை, தங்குமிடம், மருத்துவ உதவிகள், கல்வி, தொழிற்கல்வி முதலியன வழங்கப்பட்டு வருகின்றன. கொரோனா தொற்றுநோயை அரசு திறம்பட கையாண்டதால், குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் 11,109 என்பதிலிருந்து படிப்படியாக 35,903 என அதிகரித்துள்ளது.

**2022-2023-ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.123.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.2.1.3 நகர்ப்புறம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கான திறந்த வெளிப் புகலிடங்கள்.**

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் அனைத்து குழந்தைகள் குறிப்பாக பிச்சையெடுக்கும் சிறார்கள், தெருவோர மற்றும் பணிபுரியும் சிறார்கள், குப்பைப்பொறுக்கும் சிறார்கள், சிறு வியாபாரிகள், தெருக்கூத்தாடிகள், ஆதரவற்ற, கைவிடப்பட்ட, கடத்தப்பட்ட, வீட்டை விட்டு வெளியேறிய, புலம் பெயர்ந்த குழந்தைகள் மற்றும் ஏனைய பாதிப்பிற்குள்ளாகும் சூழலில் உள்ள குழந்தைகள் தற்காலிகமாக தங்க வைக்க நகர்ப்புறம் மற்றும் புறநகர் பகுதிகளில் திறந்தவெளி புகலிடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டம் வீடற்ற மற்றும் தெருவோர குழந்தைகளை இலக்காக கொண்டு



அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறது. தற்போது, தமிழ்நாட்டில் உள்ள 16 திறந்தவெளிப் புகலிடங்களில், 11 திறந்தவெளிப் புகலிடங்கள் அரசின் நிதி உதவியுடன் இயங்கி வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.2,160/-வீதம் பராமரிப்பு மானியமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருவதுடன் வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் குழந்தை பாதுகாப்பு சேவைகளின் கீழ் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இப்புகலிடங்களில் 400 குழந்தைகள் தங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**2022-2023-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.3 பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்காக அரசால் எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள்**

போட்டித் திறன்களை வளர்ப்பதற்கும், சமூகப் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கும், நிறுவன பராமரிப்பில் உள்ள குழந்தைகளின் வளர்ச்சியினை விரிவுபடுத்துவதற்கும், சமூக பாதுகாப்பு இயக்குநரகத்தின் கீழ் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:–

**(அ) கோவிட் – 19 காரணமாக பெற்றோரை இழந்த குந்தைகளுக்கான முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் (CMPRF) கீழ் நிதி உதவி மற்றும் பல்வேறு நலத்திட்டங்கள்.**

குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பில் எப்பொழுதும் அதிக அக்கறை கொண்ட தமிழக அரசு பல்வேறு புதுமையான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இப்பெருந்தொற்று காலத்தில் கோவிட்–19 தொற்றால் பாதிக்கப்பட்ட/ தொற்றுக்குள்ளான



குழந்தைகள் மற்றும் கோவிட்–19–ல் பாதிக்கப்பட்ட/ தொற்றுக்குள்ளான பெற்றோரின் குழந்தைகளுக்கு மறுவாழ்வளிக்க அரசு விரைவான நடவடிக்கை எடுத்துள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோவிட்–19 காரணமாக பெற்றோர் இருவரையும் இழந்த அல்லது பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகளுக்கு பல்வேறு நலன் சார்ந்த நடவடிக்கைகளை அறிவித்துள்ளார். கோவிட்–19 பெருந்தொற்று காரணமாக பெற்றோரை இழந்த குழந்தைகளுக்காக பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

1. **கொரோனா நோய்த் தொற்றினால் பெற்றோர்களை இழந்து, ஆதரவின்றி தவிக்கும் குழந்தைகளுக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து குழந்தையின் பெயரில் ரூ.5.00 இலட்சம் தமிழ்நாடு மின் நிதி நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டு அக்குழந்தை 18 வயது நிறைவடையும் போது, அத்தொகையை குழந்தைக்கு வட்டியோடு வழங்குதல்.**

2. ஏற்கெனவே தாய் அல்லது தந்தையை இழந்து, தற்போது கொரோனா நோய்த் தொற்றினால் மற்றொரு பெற்றோரையும் இழந்த குழந்தைகளுக்கும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து குழந்தையின் பெயரில் ரூ.5.00 இலட்சம் தமிழ்நாடு மின் நிதி நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டு அக்குழந்தை 18 வயது நிறைவடையும் போது, அத்தொகையை குழந்தைக்கு வட்டியோடு வழங்குதல்.

3. பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்லங்கள் மற்றும் விடுதிகளில் சேருவதற்கு முன்னுரிமை வழங்குதல்.

4. பெற்றோர்களை இழந்த குழந்தைகளின் பட்டப்படிப்பு வரையிலான கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து செலவினங்களையும் அரசே ஏற்றுக்கொள்ளுதல்.

5. பெற்றோர்களை இழந்த குழந்தை, அரசு காப்பகம் அல்லது விடுதிகளில் இல்லாது, உறவினர்/ பாதுகாவலரின் ஆதரவில் வளரும்போது பராமரிப்புச் செலவாக, மாதந்தோறும் ரூ.3,000/– உதவித் தொகை, குழந்தையின் 18 வயது நிறைவடையும் வரையில் வழங்குதல்.



6. கொரோனா நோய்த் தொற்றினால் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தந்தை அல்லது தாய்க்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து உடனடி நிவாரணத் தொகையாக ரூ.3.00 இலட்சம் வழங்குதல்.

7. இக்குழந்தைகளுக்கும், நோய்த் தொற்றினால் கணவன் அல்லது மனைவியை இழந்து, குழந்தையுடன் இருக்கும் பெற்றோருக்கும் அனைத்து அரசு நலத் திட்டங்களிலும் முன்னுரிமை வழங்குதல்.

ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்படும் நிதியுதவி, கல்வி, பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டில் அவர்களின் முன்னேற்றம் ஆகியவற்றை கண்காணிக்க மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுவரை, கோவிட்–19 நோய்தொற்றால் பாதிக்கப்பட்டு பெற்றோர் இருவரை இழந்த 338

குழந்தைகளுக்கு ரூ.16.90 கோடியும், பெற்றோரில் ஒருவரை இழந்த 10,325 குழந்தைகளுக்கு ரூ.309.75 கோடியும், ஆக மொத்தம் 10,663 குழந்தைகளுக்கு ரூ.326.65 கோடி நிதியுதவி தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பெற்றோர் இருவரையும் இழந்து, பதிவு செய்யப்பட்ட குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் அல்லது அரசு விடுதிகளில் சேர்க்கப்படாமல், அவர்களது உறவினர்/பாதுகாவலருடன் வசிக்கும் 308 குழந்தைகளுக்கு, குழந்தை 18 வயதை நிறைவு செய்யும் வரை மாதம் ஒன்றுக்கு ரூ.3,000/– வீதம் பராமரிப்பு தொகையாக அரசு ரூ.84.93 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.



**(ஆ) பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் (போக்சோ) சட்டம், 2012ன் கீழ் "தமிழ்நாடு பாதிக்கப்பட்ட குழந்தை இழப்பீட்டு நிதி"**

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012–ஆனது பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மறுவாழ்வுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான ஒரு நடவடிக்கையாக அவர்களுக்கு இழப்பீடு வழங்க வழிவகை செய்கிறது.

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012ன் கீழ் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக ஆரம்பத் தொகையான ரூ.2.00 கோடியுடன் "தமிழ்நாடு பாதிக்கப்பட்ட குழந்தை இழப்பீட்டு நிதியை" அரசு உருவாக்கியுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாலியல் குற்றங்களில் இருந்து

குழந்தைகளைப் பாதுகாத்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கான மாநிலத் திட்டங்களை ஆய்வு செய்தார். இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்குவது குறித்து தனது அக்கறையை தெரிவித்தார். இதையடுத்து, இந்த நிதிக்கு அரசு ரூ.5.00 கோடியை விடுவித்தது. இதுவரை பாதிக்கப்பட்ட 373 குழந்தைகளுக்கு ரூ.6.99 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

**2022-2023 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

(இ) **நிதி ஆதரவுத் திட்டம்**

ஒரு குழந்தையை நிறுவனத்தில் அனுமதிப்பதை தவிர்த்து குடும்பத்துடன் இருந்து பெற்றோரின் அன்பு மற்றும் பாசத்தை அனுபவித்து கல்வியைத் தொடர நிதி ஆதரவுத் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.2,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் உதவிக்குத்



தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு குழந்தையும், மூன்று வருட காலத்திற்குப் பயன் பெறத் தகுதியுடையவர்கள். மாநிலத்தில் 1,312 குழந்தைகள் தற்போது ஒன்றிய மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நிதி ஆதரவுத் திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர். இத்திட்டத்திற்கான ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கீடு அனைத்து தகுதியான குழந்தைகளுக்கும் வழங்க போதுமானதாக இல்லாததால், மாநில அரசு கூடுதலாக 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.1.38 கோடி முழுவதுமாக மாநில அரசின் நிதியிலிருந்து வழங்கி காத்திருப்போர் பட்டியலிலிருந்த 1,148 குழந்தைகளுக்கும் வழங்கி எவர் ஒருவரும் விடுபடாமல் பயன்பெறுதல் வேண்டும் என்ற தனது கொள்கையை நிலைநிறுத்தியுள்ளது.

**(ஈ) மாநில அளவிலான வருடாந்திர விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்**

சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் 36 அரசு குழந்தைகள் இல்லங்கள் மற்றும்

அரசின் மானியம் பெறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் திறமைகளைக் கண்டறிந்து அவர்களை ஊக்குவிக்க தமிழ்நாடு அரசால், மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் 2017–ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ரூ.25.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், குழந்தை பராமரிப்பு இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகள் விளையாட்டில் தொடர்ந்து ஈடுபட விளையாட்டு பொருட்கள் கொள்முதல் செய்ய ரூ.2.75 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

**2022–2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(உ) குழந்தைகளுக்கான கல்வி சுற்றுலா திட்டம்**

சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் 36 அரசு குழந்தைகள் இல்ல குழந்தைகளுக்கு,



வெளியுலக அனுபவத்தை பெறும் வாய்ப்பினை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் கல்வி சுற்றுலா திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2022–2023 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(ஊ) குழந்தை தகவல் அமைப்பு**

குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு குறித்த முழுமையான நம்பத்தகுந்த தரவுகளை சேகரிக்கவும், செயல்பாட்டாளர்களிடையே தரவுகளை பகிரவும், குழந்தைகளுக்கான சேவைகளை கண்காணித்து வலுப்படுத்தவும், இளைஞர் நீதி அமைப்பின் கீழ் குழந்தைகளுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் உண்மை நிலவரத்தை அறிந்து செயல்படவும், குழந்தை தகவல் அமைப்பு ரூ.65.00 இலட்சம் செலவில் உருவாக்க அரசு ஆணை வழங்கியுள்ளது. குழந்தைகளின் முன்னேற்றத்தை ஒவ்வொரு நிலையில் கண்டறியவும்

எளிய முறையில் உபயோகப்படுத்தும் வகையிலும் இம்மின்னணு முறை அமைந்துள்ளது. தரவுகளை எளிதில் பெறவும் மேலாண்மை செய்யவும் தேவைப்படும் நிகழ்வுகளில் அச்சுப்பிரதி எடுக்கும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

**5.3.1 குழந்தை தத்தெடுப்பு**

"தத்தெடுப்பு" என்பது குழந்தைகளுக்கு ஒரு குடும்பத்தைக் கண்டறியவும் பெற்றோரின் அரவணைப்பில் வளரவும் ஒரு வாய்ப்பாகும். "தத்தெடுப்பு" என்பது ஒரு செயல்முறையாகும், இதன் மூலம் தத்தெடுக்கப்பட்ட குழந்தை தனது உயிரியல் பெற்றோரிடமிருந்து நிரந்தரமாக பிரிக்கப்பட்டு, உறவுகளுடன் இணைக்கப்பட்ட அனைத்து உரிமைகள், சலுகைகள் மற்றும் பொறுப்புகளை பெற்று தத்து பெற்றோரின் சட்டப்பூர்வமான குழந்தையாக மாற்றும்.

ஒரு குழந்தையை குடும்ப பராமரிப்பில் வைக்க முடியாத நிலை ஏற்பட்டால் மட்டுமே கடைசி



முயற்சியாக நிறுவன பராமரிப்பில் வைக்கப்பட வேண்டும். தத்தெடுப்பின் இறுதி நோக்கம் குழந்தைகளுக்கு பொருத்தமான குடும்பங்களைக் கண்டறிவதே தவிர குடும்பங்களுக்கான குழந்தைகளை கண்டறிவது அல்ல.

குழந்தைகள் தத்தெடுப்பு, மத்திய தத்தெடுப்பு வள அமைப்பால் (CARA) நிர்வகிக்கப்படுகிறது. இது ஒன்றிய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் உள்ள தன்னாட்சி அமைப்பாகும். தத்தெடுப்பு நடைமுறைகள் நாடு முழுவதும் ஒரே மாதிரியாக இணையவழி மூலம் செய்யப்படுகின்றன.

மாநில தத்தெடுப்பு வள முகமை (SARA) தத்தெடுக்கும் பெற்றோர், சிறப்பு தத்தெடுப்பு மையங்கள் மற்றும் மத்திய தத்தெடுப்பு வள அமைப்பு ஆகியவற்றுக்கு இடையே ஒரு பாலமாகச் செயல்படுவதன் மூலம் தத்தெடுப்பை எளிதாக்குகிறது. இது சமூகப் பாதுகாப்பு இயக்குநரகத்தில்

செயல்படுகிறது. தத்தெடுத்தலை எளிதாகப் புரிந்துகொள்வதற்காக குழந்தைகள் தத்தெடுப்பு பற்றிய கையேடு ஒன்றை மாநில தத்து வள முகமை வெளியிட்டுள்ளது. பொதுமக்களிடையே குழந்தை தத்தெடுத்தல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் செய்திகளை பரப்புவதற்கும் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள், சிறப்பு தத்தெடுப்பு முகமைகள், சமூகக் குழுக்கள் மற்றும் பொது இடங்களில் விளம்பர பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. சட்ட பூர்வமற்ற குழந்தை தத்தெடுத்தலைத் தடுக்க மருத்துவ துறை வல்லுநர்களுக்கும் இதர பங்குதாரர்களுக்கும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மத்திய தத்தெடுப்பு வள அமைப்புடன் (CARA) இணைந்து சிறப்பு தத்தெடுப்பு முகமைகளை அவ்வப்போது கண்காணிப்பதும் வருங்கால தத்தெடுக்கும் பெற்றோரின் குறைகளை



நிவர்த்தி செய்வதும் மாநில தத்தெடுப்பு வள முகமையின் (SARA) முக்கியமான முயற்சிகளாகும்.

**5.3.2 சிறப்பு தத்தெடுப்பு முகமைகள்**

தமிழ்நாட்டில், உள் மற்றும் வெளிநாட்டில் தத்து வழங்கிட 23 சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள் செயல்படுகின்றன. மேற்படி முகமைகள் முறையே மதுரையில் இரண்டும், காஞ்சிபுரத்தில் மூன்றும், சேலத்தில் இரண்டும் மற்றும் அரியலூர், சென்னை, கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், கன்னியாகுமரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றும் என தத்தெடுப்பு முகமைகள் அமைந்துள்ளன.

1993 முதல் பிப்ரவரி 2022 வரை தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகளின் விவரம் கீழ்க்கண்டவாறு.–

| வ. எண் | தத்தெடுப்பின் தன்மை | தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| 1 | உள்நாட்டுத் தத்தெடுப்பு | 1,681 | 4,427 | 6,108 |
| 2 | வெளிநாட்டுத் தத்தெடுப்பு | 125 | 406 | 531 |
| மொத்தம் | | 1,806 | 4,833 | 6,639 |

2021–2022 ஆம் ஆண்டில் தத்து வழங்கப்பட்ட குழந்தைகளின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | தத்தெடுப்பின் தன்மை | தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| 1 | உள்நாட்டுத் தத்தெடுப்பு | 109 | 139 | 248 |
| 2 | வெளிநாட்டுத் தத்தெடுப்பு | 9 | 10 | 19 |
| மொத்தம் | | 118 | 149 | 267 |



### 5.4 சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகள்

குற்றம் புரிந்ததாக தெரிவிக்கப்படும் நாளன்று பதினெட்டு வயது நிறைவடையாத, சட்டத்திற்கு முரணான செயல்களை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட குழந்தைகள் "சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகள்" எனக் கருதப்படுவர்.

### 5.4.1 இளைஞர் நீதிக் குழுமங்கள்

இளைஞர் நீதிக் குழுமமானது, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–ன்படி அமைக்கப்பெற்ற சட்டப்பூர்வமான அமைப்பாகும். மேற்படி சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளில் சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளுக்கென வழங்கப்பட்டுள்ள அதிகார வரன்முறைக்குட்பட்டு குழந்தைகள் தொடர்பான நேர்வுகளைத் தீர்வு செய்வதற்கான அமைப்பாகும். இளைஞர் நீதிக் குழுமமானது, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவர்

(முதன்மை நீதித்துறை நடுவர்) மற்றும் இரண்டு சமூகப் பணி உறுப்பினர்கள் (ஒரு பெண் உறுப்பினர் உட்பட) ஆகியோரை உள்ளடக்கியது. இளைஞர் நீதிக் குழுமத்தின் அனைத்து நடைமுறைகளும் குழந்தைகளின் அதிகபட்ச நலனை உறுதிசெய்யும் வகையில் குழந்தை நேய அணுகுமுறையை கடைப்பிடித்து வருகிறது. தமிழக அரசு, மாநிலத்தின் 38 மாவட்டங்களை உள்ளடக்கி 32 இளைஞர் நீதிக் குழுமங்களை நிறுவியுள்ளது. இக்குழுக்களின் மூலம் 2021-2022 ஆம் ஆண்டில் 2,367 வழக்குகள் கையாளப்பட்டுள்ளன. புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களுக்கு பிரத்தியேகமாக 6 புதிய இளைஞர் நீதிக் குழுமங்கள் அமைக்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

**2022-2023-ஆம் ஆண்டு வரவு - செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.4.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



**5.4.2 கூர்நோக்கு இல்லங்கள்**

கூர்நோக்கு இல்லங்கள் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்கள், இளைஞர் நீதிக் குழுமங்களின் முன்பு விசாரணை மேற்கொள்ளப்படும் காலங்களில் தங்கும் வசதிகளை வழங்குகிறது. தமிழ்நாட்டில் தற்போது 9 கூர்நோக்கு இல்லங்கள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் உறையும் சிறார்களுக்கு அடிப்படைத் தேவைகளான தங்குமிடம், உணவு, உடை, படுக்கைகள் மற்றும் இதர சேவைகளாக மருத்துவ வசதிகள் மற்றும் அவர்களின் குறுகிய கால மறுவாழ்வின் ஒரு பகுதியாக கல்வி, முறைசாராக் கல்வி, தொழிற்கல்வி ஆகியவற்றோடு ஆற்றுப்படுத்துதல் சேவையும் வழங்கப்படுகின்றன. மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பிற்காக அரசு அனைத்து கூர்நோக்கு இல்லங்களிலும் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை அமைத்துள்ளது. தற்போது

9 கூர்நோக்கு இல்லங்களில் 189 குழந்தைகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**2022-2023 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 7.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.4.3 சிறப்பு இல்லங்கள்

இளைஞர் நீதி குழுமத்தால் வகுக்கபட்டவாறு சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளுக்கு 3 ஆண்டுகளுக்கு மிகாமல் நீண்டகால மறுவாழ்வு திட்டங்களை சிறப்பு இல்லங்கள் வழங்குகின்றன. சிறப்பு இல்லங்களில், குழந்தைகளுக்கு கல்வி, தொழிற்பயிற்சி, ஆற்றுப்படுத்துதல் மற்றும் இணை பாடத்திட்ட செயல்பாடுகளுக்கான வசதிகள் போன்ற சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. சென்னையில் சிறுமியருக்காகவும், செங்கல்பட்டில் சிறுவருக்குமாக இரண்டு அரசு சிறப்பு இல்லங்கள் உள்ளன. தற்போது 2 சிறப்பு இல்லங்களில் 23 குழந்தைகள் தங்க



வைக்கப்பட்டுள்ளனர். திறன் மற்றும் சுயதொழிலில் ஆர்வமுள்ள குழந்தைகள் சுய நிலைத்தன்மையை அடைவதற்காக, இளைஞர் நீதி நிதியின் கீழ் கருவிகள் மற்றும் உபகரணங்களை வழங்க நிதியுதவி செய்யப்படுகிறது.

**2022-2023 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 4.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

### 5.4.4 பாதுகாப்பு இல்லம்

பாதுகாப்பு இல்லம் என்பது 16 வயதிலிருந்து 18 வயதிற்கு இடைப்பட்ட குழந்தை ஒரு கொடுங்குற்றத்தைச் செய்ததாக கருதப்படுபவராகவோ அல்லது தண்டிக்கப்பட்ட குற்றவாளியாகவோ இருப்பவர்களை தங்க வைப்பதற்கான இல்லமாகும். 18 வயதிற்குள் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டு 18 வயதை கடந்த நபர்களும் தங்க வைப்பதற்கான இல்லமாகும். இவர்கள் இளைஞர் நீதிக் குழுமம் அல்லது குழந்தைகள் நீதிமன்றத்தின் ஆணையின்படி

அதிகபட்சமாக 21 வயது நிறைவடையும் வரை பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைக்கப்படுகின்றனர். தமிழ்நாட்டில் பாதுகாப்பு இல்லமானது வேலூரில் நிறுவப்பட்டுள்ளது. இவ்வில்லத்தில் தங்கியுள்ள காலங்களில் இவர்களுக்கு கல்வி, ஆற்றுப்படுத்துதல், நடத்தை மாற்றம் போன்றவை அடங்கிய சீர்திருத்த சேவைகள் வழங்கப்படுகின்றன. தற்போது சென்னை சிறுமியருக்கான சிறப்பு இல்லத்தின் ஒரு பகுதியை சிறுமியர்களுக்கான பாதுகாப்பு இல்லமாக அங்கீகரித்து அரசு ஆணை வழங்கியுள்ளது. தற்போது இவ்வில்லங்களில் 44 குழந்தைகள்/நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**2022-2023 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.46.51 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

### 5.5 தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன்படி குழந்தைகள் நலன்



மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள "தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி" ரூ.25.00 இலட்சம் குழும நிதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதி அரசின் திட்டங்களின் கீழ் வராத ஏனைய திட்டங்கள் மற்றும் அவசர தேவைகளை செயல்படுத்துவதற்கு வழிவகை செய்கிறது. இந்நிதி குழந்தைகளுக்கு கல்வி, மருத்துவம், பயிற்சி, விளையாட்டு, மூலதனப் பொருட்கள் மற்றும் வருவாய் ஈட்டுவதற்கான தொழில் துவங்குவதற்கான மூலதன தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. இதுவரை 59 குழந்தைகளுக்கு ரூ.12,04,329/- நிதி செலவிடப்பட்டுள்ளது.

### 5.6 குழந்தைகளுக்கான பிரத்தியேக போதை தடுப்பு மையம்.

குழந்தைகளுக்கான பிரத்தியேக போதை தடுப்பு மையம், குழந்தைகள் குறிப்பாக சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளிடையே காணப்படும் போதை மருந்து மற்றும் பொருட்களுக்கு அடிமையாதல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கிறது.

குழந்தைகளுக்கான பிரத்தியேக போதை தடுப்பு மையங்கள் செங்கல்பட்டு, மதுரை மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் அரசால் ஏற்படுத்தப்பட்டு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் ஆண்டில் 87 குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர். தற்போது சென்னை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் குழந்தைகளுக்கான பிரத்தியேக போதை தடுப்பு மையங்களை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் அமைக்க அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

**2022-2023 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.76.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

**5.7 நன்னடத்தை அமைப்பு**

நன்னடத்தை என்பது இளைஞர் நீதி அமைப்பின் கீழ் ஒவ்வொரு கட்டத்திலும் குழந்தைகளின் பங்கேற்புடன் கூடிய விரைவான



மறுவாழ்வு மற்றும் சமூக இணைப்புக்கு ஒரு பயனுள்ள கருவியாகும். சமூக விசாரணை அறிக்கைகளைத் தயாரித்து குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களுக்கு உதவுவதற்காக நன்னடத்தை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அறிக்கைகள் குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களில் முன்னிலைப்படுத்தப்படும் குழந்தைகளின் தனிப்பட்ட மற்றும் அவர்களின் குடும்ப பின்னணியினை விரிவாக எடுத்துரைத்து சரியான ஒரு முடிவை இவ்வமைப்புகள் மேற்கொள்ள உதவுகிறது. குறிப்பிட்ட வழக்குகளில் சட்டத்திற்கு முரணான குழந்தைகள் மற்றும் குழந்தைகள் இல்லங்களில் இருந்து வீடேகும் குழந்தைகள் குறித்து பிற்காப்பு தொடர்நடவடிக்கைகளை நன்னடத்தை அலுவலர்கள் மேற்கொள்கின்றனர். சமூக பாதுகாப்பு இயக்ககம் 32 மாவட்டங்களில் தலா ஒரு நன்னடத்தை அலுவலரைக் கொண்டுள்ளது. சென்னையில் வழக்குகள் அதிகமாக

உள்ளதால் கூடுதலாக 3 நன்னடத்தை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 5.8 சட்டத்திற்கு முரணான குழந்தைகளுக்காக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள்

**(அ) காணொலி வசதி**

குழந்தைகளை இளைஞர் நீதிக் குழுமத்தின் முன்பு நேரடியாக விசாரணைக்கு உட்படுத்தாமல் காணொலிக் காட்சி வசதி மூலம் விசாரணை மேற்கொள்ள வசதிகளை அரசு நிறுவியுள்ளது. இவ்வசதி "சட்டத்திற்கு முரணாக செயல்படும் குழந்தைகள்" தங்கியுள்ள பல்வேறு இல்லங்கள் மற்றும் சம்மந்தப்பட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுக்கு இடையேயான இணைப்பை வழங்குகிறது. இந்த வசதியானது, குழந்தைகளை சம்மந்தப்பட்ட இளைஞர் நீதிக் குழுமத்திற்கு கொண்டு செல்லும் போது தப்பித்தல் மற்றும் அவர்கள் மீதான அச்சுறுத்தலை முற்றிலுமாக நீக்கி விரைவான விசாரணையை உறுதி செய்கிறது. தற்போது, அனைத்து கூர்நோக்கு



இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களிலும் காணொலிக் காட்சி வசதி நிறுவப்பட்டுள்ளன.

**(ஆ) குழந்தைகளுக்கான உளவியல் ஆலோசனை**

குழந்தைகள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கான காரணிகள் சிக்கலானவை. குழந்தை பருவ உளவியல் தாக்கம், நண்பர்களின் உந்துதல், சமூகத்தின் மீதான வெறுப்பு ஆகியவை குறிப்பிடக்கூடிய சில காரணிகளாகும். மறுபுறம், குழந்தைகள் இல்லங்களில் அனுமதிக்கப்படும் குழந்தைகள் பெற்றோரின் கவனிப்பு இன்மை மற்றும் உதவியின்மையால் பாதிக்கப்படுகின்றனர். இக்காரணிகள் அவர்களை உணர்ச்சி மற்றும் உளவியல் சிக்கல்களுக்கு உட்படுத்துகின்றன. உளவியல் சிக்கல்களைச் சமாளிப்பதற்கும், நேர்மறையான அணுகுமுறையைப் பெறுவதற்கும், அரசு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள சட்டத்திற்கு முரணான குழந்தைகள் மற்றும் பராமரிப்பு

மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கு தொழில்முறை ஆலோசகர்கள் மூலம் ஆற்றுப்படுத்துதல் சேவைகளை அரசு வழங்குகிறது. 2021–2022 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின் கீழ் 1,822 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

**2022–2023 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 40.98 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

**5.9 பிற்காப்பு நிறுவனங்கள்**

குடும்பம் மற்றும் பிற ஆதரவு இல்லாத நிலையில் உள்ள எந்த குழந்தையும் 18 வயது நிறைவடைந்து நிறுவனங்களிலிருந்து வெளியேறும் போது அவர்கள் சமூகத்துடன் ஒன்றிணைக்கப்படும் காலம் வரை சுயமாக வாழும் நிலைக்கு தங்களை மாற்றிக் கொள்ள தேவையான இடைப்பட்ட காலத்தில் பிற்காப்பு சேவை வழங்க பிற்காப்பு நிறுவனங்கள் செயல்படுகின்றன. ஆண்களுக்காக செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள



ஆத்தூரில் 29 பயனாளிகளுடனும், மதுரையில் 15 பயனாளிகளுடனும் மற்றும் பெண்களுக்காக வேலூரில் 12 பயனாளிகளுடனும் அரசு பிற்காப்பு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் பிற்காப்பு நிறுவனங்களில் தங்கவைக்கப்படும் சிறார்களுக்கு மாதம் தலா ரூ.2,000/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் தற்போது பிற்காப்பு நிறுவனங்களில் 56 பயனாளிகள் உள்ளனர். மயிலாடுதுறையில் தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டத்தின் கீழ் வயது வந்த மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பிற்காப்பு நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் 36 குழந்தைகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**2022–2023–ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.2.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

**5.10 குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி**

அரசு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் முறையான கல்வி வழங்குவதற்காக நிறுவனங்களின் வளாகத்திலேயே பள்ளிக் கல்வித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் செயல்படுகின்றன. அவ்வாறு, வளாகத்திலேயே பள்ளிகளற்ற குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் வரவேற்பு பிரிவுகளில் தற்காலிகமாக தங்க வைக்கப்படும் குழந்தைகளுக்கு முறைசாராக்கல்வி மற்றும் தொழிற்கல்வி அளிக்கப்பட்டு வருகின்றன.

நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் திறன்களை மேம்படுத்த தையல், ஆடைகள் தயாரித்தல், குளிர்சாதனங்கள் பழுதுபார்த்தல், துரித உணவு தயாரித்தல், பிளம்பிங், குடிநீர் சுத்திகரிப்பான் பழுதுபார்த்தல் அடிப்படை கணினி



பயிற்சி, பேக்கரி பொருட்கள் தயாரித்தல் போன்ற குறுகியகால தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சியின் மூலம் 728 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். 25 குழந்தைகள் அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், அரசு குழந்தைகள் இல்லத்தின் 63 முன்னாள் மாணவர்கள் பொதுசுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவத் துறையால் நடத்தப்படும் துணை செவிலியர் (ANM) பயிற்சியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**2022–2023–ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.50.29 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

**5.11 குழந்தைகளுக்கான கட்டணமில்லா தொலைபேசி (1098)**

**"பத்து ஒன்பது எட்டு"** என்பது இடர்பாடான சூழலில் உள்ள குழந்தைகளுக்கான தேசிய அளவிலான 24 மணிநேர இலவச தொலைபேசி

சேவையாகும். நெருக்கடி நிலையில் உள்ள குழந்தைகள் அல்லது இக்குழந்தைகளை காணும் எந்தவொரு நபரும் இக்குழந்தைகளை நெருக்கடியிலிருந்து உடனடியாக மீட்டல் அல்லது வழிகாட்டுதலுக்காக 1098 ஐ அழைக்கலாம். இந்திய அரசின் நிதியுதவி மூலம் சைல்டுலைன் இந்தியா பவுண்டேசன் கட்டுப்பாட்டின்கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் இச்சேவைகள் செயல்படுத்தப்படுகின்றன. 2021-2022-ஆம் ஆண்டில் இச்சேவையின்கீழ் தமிழ்நாட்டில் 1,58,112 தொலைபேசி அழைப்புகள் பெறப்பட்டுள்ளன.

### 5.12 குழந்தை பாதுகாப்பு சேவைகள்

குழந்தைகளுக்கான பாதுகாப்பில் தமிழ்நாடு அரசின் உறுதிப்பாடு நன்கு அறியப்பட்டது. ஒன்றிய-மாநில அரசின் பங்களிப்புடனான குழந்தை பாதுகாப்பு சேவைகள் - "மிஷன் வாத்சல்யா" திட்டத்தின் கீழ் மாநில மற்றும் மாவட்ட அளவிலான கட்டமைப்புகளை போதுமான அளவில் அரசு நிறுவியுள்ளது.



இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு ஏற்றதான சூழ்நிலையில் சிறந்த வாய்ப்புகளை வழங்கி அவர்களின் பராமரிப்பு, பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் மறுவாழ்வினை வழங்கி வருகிறது. இத்திட்டத்தினை அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சமூகப் பங்களிப்புடன் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுத்துவதால் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த முடிகிறது. நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு தரமான சேவை வழங்குதல், இடர்பாடான சூழ்நிலையில் உள்ள குழந்தைகளுக்கான தலையீட்டு திட்டங்கள், குழந்தைகள் பாதுகாப்பை மேம்படுத்துதல், இல்லத்தில் நிறுத்தி வைத்தலுக்கு மாற்றாக குடும்பம் சார்ந்த பராமரிப்பு, குழந்தைகளுக்கு குடும்பங்களைக் கண்டறிதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாகும்.

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015ன் கீழ் வகுக்கப்பட்ட

செயல்பாடுகளை நிறைவேற்ற பரந்த கட்டமைப்பை இத்திட்டம் ஏற்படுத்தியுள்ளது. குழந்தைகளின் தனிநபர் திட்டத்தினை மனதில் கொண்டு ஒவ்வொரு குழந்தையின் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தகுந்த இடைவெளியில் கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வு மேற்கொள்ளப்படுவது உறுதிசெய்யப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் குழந்தைகள் பாதுகாப்பு சேவைகளை செயல்படுத்துவதை கண்காணிக்க செயல்திறன் மற்றும் மேலாண்மை குறியீடுகளை சமூகப் பாதுகாப்பு இயக்ககம் உருவாக்கியுள்ளது.

**5.12.1 குழந்தை பாதுகாப்புச் சேவைகளின் கீழ் செயல்படும் கட்டமைப்புகள்**

குழந்தை பாதுகாப்புச் சேவைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்த, கீழ்க்காணும் சேவை அளிக்கக் கூடிய கட்டமைப்புகளை அரசு உருவாக்கியுள்ளது:–

1. மாநில குழந்தை பாதுகாப்புச் சங்கம்.
2. மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள்.
3. மாநில தத்தெடுப்பு வள முகமை.



குழந்தைகளின் பல்வேறு தேவைகளை நிறைவேற்ற சுகாதாரம், கல்வி, நீதித்துறை, காவல்துறை, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் இணைந்து செயல்பாட்டாளர்களுக்கு பல்வேறு நிலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**2022–2023–ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.31.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.13 இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–ன் கீழ் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை பதிவு செய்தல்**

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–ன் கீழ் அனைத்து குழந்தை பராமரிப்பு நிறுவனங்களும் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படாத குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் மீது சட்ட ரீதியான தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. குழந்தை பராமரிப்பு

நிறுவனங்கள் பதிவு செய்யப்படுவதன் மூலம் அந்நிறுவனம் செயல்படுவதை முறைப்படுத்தவும் அவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்து கண்காணிக்க உதவுவதோடு குறைந்தபட்ச வசதிகள் கொண்டதாக இருப்பதையும் உறுதி செய்கிறது.

1,029 நிறுவனங்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன மற்றும் வரையறுக்கப்பட்ட குறைந்தபட்ச தரம் / வசதிகள் இல்லாததால் 82 நிறுவனங்கள் 2021-2022-ஆம் ஆண்டில் மூடப்பட்டுள்ளன. 2017-ஆம் ஆண்டின் தமிழ்நாடு இளைஞர் நீதி விதிகளின் கீழ் குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச தரம்/வசதிகளுக்கான வரையறையின்படி, தங்குமிடம், கட்டடத்தின் உறுதித்தன்மை, கட்டட உரிமம், தீயணைப்பு வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் போன்ற வசதிகளை பூர்த்தி செய்யும் நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன. சுமார் 36,133 குழந்தைகள் பதிவு செய்யப்பட்ட இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.



### 5.14 குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் ஆய்வு மற்றும் கண்காணிப்பு

#### 5.14.1 ஆய்வு

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன், கீழ் மாநிலத்தில் செயல்படும் அனைத்து குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை திறன்பட ஆய்வு செய்யவும் நிர்ணயிக்கப்பட்ட தரத்தினை உறுதி செய்யவும் மாநில அளவிலான ஆய்வுக்குழு மற்றும் மாவட்ட அளவிலான ஆய்வுக் குழுக்களை அரசு அமைத்துள்ளது. மேற்கண்ட ஆய்வு அமைப்புகளுடன், இளைஞர் நீதிக் குழுமங்கள் மற்றும் குழந்தை நலக் குழுக்கள் ஆகியவை தங்களது வரம்பிற்குள் வரும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை ஆய்வு செய்து வருகின்றன. மாநில அளவிலான ஆய்வுக் குழு, சமூகப் பாதுகாப்பு இயக்குநர்/செயலர், மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம் அவர்களை தலைவராக கொண்டு

அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான ஆய்வுக் குழுக்கள் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் அமைக்கப்பட்டுள்ளன.

### 5.14.2 குழந்தை பின்தொடர் முறைமை

ஒன்றிய அரசு தேசிய தகவல் மையத்தின் மூலம் காணாமல் போன குழந்தைகள் மற்றும் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளையும் கண்காணிக்கக்கூடிய (www.trackthemissingchild.gov.in) இணைய முகப்பினை உருவாக்கியுள்ளது. குழந்தை பின்தொடர் முறைமை, காணாமல் போன குழந்தையையும், கண்டெடுக்கப்பட்ட குழந்தையையும் ஒப்பிட்டு பார்க்க வசதி செய்து தருகிறது. மேலும், இம்முறையின் மூலம் இக்குழந்தைகளின் தேடல் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிக்க உதவுகிறது. இவ்வாறு இத்திட்டத்தின் மூலம் சரியான மேற்பார்வையும் குழந்தை நலனும் இணைய முகப்பு மூலம் உறுதிப்படுத்த முடிகிறது. இத்தேசிய இணைய முகப்பு



மூலம் அனைத்து காவல் நிலையங்கள், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள், குழந்தை நலக் குழுக்கள், இளைஞர் நீதிக் குழுமங்கள் மற்றும் மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் இயங்கி வரும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

காணாமல் போன குழந்தைகளின் விசாரணை விவரங்களை பதிவேற்ற ஒவ்வொரு பங்குதாரருக்கும் தனித்தனி பயனாளர் மற்றும் கடவுச்சொல் வழங்கப்பட்டுள்ளது.

### 5.14.3 தனிநபர் பராமரிப்பு திட்டம்

குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் தங்கியிருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் தனிநபர் பராமரிப்புத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. இவை குழந்தைகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும், நிறுவனங்களில் தலையீட்டு உத்திகளை வடிவமைப்பதற்கும், மறுவாழ்வு, மறுசீரமைப்பு மற்றும் குழந்தைகளை சமூகத்தில் மீண்டும்

ஒருங்கிணைப்பதற்கும் திறம்பட திட்டமிடுவதற்கும் பயன்படுகிறது. மாநிலத்தில் செயல்பட்டு வரும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு தரமான தனிநபர் பராமரிப்புத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான காலமுறை பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன. தனி நபர் பராமரிப்பு திட்ட படிவத்தை நிபுணத்துவத்துடன் தயாரிப்பதற்கு பயிற்சி வழங்க இத்துறை யுனிசெஃப் உடன் இணைந்து ஒரு அனிமேஷன் வீடியோ மற்றும் ஒரு கையேட்டை தயாரித்துள்ளது.

### 5.14.4 குழந்தைகள் பாதுகாப்பு சேவைகளை கண்காணித்தல்

குழந்தை உரிமை மீறல் சம்பவங்களைத் தடுக்கவும், குழந்தை பாதுகாப்பை உறுதி செய்யவும் தமிழ்நாடு அரசு கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் புதிய குழந்தை பாதுகாப்புக் குழுக்களை அமைத்துள்ளது.



#### 5.14.4.1 கிராமப்புறங்களில் உள்ள குழந்தை பாதுகாப்புக் குழுக்கள்:

1. கிராம அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.
2. வட்டார அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.
3. மாவட்ட அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.

#### 5.14.4.2 நகர்ப்புறங்களில் உள்ள குழந்தை பாதுகாப்புக் குழுக்கள்:

1. நகர பஞ்சாயத்து அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.
2. நகராட்சி அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.
3. மாநகராட்சி மண்டல அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.

இக்குழுக்களானது, குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர், குழந்தை தொழிலுக்காக இடம் பெயர்தல், சுரண்டப்படுதல், சட்டத்திற்கு புறம்பாக குழந்தைகளை தத்து வழங்குதல், குழந்தை பாதுகாப்பு ஆகியவற்றைப் பற்றி கலந்தாலோசித்து அதுதொடர்பாக

விழிப்புணர்வு ஏற்படுத்துதல், குழந்தைகளுக்கெதிரான பாலியல் குற்றங்களைத் தடுத்தல், பெண் கருக்கொலை/ சிசுக் கொலையைக் குறைத்து பெண் குழந்தை பாலின விகிதத்தை உயர்த்துதல் போன்ற குழந்தை பாதுகாப்பு சேவை பணிகளை மேற்கொள்கின்றன.

மாநில குழந்தை பாதுகாப்புச் சங்கம் யுனிசெஃப் உடன் இணைந்து குழந்தை உரிமை மீறல் சம்பவங்களைக் குறைப்பதற்கும், எதிர்த்துப் போராடுவதற்கும், கிராம அளவில் கூட்டங்களை சிறப்பாக நடத்துவதற்கும், கையேடு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் கூட்டத்தில் கடைபிடிக்கப்பட வேண்டிய வழிமுறைகள் மற்றும் கூட்ட செயல்பாடுகள்/ விவாதங்கள் ஆகியவற்றை ஆவணப்படுத்துவதற்கான படிவமும் இடம் பெற்றுள்ளன.

2014–ஆம் ஆண்டு முதல் கிராம அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழுக்களின் 72,611



உறுப்பினர்களுக்கு திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் 2021–2022 ஆம் ஆண்டு வட்டார அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழுக்களின் 4,556 உறுப்பினர்களுக்கும் 912 திறன் வளர்ப்பு பயிற்சியும் மாவட்ட குழந்தை பாதுகாப்புக் குழுக்களின் 1,241 உறுப்பினர்களுக்கு 34 நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

### 5.15 குழந்தைகளுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை

தமிழ்நாடு அரசு குழந்தைகளின் நலன்களைப் பாதுகாக்கவும், நிலையான வளர்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்கவும் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குழந்தைகளின் பாதுகாப்பு, வாழ்வு, சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி, பாதுகாப்பு மற்றும் குழந்தைகளின் பங்கேற்பு ஆகியவற்றிற்கு சிறப்பான உத்தியுடன் கூடிய அணுகுமுறையை மேற்கொள்ள 'குழந்தைகளுக்கான பிரத்தியேகக் கொள்கையை' அரசு கொண்டுவந்துள்ளது. 20.11.2021 அன்று

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் குழந்தைகளுக்கான மாநிலக் கொள்கை வெளியிடப்பட்டது.

மாநிலக் கொள்கையின் நோக்கங்களைச் செயல்படுத்துவதற்கும், தொடர்புடைய துறைகளில் இருக்கும் பல்வேறு சேவைகளை ஒருங்கிணைப்பதற்குமான ஒரு செயல் திட்டத்தைத் தயாரிப்பதற்கான பணி சமூகப் பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சமூகப் பாதுகாப்பு இயக்ககம் யுனிசெஃப் நிறுவனத்தின் ஆதரவுடன், மாநிலக் கொள்கையில் உறுதிசெய்யப்பட்டுள்ள சேவையினை திறம்பட நிறைவேற்றுவதற்கு வரைவு செயல் திட்டத்தை உருவாக்க பல மண்டல அளவிலான கலந்தாய்வு ஆலோசனை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது.



### 5.16 சமூக மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம்

அரசு, யுனிசெஃப் உடன் இணைந்து நாட்டிலேயே முதலாவதாக **"சமூக மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையத்தை"** நிறுவியுள்ளது. இம்மையம் குழந்தை பாதுகாப்பு தொடர்பான சிறப்பு மையமாக (Centre of Excellence), இளைஞர் நீதி சட்ட செயல்பாட்டாளர்கள், மகளிர் நலன் / மகளிர் உரிமை செயல்பாட்டாளர்களுக்கு குறிப்பாக திறன் மேம்பாட்டு பயிற்சி உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் வழங்கி வருகிறது. இதுவரை, குழந்தை பாதுகாப்பு தொடர்புடைய துறைகளில் உள்ள 640 பணியாளர்களுக்கு 16 பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

### 5.17 சாலையோரங்களில் உள்ள குழந்தைகளுக்கான மறுவாழ்வுக் கொள்கை

அரசு சாலையோரங்களில் உள்ள குழந்தைகளுக்கான 'மறுவாழ்வுக் கொள்கை 2022' ஐ உருவாக்கி உள்ளது. சாலையோரங்களில் உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து மீட்பதற்கான

நடவடிக்கைகளை எடுப்பது மற்றும் அவர்களின் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப அவர்களுக்கு பயனுள்ள மறுவாழ்வுக்கான தகுந்த செயல்திட்டத்தினை பரிந்துரைப்பது இக்கொள்கையின் முக்கிய நோக்கமாகும். இக்கொள்கை சாலையோரங்களில் உள்ள குழந்தைகளைப் பற்றிய தகவல்களை வழங்கவும் அவர்களை கண்காணிக்கவும், பின்தொடர்வதற்கும் பிற மாநிலங்களில் உள்ள செயல்பாட்டாளர்களிடையே பயனுள்ள ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கும் ஒரு திட்டத்தை வழங்குகிறது.

### 5.18 ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956

ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956, பெண்களை வணிக நோக்கிலான பாலியல் சுரண்டலுக்கும், கடத்தலுக்கும் உள்ளாக்குவதை தடுப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. இச்சட்டம் பாதிக்கப்பட்டவர்களை நிறுவனத்தில் தங்க வைத்து



கல்வி, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை வழங்குதல் மூலம் குறுகிய மற்றும் நீண்ட கால மறுவாழ்வு அளிக்க வழிவகை செய்கிறது.

### 5.18.1 மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்கள்

ஒழுக்கநெறி அச்சுறுத்தலுக்குள்ளான/ பாதிக்கப்பட்ட பெண்கள் மகளிர் காப்பகங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்கள் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956–ன் கீழ் நீதிமன்ற ஆணையின்படி இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வில்லங்களில் தங்கியுள்ள மகளிரின் மறுவாழ்விற்கென பராமரிப்பு, மருத்துவ சிகிச்சை, உளவியல் ஆலோசனை மற்றும் தொழிற்பயிற்சிகள் ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன. "பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிவாரண நிதியிலிருந்து" ரூ.10,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது.

ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956–ன் கீழ் மாநில அரசால் சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்ட பெண்களின் மறுவாழ்விற்காக மகளிர் காப்பகங்கள்/ பாதுகாப்பு இல்லங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட பெண்களின் வழக்குகளை விரைந்து தீர்வு செய்யவும் அவர்களின் கண்ணியத்தை காத்திடவும், நீதிமன்றத்தின் நேரடி விசாரணைக்கு உட்படுத்தப்படுவதற்கு பதிலாக, காணொலிக் காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ள மயிலாப்பூர், அரசினர் மகளிர் காப்பகத்திற்கும் சைதாப்பேட்டை பெருநகர நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் இடையே ரூ.20.00 இலட்சம் செலவில் காணொலிக் காட்சி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் அனுமதிக்கப்படும் பாதிக்கப்பட்ட மகளிருக்கு இலவச சட்ட உதவி வழங்கப்படுகிறது.



**2022–2023–ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.5.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**.

### 5.18.2 வாழ்வொளித் திட்டம்

பெண்கள் மற்றும் குழந்தைகள் வணிகரீதியான பாலியல் தொழிலுக்காக கடத்தப்படுவது, மனித உரிமைகளுக்கு எதிரான குற்றமாகும். பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் முறையான மறுவாழ்வை உறுதி செய்வதற்காக ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் 'வாழ்வொளித்' (Ujjawala) திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வணிக ரீதியான பாலியல் சுரண்டலை தடுக்கவும், கடத்தப்பட்டவர்களை மீட்டு, மறுவாழ்வு அளித்து சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் வழிவகை செய்வதற்குமான ஒரு விரிவான திட்டமாகும்.

தமிழ்நாட்டில் 4 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2021–2022–ஆம் ஆண்டில் 166 பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

**5.19 போதை தடுப்பு திட்டம்**

ஒன்றிய அரசின் திட்டத்தின் கீழ் குடி மற்றும் போதைப் பழக்கத்திற்கு ஆளானவர்களை புற மற்றும் உள் நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்க தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் போதை தடுப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இம்மையங்களில் சிகிச்சை இலவசமாக வழங்கப்படுகிறது. 2021–2022ம் ஆண்டில் 4 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நிதி உதவி பெற பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**5.20 தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்**

குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள்



சட்டம், 2005, பிரிவு 17(1)–ன் கீழ் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. ஆணையத்தின் முக்கிய நோக்கமே தற்சமயம் அமலில் இருக்கும் குழந்தைகள் சார்ந்த பல்வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்தலாகும். இந்த ஆணையம் ஒரு தலைவர் மற்றும் 6 உறுப்பினர்களைக் கொண்டு 18.01.2013 முதல் செயல்பட்டு வருகிறது.

**2022–2023 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.1.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.21 குழந்தை பாதுகாப்பிற்காக பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு**

சமூகப் பாதுகாப்புத் துறை, இதர அரசு துறைகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, இடர்பாடான சூழ்நிலையால் துன்பப்படும் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் குழந்தைகளை சமூகத்துடன் ஒருங்கிணைக்கின்றது.

சமூக நலன், கல்வித் துறை, தொழிலாளர் நலன், சமக்ரா சிக்க்ஷா அபியான், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம், ரயில்வே காவல்துறை, வருவாய் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், ஊரக வளர்ச்சி துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மருத்துவம் மற்றும் சுகாதாரம், சைல்டு லைன், காவல்துறை, நீதித்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகியவற்றுடன் சமூகப் பாதுகாப்புத் துறை திறம்பட ஒருங்கிணைந்து அனைத்து குழந்தைகளின் பாதுகாப்பையும், பராமரிப்பையும் உறுதி செய்கிறது.

மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு, மாவட்ட அளவிலான, காலமுறை கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதில் நீதித்துறை உட்பட அனைத்து பங்களிப்பாளர்களும் கலந்து கொள்கின்றனர்.

குழந்தைத் திருமணம், குழந்தை கடத்தல், குழந்தைகளை பிச்சையெடுக்க பயன்படுத்துதல்,



உடல் மற்றும் மனரீதியாக தீங்கிழைத்தல் மற்றும் குழந்தை தொழிலாளர் ஆகியோரை கண்டறிந்து பொருத்தமான மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில், அரசுத் துறை மற்றும் அரசு நிறுவனங்களின் உதவியுடன் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் தொடந்து நடத்தப்படுகின்றன.

**அத்தியாயம்–6**

## நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள்

நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகள் அனைவருக்கும் சிறந்த மற்றும் நிலையான எதிர்காலத்தை அடைவதற்கான செயல்பாடுகளை மேற்கொள்ள, உலக நாடுகளுக்கிடையே தோற்றுவிக்கப்பட்ட ஒரு ஒப்பந்தமாகும். அது உலக நாடுகள் சந்திக்கும் பிரச்சனைகளான வறுமை, சமத்துவமின்மை, சூழ்நிலை மாற்றம், சுற்றுச்சூழல் சீரழிவுகள், அமைதி மற்றும் நீதி ஆகியவற்றை எதிர்கொள்கிறது, உலக நாடுகளுக்கிடையே மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தையும் மாற்றுவதையே நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகள் நோக்கமாக கொண்டு உள்ளது.

நீடித்த நிலைத்த வளர்ச்சியானது 17 வகையான இலக்குகளை கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகள் அனைத்தும், ஒப்புக்கொண்ட 169



குறிக்கோள்கள் மற்றும் 304 குறியீடுகளை 2030 ஆண்டுக்குள் எட்டுவதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

மாநிலங்களுடன் இணைந்து, நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை கண்காணிப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்கும், நிதி ஆயோக் கண்காணிப்பு அமைப்பாக உள்ளது. நிதி ஆயோக் மாநிலத்துடன் இணைந்து பணி செய்து, நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் தேவைகளுக்கேற்ப மாற்றியமைத்தல், மாநில மற்றும் மாவட்ட குறியீடுகளுக்கான கட்டமைப்புகளை உருவாக்குதல், ஆய்வு முறைகள், திறன் வளர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறது.

நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகள் மீதான முன்னேற்றம் மற்றும் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை கண்காணித்திட எட்டு பணிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இலக்கு 5 – பாலின சமத்துவம் மற்றும் மகளிர் உரிமைக்கான கண்காணிப்பு அலுவலராக சமுக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகள் சார்ந்த செயல்பாடுகளை தொடர்ந்து ஆய்விட, நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் இணைய முகப்பு உருவாக்கப்பட்டு, அதன் வழியாக தகவல்கள் சம்மந்தப்பட்ட துறைகளிடமிருந்து உரிய கால இடைவெளிகளில் பெறப்படுகின்றது. கண்காணிப்பு படிவங்கள், வெளியீடுகள் மற்றும் விளைவுகள் தொடர்பான குறியீடுகள் கட்டமைப்பு அனைத்து திட்டங்களுக்கும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் திட்டங்கள் எவ்வாறு சிறப்பாக செயல்படுகின்றன என்பது அறிந்து, அவற்றில் திருத்தங்களை பரிந்துரைக்க முடிகிறது.

இதன்படி துறையானது, சில திட்டங்களை மாற்றியமைத்தும் சம்மந்தப்பட்ட துறைகளின்



உதவியோடு சில திட்டங்களை மறுவடிவமைத்து செயல்படுத்தவும், உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் திட்டங்களின் சாதனைகள் பெரிய அளவிலான விளைவுகளை ஏற்படுத்த முடியும் என்பதுடன், துறையின் வளங்களை சிறப்பாக கையாளவும் முடியும்.

**இலக்கு 5:– பாலின சமத்துவம்**

"பாலின சமத்துவம் என்பது ஒரு அடிப்படை மனித உரிமை மட்டுமல்ல, அமைதியான, வளமான மற்றும் நிலையான உலகிற்கு அவசியமான அடித்தளமாகும்.

- ஐ.நா. அமைப்பு

பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்து பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் அதிகாரமளித்தல் எனும் இலக்கு 5–க்கான ஒருங்கிணைப்பு துறையாக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயல்படுகிறது. இந்த இலக்கு 9 குறிக்கோள்களையும் 14 குறியீடுகளையும் கொண்டுள்ளது.

பெண்கள் மற்றும் சிறுமிகள் தங்கள் உடலையும் வாழ்க்கையையும் பாதுகாப்புடன் வைத்துக்கொள்ள அவர்களுக்கு அதிகாரம் அளிப்பது, சமூக மற்றும் சுற்றுசூழல் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு அவசியமானதாகும். ஐ.நா–வின் கூற்றுப்படி, பாலின அடிப்படையிலான வன்முறைகள், தீங்கு தரும் நடைமுறைகளை முடிவுக்கு கொண்டுவருதல், தவிர்க்கப் படக் கூடிய பிரசவக்கால இறப்புகள், பயன்பாட்டுக்கு கொண்டுவராத குடும்பக்கட்டுபாடு முறைகள் ஆகியவை எளிதில் அடையக் கூடிய இலக்குகள் ஆகும்.

பாலின சமத்துவம் சார்ந்த மாநிலங்களின் செயல்திறனை அளவிட, ஆறு தேசிய குறியீடுகள் (i) பிறப்புபாலினவிகிதம்; (ii) ஊதியஇடைவெளி (ஆண்/பெண்); (iii) குடும்பவன்முறை; (iv)தலைமைத்துவத்தில் பெண்கள்; (v) பெண் தொழிலாளர் பங்கேற்பு விகிதம்; மற்றும் (vi) குடும்பக் கட்டுப்பாடு ஆகியவை அடையாளம்



காணப்பட்டுள்ளன. இவை இலக்கு 5–ன் 9 குறிக்கோள்களில் நான்கிற்கு பொருந்தும்.

**குறிக்கோள் 5.1:**

**மகளிர் மற்றும் பெண் குழந்தைகளுக்கு எதிரான பலவகையான பாகுபாடுகளையும் அனைத்து இடங்களிலும் முடிவுக்கு கொண்டு வருதல்**

பெண் கருக்கொலை, பெண் சிசுக்கொலை, பெண் குழந்தை பாகுபாடு மற்றும் பாலினம் சார்ந்த சமூக மனப்பான்மை போன்ற சமூகப் பிரச்சினைகளைத் களைந்திட தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் மற்றும் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது. பெண் குழந்தைகளைப் பாதுகாத்து அவர்களின் பிறப்பு மற்றும் உயிர் வாழ்வதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டங்கள் செயல்படுவதன், வாயிலாக,

குழந்தை பாலின விகிதம் நாட்டில் உயர்வதற்கு மறைமுகமாக உதவி புரிகின்றன. மேலும், பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வியைத் தொடர நிதியுதவி வழங்கி, பெண் குழந்தைகளின் கல்வி கற்பதற்கான உரிமைகளை உறுதி செய்கின்றது.

**குறிக்கோள் 5.2:**

**பொது மற்றும் தனியார் இடங்களில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் மற்றும் கடத்தப்படுதல் போன்ற பிறவகையான சுரண்டல்கள் உள்ளிட்ட அனைத்து விதமான வன்முறைகளை களைதல்**

வன்முறை மற்றும் முறைகேடுகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு 24 மணிநேரமும் உடனடி மற்றும் அவசரகால உதவி அளிப்பதை நோக்கமாகக் கொண்டு மகளிர் உதவி எண் (181) , மூத்தகுடிமக்கள் உதவி எண் (14567) மற்றும் குழந்தை உதவி எண் (1098), காவல் துறை உதவி



எண் (1091) ஆகியவற்றை அரசு செயல்படுத்தி வருகிறது.

பாலின அடிப்படையிலான துன்புறுத்தல் மற்றும் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தற்காலிக தங்குமிடம், மருத்துவ உதவி, உளவியல் ஆலோசனை, இலவச சட்ட உதவி, காவல்துறை உதவி மற்றும் ஆலோசனை போன்ற ஒருங்கிணைந்த சேவைகளை வழங்க 34 மாவட்ட தலைமையக மருத்துவமனைகளிலும் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. கடினமான சூழ்நிலையில் உள்ள பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்க தங்குமிடம், உணவு, உடை, ஆலோசனை, பயிற்சி, மருத்துவம் மற்றும் சட்ட உதவிகளை வழங்குவதற்காக 36 குறுகிய கால தங்கும் இல்லங்கள் ஒன்றிய மற்றும் மாநில அரசு மானியத்துடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆதரவற்ற பெண்களுக்கு தங்குமிடம், உணவு, சுகாதாரம், மருத்துவ வசதிகள் மற்றும் தொழில் பயிற்சிகளை வழங்குவதற்காக அரசு சேவை இல்லங்கள் நடத்தபடுகின்றன. கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் இவ்வில்லங்களில் தங்கி தங்கள் பள்ளிப்படிப்பைத் தொடர ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**குறிக்கோள் 5.3:**

**குழந்தை திருமணம், இளம் வயது திருமணம், கட்டாய திருமணம், பெண் உறுப்பு சிதைத்தல் உள்ளிட்ட கொடிய பழக்கங்களை ஒழித்தல்**

மாநிலம் முழுவதும் குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006 இத்துறையால் செயல்படுத்தப்பட்டு, குழந்தைத் திருமணங்களுக்கு எதிராக காவல்துறை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவும், குழந்தைத் திருமணங்களுக்கு எதிராக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும்



தொடர் முயற்சி மேற்கொண்டு வருகிறது. UNICEF உடன் இணைந்து குழந்தை திருமணம் அதிகம் நடைபெறும் 15 மாவட்டங்களில் குழந்தை திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வருதல் மற்றும் இளம் பருவத்தினருக்கு அதிகாரமளித்தல் ஆகியவை குறித்து சம்பந்தப்பட்ட துறையினரிடையே விழிப்புணர்வு நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன. மாநில திட்டக்குழுவுடன் இணைந்து, மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் முன்னேற விழையும் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில், 10 பின் தங்கிய வட்டாரங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**குறிக்கோள்5.4:**

**சமூகப் பாதுகாப்பு, பொது சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வழிவகைகள் மூலம் ஊதியமற்ற பராமரிப்பு மற்றும் குடும்ப பணிகளுக்கு மதிப்பு மற்றும் அங்கீகாரம் அளித்தல் மற்றும் நாட்டிற்கு**

**ஏற்றவகையில் வீட்டிலும், குடும்பத்திலும் பொறுப்புகளை பகிர்ந்து கொள்வதை ஊக்குவித்தல்**

வரதட்சணைத் தடைச் சட்டம், 1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாத்தல், சட்டம்–2005, குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களைப் பராமரித்தல் சட்டம்– 2007, பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் தடைச் சட்டம், 2013 மற்றும் தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கும் விடுதிகள் ஒழுங்கு முறைச் சட்டம், 2015 போன்ற சமூகப் பாதுகாப்பு கொள்கை சார்ந்த பல்வேறு சட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது. பெண்கள், குழந்தைகள் மற்றும் மூத்த குடிமக்கள் அவர்தம் வீடு மற்றும் குடும்பத்திற்குள் மதிப்புடனும் மேன்மையுடனும் வாழ உறுதி செய்யப்படுகிறது.



**குறிக்கோள்5.5:**

**அரசியல், பொருளாதாரம் மற்றும் பொது வாழ்வில் பெண்களின் முழுமையான, பயனுள்ள பங்கேற்பு மற்றும் அனைத்து நிலைகளிலும் முடிவெடுக்கும் தலைமைக்கும் சமவாய்ப்புகள் அளித்தல்**

பெண்கள் மற்றும் மூத்த குடிமக்களின் உரிமைகளை வலியுறுத்திடவும், பொது வாழ்வில் திறமையான பங்கேற்பு மற்றும் தலைமைப் பண்புகளை உறுதி செய்திடும் விதமாக பெண்களுக்கான மாநில கொள்கை மற்றும் முதியோர்களுக்கான மாநில கொள்கை ஆகியவற்றை இத்துறை வடிவமைத்துள்ளது. பெண்களின் பொருளாதார அதிகாரமளிப்பிற்கு வழி வகுத்திட, பெண்களுக்கு பாதுகாப்பான மற்றும் கண்ணியமான தங்குமிடம் உறுதி செய்திட பணிபுரியும் மகளிர் விடுதிகள் இத்துறையால் முறைப்படுத்தப்படுகின்றன. அரசு, பெண்களுக்கு

உள்ளாட்சி அமைப்புகளில் 50% இடஒதுக்கீடும், வேலைவாய்ப்பில் 30% இடஒதுக்கீடும் செய்துள்ளது.

**குறிக்கோள் 5.6:**

**மக்கள்தொகை மற்றும் வளர்ச்சி குறித்த பன்னாட்டு மாநாட்டிலும், செயல்பாட்டிற்கான பீஜிங் மாநாட்டிலும் ஒப்புக் கொண்ட நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு, பாலியல் இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் உரிமைகளை அனைவருக்கும் உறுதிப்படுத்துதல் மற்றும் மறுசீராய்வு மாநாடுகள் மூலம் நடவடிக்கைகளை கண்காணித்தல்.**

மருத்துவத்துறையின் மூலம், கர்ப்பகாலத்தில் உடற் பரிசோதனை, ஊட்டச்சத்து சுகாதார பெட்டகம் வழங்குதல், மகப்பேறு கால நலத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, பாலியல் மற்றும் இனப்பெருக்க மருத்துவ வசதி பெற எல்லோருக்குமான உரிமை உறுதி செய்யப்படுகிறது.



**குறிக்கோள் 5.7:**

**பொருளாதார வளங்களில் பெண்களுக்கு சம உரிமைகளை வழங்குவதற்கான சீர்திருத்தங்களை மேற்கொள்வதுடன், தேசிய சட்டங்களுக்கு இணங்க, நிலம் மற்றும் பிற சொத்துக்கள், நிதி சேவைகள், மரபு வழி மற்றும் இயற்கை வளங்களின் மீதான உரிமை மற்றும் கட்டுப்பாட்டினை பெற செய்தல்**

பெற்றோர் சொத்துக்களில் மகள்களுக்கு சம உரிமை வழங்கும் சட்டத்தை 1989 ஆம் ஆண்டிலேயே இயற்றி தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. இதனையே 2020 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. வேளாண்மை, ஊரக வளர்ச்சி, பழங்குடியினர் நலம் போன்ற பல்வேறு துறைகள் மூலம் குடும்பங்களில் பெண்களுக்கு தேவையான அங்கீகாரம் வழங்குவதற்கு, அரசு பல திட்டங்களை செயல்படுத்திவருகிறது.

**குறிக்கோள் 5.8:**

**தொழில் நுட்பம், குறிப்பாக செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகரித்து பெண்களின்அதிகாரமளிப்பை மேம்படுத்துதல்**

பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், கல்வி, வேலை வாய்ப்பு போன்ற துறைகளில் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கும் தொழில்நுட்ப பயன்பாட்டினை அதிகரிக்க குழந்தைகள் உதவி எண் 1098, மகளிர் உதவிஎண் 181, முதியோர் உதவி எண் 14567, இணையதள குற்றம் தடுப்பு உதவி எண் 1930 போன்ற இலவச உதவி எண்களையும், காவலன், காவல் உதவி போன்ற கைப்பேசி செயலிகளையும் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

**குறிக்கோள் 5.9:**

**பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கும், அனைத்து நிலைகளிலும் உள்ள அனைத்து பெண்கள்**



**மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரமளிப்பதற்கான வலுவான கொள்கைகள் மற்றும் செயல்பாடுகள் அடங்கிய சட்டங்களை இயற்றி வலுப்படுத்துதல்**

பெண்கள் மற்றும் பெண்குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் ஆதரவு உறுதி செய்வதற்கும், அதன் மூலம் அவர்களுக்கு அதிகாரமளிப்பதற்கும், இத்துறை பல்வேறு சட்டங்களை செயல்படுத்தி வருகிறது. விவசாயம் மற்றும் அதனை சார்ந்த துறைகளில் பெண்களின் பங்கினை அங்கீகரிக்கும் விதமாக பெண்களுக்கான மாநில கொள்கை வடிவமைக்கப்பட்டு உள்ளது. அது மட்டுமல்லாமல், நீர் வளங்கள், வன உரிமைகள் மற்றும் விவசாய கூட்டுறவு நிறுவனங்களில் பெண்களுக்கு சமமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்கிறது.

நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகளின் கொள்கையான“நிலையான வளர்ச்சிக்காக ஒன்றுபடுவோம்”என்ற குறிக்கோளுடன்

சமூகத்தில் பாலின சமத்துவத்தை அடைய இதர துறைகளுடன் ஒருங்கிணைந்து இலக்கு 5 மற்றும் பிற தொடர்புடைய இலக்குகளின் நோக்கங்களை எய்திட இத்துறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

**வறுமையின்மை மற்றும் பசியின்மை ஆகிய இலக்கு 1 மற்றும் 2 –ன்** மாநில குறிக்கோள்களை நோக்கி, 43,190 பள்ளிகளில் 5–15 வயதுக்குட்பட்ட பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டபணிகள் (ICDS) 6 மாதம் முதல் 6 வயது வரையிலான 26,99,542 குழந்தைகள், 242 பள்ளி செல்லா 11–14 வயது வளரிளம் பெண்கள், 7,51,580 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து தேவைகளையும் மற்றும் குழந்தைகளின் சுகாதார மற்றும் முன் பருவ கல்வித் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக 54,439 குழந்தைகள் மையங்களை செயல்படுத்தி வருகிறது.



நிலையான வளர்ச்சிக் இலக்கு 4 குறியீடு எண்.4.2–அனைத்து ஆண், பெண் குழந்தைகளுக்கும் தரமான ஆரம்பகால பராமரிப்பு மற்றும் முன்பருவக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதன்படி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட குழந்தைகள் மையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள 2 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் முன்பருவக் கல்வி வழங்கப்படுகிறது. மாநிலத்திற்கு உகந்த 11– தலைப்புகளில் ஆரம்ப கால கல்வித் தொடர்பான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு, அங்கன்வாடி பணியாளர் அனைவருக்கும் பயிற்சி வழங்கப்பட்டு, குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த கவனம் மற்றும் கல்வி வழங்கப்படுகிறது.

நிலையான வளர்ச்சிக் இலக்கு 2 மற்றும் 4ன் குறியீடுகளை எய்துவதில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் முக்கிய பங்கு வகுக்கிறது. இவ்விலக்குகளுக்கான குறியீடுகளை நிகழ் நேர

ஊட்டச்சத்து கண்காணிப்பு செயலி (POSHAN Tracker) மூலம் கண்காணிக்கப்படுகிறது.

நிதிஆயோக் (NITI Aayog) வெளியிட்டுள்ள SDG 3.0 அறிக்கையின்படி தமிழ்நாட்டில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் எடைகுறைவான குழந்தைகள் 23.5%ம், குள்ளத்தன்மை உள்ள குழந்தைகள் 19.7%ம் உள்ளனர். மேலும் 15–49 வயதுடைய கர்ப்பிணிப் பெண்களில் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டவர்கள் 44.3% ஆக உள்ளனர்.

நிதி ஆயோக், நீடித்த வளர்ச்சி இலக்குகள் 3.0' என்ற மாநிலங்களின் வருடாந்திர சாதனைகள் அடங்கிய அறிக்கையை 03.06.2021 அன்று வெளியிட்டது. இந்த SDG 3.0 அறிக்கையின்படி, தமிழ்நாடு,

இலக்கு–1க்கு 86– புள்ளிகளுடன் முதலிடத்திலும்



இலக்கு–2க்கு 66– புள்ளிகளுடன் ஏழாம் இடத்திலும்,

இலக்கு–4க்கு 69– புள்ளிகளுடன் ஐந்தாம் இடத்திலும்

இலக்கு–5க்கு 59– புள்ளிகளுடன் நான்காம் இடத்திலும் உள்ளது.

மேலும், 17 இலக்குகளுக்கான ஒட்டு மொத்த 100 புள்ளிகள் மதிப்பீட்டில், 74 புள்ளிகளுடன் செயல் திறனில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில், முன்னோடியாக உள்ளது.

பெண்கள், குழந்தைகள் மற்றும் மூத்த குடிமக்களின் முழுமையான முன்னேற்றத்தை உறுதி செய்திட நலத் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் மூலம் நிலையான வளர்ச்சி இலக்குகள் அடைவதை இத்துறை உறுதி செய்கிறது.

## அத்தியாயம்-7

# சமூகப் பாதுகாப்பு ஓய்வுதியத் திட்டங்கள்

### 7.1 சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

தமிழ்நாடு அரசு, சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களான மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதை கடந்த ஆதரவற்ற திருமணமாகாத ஏழைப் பெண்கள் ஆகியோர் நலனில் அக்கறை கொண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தற்போது சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் தகுதியுள்ள அனைத்து பயனாளிகளுக்கும் மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1000/- வழங்கப்பட்டு வருகிறது. 2022-23-ஆம் ஆண்டில் ஓய்வூதியத் திட்டங்களுக்கு ரூ. 4807.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31.03.2022 அன்று உள்ள



பதிவுகளின்படி, **34,52,758** பயனாளிகள் கீழ்காணும் திட்டங்களின் மூலம் பயன்பெற்று வருகின்றனர். அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | திட்டங்களின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை (31-03-2022 வரை) |
|---|---|---|
| 1 | இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம் | **14,60,159** |
| 2 | இந்திராகாந்தி தேசிய மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம் | **64,623** |
| 3 | இந்திராகாந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம் | **5,72,258** |
| 4 | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | **3,52,697** |
| 5 | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | **5,69,789** |
| 6 | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் | **2,82,974** |
| 7 | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | **12,03,89** |

| வ. எண் | திட்டங்களின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை (31-03-2022 வரை) |
|---|---|---|
| **8** | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | **25,486** |
| **9** | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம். | **4,383** |
| | மொத்தம் | **34,52,758** |



## ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படும் நிதி பங்கீடு

| **வ. எண்.** | **திட்டத்தின் பெயர்** | **ஒன்றிய அரசின் பங்கீடு ரூ** | **மாநில அரசின் பங்கீடு ரூ** |
|---|---|---|---|
| 1 | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத்திட்டம் | 200/- | 800/- |
| | | 500/- | 500/- |
| 2 | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 300/- | 700/- |
| 3 | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 300/- | 700/- |
| 4 | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | - | 1000/- |
| 5 | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | - | 1000/- |
| 6 | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம். | - | 1000/- |
| 7 | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | - | 1000/- |
| 8 | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | - | 1000/- |
| 9 | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் | - | 1000/- |

**தகுதிகள்**

தேசிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் செயல்படுத்தப்படும் மூன்று ஓய்வூதியத் திட்டங்களில் ஓய்வூதியம் பெற நிபந்தனைகள் பின்வருமாறு:–

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதி / நிபந்தனைகள் |
|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத்திட்டம் | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்<br>வயது – 60 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |
| 2 | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும். வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்.<br>வயது – 40 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |
| 3 | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்<br>வயது – 18 மற்றும் அதற்கு மேல்<br>ஊனம் நிலை – 80 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |



தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன்பெற பின்வரும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:–

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதி / நிபந்தனைகள் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | வேலையற்றவராக இருத்தல் வேண்டும். தனியார் மற்றும் சுயவேலையில் இருப்பின் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். வயது – 18 மற்றும் அதற்கு மேல் ஊனம் நிலை – 40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல். |
| 2. | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும்.வயது – 18 மற்றும் அதற்கு மேல் அசையா சொத்து ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது) |
| 3. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம். | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>வயது –60 மற்றும் அதற்கு மேல்<br>நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும். |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதி / நிபந்தனைகள் |
|---|---|---|
| | | அசையா சொத்து ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது) |
| 4. | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதிய திட்டம் | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வயது -30 மற்றும் அதற்கு மேல் சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவு சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அசையா சொத்து ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்(மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது) |
| 5. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் | ஆதரவற்ற திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும். வயது -50 மற்றும் அதற்கு மேல் அசையா சொத்து ரூ.1,00,000/-க்கு |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதி / நிபந்தனைகள் |
|---|---|---|
| | பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | மிகாமல் இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது) |

## 7.2 சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் வழங்கப்படும் ஓய்வூதியத்தை பெற இணையதளம் மூலம் விண்ணப்பித்தல்

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் எந்தவொரு திட்டத்திலும் ஓய்வூதியம் பெற விரும்புவோர் இணைய வழியில் சமர்ப்பிக்க ஏதுவாக எளிய ஒரு பக்க வடிவமைப்பை வருவாய்த்துறை செயல்படுத்தியுள்ளது. இவ்விண்ணப்பம் சம்பந்தப்பட்ட வருவாய் அலுவலர்களுக்கு கணினி மூலம் சரிபார்ப்புக்காக அனுப்பப்படும். சரிபார்ப்புக்குப் பிறகு தகுதியுள்ள மனுக்கள் உயர் அலுவலர்களின் ஆய்வு

மற்றும் ஓய்வூதிய ஆணை பெறுவதற்கு அனுப்பப்படும். தகுதியுள்ள மனுதாரருக்கு வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலமாக ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

**ஓய்வூதியதாரர்களுக்கு இதர பயன்கள்**

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகைகளின் போது, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறும் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது.

பயனாளிகள் கீழ்காணும் விதிமுறைகளின்படி சன்னரக அரிசியை இலவசமாக பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்:–

அ) குழந்தைகள் மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் 4 கிலோ சன்னரக அரிசியும்



ஆ) குழந்தைகள் மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ சன்னரக அரிசியும் வழங்கப்படுகிறது.

**பி.கீதா ஜீவன்**

**சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை**

**அமைச்சர்**

## இணைப்பு – 1

### சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை கடைபிடிக்கப்படும் முக்கியமான நாட்களின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஜனவரி 24 | தேசிய பெண் குழந்தைகள் தினம் |
| 2. | பிப்ரவரி 24 | மாநில பெண்குழந்தைகள் பாதுகாப்பு தினம் |
| 3. | மார்ச் 8 | சர்வதேச மகளிர் தினம் |
| 4. | ஏப்ரல் 15 | திருநங்கையர் தினம் |
| 5. | ஜூன் 12 | குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் |
| 6. | ஜூன் 15 | முதியோர்களுக்குஎதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம் |
| 7. | அக்டோபர் 1 | சர்வதேச முதியோர் தினம் |
| 8. | நவம்பர் 14 | குழந்தைகள் தினம் |
| 9. | நவம்பர் 20 | சர்வதேச குழந்தை உரிமைகள் தினம் |
| 10. | நவம்பர் 25 | சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினம் |
| 11. | நவம்பர் 26 | வரதட்சணை எதிர்ப்பு தினம் |



## இணைப்பு – 2

### வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு – 2022–2023

### மானியக் கோரிக்கை எண்.45
### சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

2022–2023–ஆம் ஆண்டிற்கான
வரவு–செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு
**ரூ.5,922.40 கோடி**

| 2022–2023–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | |
|---|---|---|
| கணக்குத் தலைப்பு | | (ரூ. இலட்சத்தில்) |
| வருவாய் பகுதி | | ஒதுக்கீடு |
| 2059 | பொதுப் பணிகள் | 262.56 |
| 2225 | சமூக நல இயக்ககம் | 12.42 |
| 2235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 18,960.06 |
| 2235 | சமூக நல இயக்ககம் | 1,13,383.04 |
| 2235 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 15,653.30 |
| 2236 | தலைமைச் செயலகம் | 39.35 |
| 2236 | சமூக நல இயக்ககம் | 1,87,995.80 |
| 2236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 2,49,702.77 |

| 2022–2023–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | |
|---|---|---|
| **கணக்குத் தலைப்பு** | | **(ரூ. இலட்சத்தில்)** |
| **வருவாய் பகுதி** | | **ஒதுக்கீடு** |
| 2251 | தலைமைச் செயலகம் | 786.16 |
| 2551 | சமூக நல இயக்ககம் | -- |
| **வருவாய் பகுதி மொத்தம்** | | 5,86,795.46 |
| **மூலதனப் பகுதி** | | |
| 4235 | சமூக நல இயக்ககம் | 0.02 |
| 4235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 556.02 |
| 4236 | சமூக நல இயக்ககம் | 0.02 |
| 4236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 4,848.00 |
| **மூலதனப் பகுதி மொத்தம்** | | 5,404.06 |
| **கடன் பகுதி** | | |
| 7610 | அரசு பணியாளர்களுக்கான கடன்கள் | 40.01 |
| **கடன் பகுதி மொத்தம்** | | 40.01 |
| **முழு மொத்தம்** | | **5,92,239.53** |



**முழு மொத்தம்**

**(ரூ. இலட்சத்தில்)**

| | | |
|---|---|---|
| வருவாய் பகுதி | : | 5,86,795.46 |
| மூலதனப் பகுதி | : | 5,404.06 |
| கடன் பகுதி | : | 40.01 |
| மொத்தம் | : | **5,92,239.53** |
| | | **அல்லது** |
| | | **5,992.40 கோடி** |

2022–2023–ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண்.41–ன் கீழ் ரூ.4,807.56 கோடி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

******

# சேவைகள்

**மகளிர் உதவி எண்**

181

(இணையதளம்: https://tn181whl.org/)

(https://www.facebook.com/181Tamilnadu/)

(https://twitter.com/whl181)

(https://www.youtube.com/channel/)

(UCQ7_mJrhmhZNa4YfDXRrYfQ)

(www.instagram.com/whl181tn/)

******

**மகளிர் உதவி எண்**
**(குடும்ப வன்முறைக்காக)**

1091

******



**குழந்தைகள் உதவி எண்**

1098

******

**மாணவர்களுக்கான தேர்வு உதவி எண்**

14417

******

**முதியோர் உதவி எண்**

14567

******

**இணையதள குற்றத் தடுப்பு எண்**

1930

******

**காவல் உதவி செயலி**

**(குழந்தைகள், பெண்கள், முதியோர்களுக்கான அவசர தேவைக்கான செயலி)**



**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாதவரம் நெடுஞ்சாலை செயின்ட் மேரிஸ் பள்ளிக்கு அருகில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையத்தை திறந்து வைத்து குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார் (20.09.2021)**




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமூகப் பாதுகாப்பு இயக்ககத்தின் மூலம் நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.2,000/- வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார் (20.11.2021)



**மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு நடத்தினார் (11.10.2021)**




**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அலுவலகங்களில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 15 அரசு பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கினார் (20.11.2021)**




மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற வரைவு மாநில மகளிர் கொள்கை உருவாக்குதல் தொடர்பான முதலாவது ஆலோசனை கருத்தரங்கம் (12.08.2021)




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தின் புதிய அலுவல்சாரா உறுப்பினர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றனர் (18.10.2021)




**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார் (25.10.2021)**




**மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் குழந்தைகள் மற்றும் பெண்களிடையே ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் இரத்த சோகை குறித்து எடுத்துரைக்கும் ஊடக கருத்தரங்கம் மற்றும் குறும்பட வெளியீடு (06.12.2021)**




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டில் குழந்தைகள் பாதுகாப்புடன் வாழவும் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் உரிமைகள் பெறவும்"தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021" வெளியிடப்பட்டது (20.11.2021)




மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்கள் திருவான்மியூர் குழந்தைகள் மையத்தில் உள்ள 0–6 வயது வரையுள்ள குழந்தைகளின் எடை, உயரம் உள்ளிட்ட வளர்ச்சியை கண்காணிக்க உருவாக்கப்பட்ட செயலியில் பதிவேற்றம் செய்யும் பணியினை ஆய்வு செய்தார் (21.03.2022)

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.